


வல்லாதிக்க நாடுகளும் தமிழ்த்தேசியக் கட்சிகளும்

அ.நிக்ஸன்

பக்கம் 07

பக்கங்கள்: 20

THEEMPUNAL
# தீம்புனல்
வாராந்தப் பத்திரிகை



தீந்தமிழன் @ prabha

பக்கம் 18

தீ : 01 புனல்:44 26.02.2022 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# எல்லை மீறிய ரஷ்யா


வர்மா

## உக்ரைனின் தலைநகர் கீவ் இல் ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்திப் போரை ஆரம்பித்தது.



வெள்ளிக்கிழமை உள்ளூர் நேரப்படி அதிகாலை 4 மணியளவில் உக்ரைன் தலைநகர் கீவ் கடுமையான குண்டுத் தாக்குதலுக்கு உள்ளானது, ரஷ்ய ஏவுகணைகளும் ஹெலிகளும் உக்ரைனின் வான் எல்லையை ஆக்கிரமித்தன. உக்ரைனின் இராணுவ மையங்களைக் குறிவைத்து ரஷ்யா தாக்குதல்களை நடத்தியது. ரஷ்யாவின் படைப் பலத்துக்கு முன்னால் உக்ரைனின் படை நிலைத்து நிற்க முடியாது. ரஷ்யாவின் ஹெலிகளும் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக உக்ரைன் அறிவித்தது. ரஷ்ய வீரர்கள் சிலர் சிறைப் பிடிக்கப் பட்டதாகவும் உக்ரைன் தெரிவித்தது.

ஒரு ஏவுகணை நகரின் பாதுகாப்பு அமைப்புகளால் இடைமறிக்கப்பட்டது, ஆனால், மற்றொன்று குடியிருப்பு கட்டடத்தை தாக்கியது என்று உக்ரைன் அரசாங்கம் கூறியது. உக்ரைனிய sv7 ஜெட் விமானம், தரையிலிருந்து வான் ஏவுகணை மூலம் தலைநகருக்கு மேல் சுட்டு வீழ்த்தப்பட்டது என்று சி.என்.என் தெரிவித்தது. ரஷ்ய இராணுவத்தின் பிடியில் கீவ் வீழ்ந்துவிடும் என்றும், ஒரு வாரத்திற்குள் அரசாங்கம் கவிழும் என்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.




ரஷ்யப் படைகள் செர்னோபிலின் அளவுக் கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளன, அணு உலையின் முன்னிறுத்தப்பட்டிருக்கும் டாங்கிகளை வீடியோ வெளிப்படுத்துகிறது.

அணுக்கழிவு சேமிப்பு வசதிகள் ‘தெரியாது’ என்ற நிலையில் ‘கடுமையான’ போருக்குப் பிறகு வந்தது, உக்ரைன் கூறியது.

இதற்கிடையில், நேட்டோ-உறுப்பினரான துருக்கி தனது கப்பல்களில் ஒன்று ஒடெசா அருகே ‘வெடிகுண்டு’ மூலம் தாக்கப்பட்டதாகக் கூறியது - கூட்டணி எளிதில் மோதலில் சிக்கி, ஐரோப்பாவில் முழுப் போரைத் தூண்டிவிடும் என்ற அச்சத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ரஷ்யா விரைவில் நகரின் மீது குண்டு வீசும் என்று அரசாங்கம் எச்சரித்ததை அடுத்து, கீவேவில் உள்ள குடிமக்கள் தங்குமிடங்களுக்கு விரைந்துள்ளனர்.



உக்ரைனின் தலைநகரில் இருந்து மக்கள் வெளியேறத் தொடங்கிவிட்டனர். கையில் கிடைத்தவற்றை அள்ளிக் கொண்டு செல்பவர்களின் வாகனங்கள் சாலையை நிறைத்துள்ளன. யுத்தம் ஆரம்பிக்கும் என உலக நாடுகள் தெரிவித்தன. ரஷ்யாவை அமைதிப்படுத்துவதற்கு உலகத் தலைவர்கள் கடும் முயற்சி செய்தனர். யுத்தத்தால் உலக நாடுகள் அடையப்போகும் துன்பங்கள் பற்றி கவலைப் படாத புடின் தாக்குதலுக்கு உத்தரவிட்டார். ஆப்கானின் தாக்குதலை நடத்திய பின்னர் மூன்று தசாப்தங்களுக்கு மேல் யுத்தம் செய்வதைப் பற்றி யோசிக்காத ரஷ்யா உக்ரைனைத் தாக்கத் தொடங்கிவிட்டது.

ஆப்கானை மீட்கப் படைகளை அனுப்பியமை ஈராக், ஈரான் ஆகிய நாடுகள் மீதான தாக்குதல், குவைத்தை விடுவிக்க படைகளை அனுப்பியமை போன்ற சம்பவங்களால் யுத்தம் செய்த அமெரிக்கா இப்போது எந்த நாட்டையும் ஆக்கிரமிப்பதில்லை என முடிவெடுத்துள்ளது. யுத்தம் செய்து தனது படைப்பலத்தை உலகுக்கு வெளிக்காட்டாத ரஷ்யா உக்ரைமீது தாக்குதலை ஆரம்பித்துள்ளது. ■

# அசைக்க முடியாத தலைவராக உருவெடுத்த ஸ்டாலின்

சிலம்பு

கருணாநிதி, ஜெயலலிதா ஆகிய இரண்டு முது பெரும் அரசியல்வாதிகளின் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி பெற்று அசைக்க முடியாத தலைவராக ஸ்டாலின் உருவெடுத்துள்ளார். கண்ணுக் கெட்டிய தூரத்தில் எதிர்க் கட்சிகளைக் காணவில்லை என ஜெயலலிதா அன்று சொன்னது, இன்று ஸ்டாலினின் அரசியல் வாழ்வில் உண்மையாகி உள்ளது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளையும் தி.மு.க கைப்பற்றியது, அ.தி.மு.கவின் கோட்டையாக இருந்த கொங்கு மண்டலத்தையும் தி.மு.க கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளூராட்சி தேர்தலில் 60.70 சதவீதம் வாக்குகள் பதிவான நிலையில், வெற்றி வாய்ப்பு யாருக்கு என மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்து வந்த நிலையில், தி.மு.க மகத்தான வெற்றி பெற்றுள்ளது.

தமிழக உள்ளூராட்சி நகர்ப்புறத் தேர்தல் கடந்த வாரம் நடைபெற்றது. திராவிட முன்னேற்றக் கழகம் கூட்டணிக் கட்சிகளுடன் கைகோர்த்து தேர்தலைச் சந்தித்தது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்திருந்த பாட்டாளி மக்கள் கட்சி தேர்தலுக்கு முன்னரே வெளியேறிவிட்டது. கூட்டணிப் பேச்சு வார்த்தை குழம்பியதால் பாரதீய ஜனதாக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. இரட்டைத் தலைமைப் பிரச்சினையால் துவண்டிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றரைக் கோடித் தொண்டர்களை நம்பிக் களம் இறங்கி அவமானப்பட்டது.

தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 21 மாநகராட்சிகளையும் தி.மு.க கைப் பற்றியது. சென்னை மாநகராட்சியில் மொத்தம் உள்ள 200 வார்டுகளில் தி.மு.க 153, அ.தி.மு.க 15, தி.மு.க கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் 13, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 4, விடுதலை சிறுத்தைகள் கட்சி 4, ம.தி.மு.க 2, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 1, பா.ஜ.க 1, அ.ம.மு.க 1, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி 1 வார்டு என தங்கள் வெற்றிகளைப் பதிவு செய்தன. அத்துடன் சுயேட்சை வேட்பாளர்கள் 5 இடங்களில் வெற்றி பெற்றனர்.

இந்நிலையில், அ.தி.மு.கவின் கோட்டையாக இருந்த கொங்கு மண்டலத்தையும் தி.மு.க கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்தது. அங்குள்ள பெரும்பாலான இடங்களில் தி.மு.க வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 138 நகராட்சிகளில் தி.மு.க 132 இடங்களையும், அ.தி.மு.க 3 இடங்களையும், மற்றைய கட்சிகள் 3 இடங்களையும் கைப்பற்றின. அதே போல், 489 பேரூராட்சிகளில் தி.மு.க 435 இடங்களையும், அ.தி.மு.க 15 இடங்களையும், பா.ஜ.க 5 இடங்களையும், மற்றைய கட்சிகள் 25 இடங்களையும் பிடித்தன.

2011 இல் நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க அன்று இருந்த 10 மாநகராட்சிகள் அனைத்தையும் கைப்பற்றி சாதனை படைத்தது. அப்போது, சென்னை, கோவை, மதுரை, திருச்சி, ஈரோடு, திருப்பூர், சேலம், வேலூர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகியவை மாநகராட்சிகளாக இருந்தன.

அதன் பின்னர், தமிழகத்தில் 11 மாநகராட்சிகள் கூடுதலாக உருவாக்கப்பட்டு தற்போது 21 மாநகராட்சிகள் இருக்கும் நிலையில், அனைத்து மாநகராட்சிகளையும் தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க கைப்பற்றிச் சாதனை படைத்துள்ளது.

இந்நிலையில், வெற்றி பெற்ற உறுப்பினர்கள் அனைவரும் மார்ச் 2 ஆம் திகதி பதவி ஏற்கவுள்ளனர். அதனைத் தொடர்ந்து மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சித் தலைவர், துணைத் தலைவர், பேரூராட்சித் தலைவர், ஆகிய பதவி இடங்களுக்கு மார்ச் 4 ஆம் திகதி மறைமுகத் தேர்தல் நடைபெறுகிறது. இந்தத் தேர்தலில் வார்டு உறுப்பினர்களாக வெற்றி பெற்றவர்கள் வாக்களிப்பார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 489 பேரூராட்சிகள் என மொத்தம் 649 நகர்ப்புற உள்ளூராட்சி அமைப்புகள் இருக்கின்றன. இவற்றில் மொத்தமாக உள்ள வார்டுகளின் எண்ணிக்கை 12,838 ஆகும். இந்த வார்டுகளுக்கான தேர்தல் ஒரே கட்டமாக கடந்த 19 ஆம் திகதி நடைபெற்றது. தமிழகத்தில் 60.7 சதவிகிதம் வாக்குகள் பதிவாகின. பேரூராட்சிகள், நகராட்சிகளில் வாக்குப்பதிவு சற்று அதிகமாக இருந்தாலும், மாநகரப் பகுதிகளில் மந்தமாகவே காணப்பட்டது. குறிப்பாக, சென்னையில் 50 சதவிகிதத்துக்கும் குறைவாகவே பதிவானது.

கொங்குமண்டலத்தில் பலம் வாய்ந்தது திராவிட முன்னேற்றக் கழகமா? அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமா? என்ற கேள்வி மறைந்து, செந்தில்பாலாஜியா? வேலுமணியா? என்ற கௌரவப் பிரச்சினை முன்னெடுக்கப்பட்டது. வேலுமணியின் கோட்டையில் அவரின் செல்வாக்கை உடைத் தெறிந்து வெற்றிக் கொடி நாட்டினார் செந்தில் பாலாஜி. வேலுமணி, பன்னீர்ச்செல்வம், எடப்பாடி பழனிச்சாமி ஆகியோரின் சொந்த வார்டுகளில் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். சில இடங்களில் சுமார் 50 வருடங்களாகத் தோல்வியில் துவண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று மகிழ்ச்சியில் திளைத்தது.

தமக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் திருப்தி இல்லாமல் போட்டியிட்ட திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக் கட்சிகள் கணிசமான வெற்றியைப் பெற்றன. தேர்தலில் போட்டியிடுவதற்கு கட்சி சந்தர்ப்பம் கொடுக்காததனால் செல்வாக்குள்ள சிலர் சுயேட்சையாகப் போட்டியிட்டனர். அதிகளவான சுயேட்சைகளும் கட்சிகளும் தேர்தல் களத்தில் குதித்ததனால் எதிர்பார்க்காத வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். கழகக் கட்டுப்பாட்டை மீறி சுயேட்சையாக வேட்பு மனுத் தாக்கல் செய்த 111 உறுப்பினர்களைத் திராவிட முன்னேற்றக் கழகம் உடனடியாகத் தற்காலிகமாக கட்சியில் இருந்து வெளியேற்றியது. இதே போன்ற நடவடிக்கையை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் எடுத்தது.

உள்ளூராட்சித் தேர்தல் கட்சியின் செல்வாக்கு மிக்கவர்களுக்கானது. கட்சியின் செல்வாக்கு அங்கு பின்னுக்குத் தள்ளப்பட்டு தனி நபர் முன்னிலை பெறுவார். திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் சில இடங்களில் பலத்த போட்டி இருக்கும் எனக் கருதப்பட்டது. ஆனால், போட்டி இல்லாமலே திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றது. மூன்றாவது இடத்தில் காங்கிரஸ் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையிலேதான் போட்டி என அண்ணாமலை சொன்னது புஸ்வானமாகிப் போனது.

கமல், சீமான், விஜயின் மக்கள் இயக்கம் என்பனவற்றின் வெற்றி சொல்லும்படியாக இல்லை.

சில வேட்பாளர்களுக்கு ஒருவாக்கும் விழவில்லை. சிலர் ஒரே ஒரு வாக்கு மட்டும் பெற்றனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்களும் உண்டு. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரும், பாரதீய ஜனதா வேட்பாளரும் சமமாக வாக்குப் பெற்றதால் குலுக்கல் முறையில் பாரதீய ஜனதா வேட்பாளர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

வெற்றி பெற்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணையும் சம்பவங்களும் அரங்கேறுகின்றன. தமிழகத்தில் நடைபெற்ற ஊரக உள்ளூராட்சித் தேர்தலில் சிவகங்கை நகராட்சியில் பெரும்பான்மையான இடங்களை தி.மு.க கைப்பற்றியுள்ளது. இந்நிலையில், நகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்ற அ.தி.மு.க மற்றும் சுயேட்சை வேட்பாளர்கள் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைத்தனர்.

> **“கண்ணுக்கெட்டிய தூரத்தில் எதிரிகள் இல்லை என்று ஜெயலலிதா அன்று சொன்னார். இன்று உண்மையிலேயே ஸ்டாலினின் கண்ணுக்கெட்டிய தூரத்தில் அரசியல் எதிரிகள் யாரையும் காணவில்லை.”**

சிவகங்கை நகராட்சி 4 ஆவது வார்டில் வெற்றி பெற்ற சுயேட்சை வேட்பாளர் சேதுநாச்சியார் வீரகாளை, 19 வார்டில் வெற்றி பெற்ற சுயேட்சை வேட்பாளர் பாக்கியலட்சுமி விஜயகுமார் மற்றும் 22 ஆவது வார்டில் வெற்றி பெற்ற அ.தி.மு.க வேட்பாளர் சரவணன் ஆகிய 3 பேரும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் கே.ஆர் பெரியகருப்பன் முன்னிலையில் தி.மு.க வில் இணைத்தனர்.

அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை சுய பரிசோதனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பன்னீரும் எடப்பாடியும் இன்னொருவர் மீது இன்னொருவர் குற்றம் சுமத்தும் காரியத்தைக் கைவிட வேண்டும். பாரதீய ஜனதாவின் பிடி இறுகியுள்ளது. இந்த வெற்றி அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. யாரும் எட்ட முடியாத உயரத்தில் ஸ்டாலின் இருக்கிறார்.



"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.lk
news@theempunal.com
THEEMPUNAL தீம்புனல்

# உக்ரைனை ஆக்கிரமித்து அறைகூவல் விடுத்தது ரஷ்யா

ரஷ்ய- உக்ரைன் எல்லையில் ஏற்பட்ட பிரச்சினை உலகளாவிய ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும் என உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்தன. ஆனால், ரஷ்ய - உக்ரைனை ஆக்கிரமித்து உலக நாடுகளுக்குத் தன் பலத்தை வெளிக்காட்டியது. அமெரிக்காவுக்கு நிகரான உலக வல்லரசாகிய ரஷ்யா தன் அருகில் இருக்கும் உக்ரைனைத் தாக்கத் தொடங்கி உள்ளது. ரஷ்யாவின் கைப்பொம்மையாக இருந்த உக்ரைன் மேற்குலகின் பக்கம் சாயத் தொடங்கியதன் விளைவே இந்தத் தாக்குதல்.

உக்ரைனில் இருக்கும் ரஷ்ய மொழி பேசுபவர்களின் ஜனநாயகக்குரலை உக்ரைன் நசுக்குவதாக ரஷ்யா குற்றம் சாட்டியுள்ளது. ரஷ்யாவில் உண்மையான ஜனநாயகம் இருக்கிறதா? என யாரும் கேள்வி கேட்கக்கூடாது. சுமார் 30 வருடங்களாக புடினின் ஆட்சி தொடர்கிறது. எதிர்க் கட்சித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதலை ஆரம்பித்துள்ளது.

உலகளாவிய போருக்கு இத்தாக்குதல் ஆரம்பமோ என்ற அச்சம் உள்ளது. உக்ரைனுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் நாடுகள் தமது இராணுவத்தை உடனடியாக அனுப்பும் சாத்தியம் இல்லை. ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடையால் ரஷ்யா எவ்வளவு தூரம் பாதிக்கப்படும் என்பதை அறுதியிட்டுக் கூற முடியாது. ரஷ்யாவுடன் பாதுகாப்பு, வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொண்ட நாடுகளுக்குப் பாதிப்பு உண்டாகும். இதனால், வளர்முக நாடுகள் அதிகம் பாதிக்கப்படப்போகின்றன. ரஷ்யா தாக்குதலை ஆரம்பிக்கப் போகிறது என்ற செய்திகள் வெளியானதும் முதல் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்தது.

இயற்கை எரிவாயு, கச்சா பெற்றோலிய எண்ணெய் ஆகியன ரஷ்யாவில் தாராளமாகக் கிடைக்கின்றன. யுத்தம் நடப்பதால் எரிபொருளுக்காக ரஷ்யாவை நம்பி இருக்கும் நாடுகள் தட்டுப்பாட்டை எதிர் நோக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகள் ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளன. ரஷ்ய தூதரகங்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. புடினின் இராணுவ நடவடிக்கைக்கு எதிராக ரஷ்யாவிலும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன.

பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கலாம் என்பதே உலக நாடுகளின் விருப்பம். உலகத் தலைவர்கள் பலர் ரஷ்யாவுக்குச் சென்று போரை நிறுத்துவதற்காக புடினுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அமெரிக்க ஜனாதிபதி பைடனும் புடினுடன் கதைத்து பேச்சு வார்த்தை நடத்தும்படி வலியுறுத்தினார். யாருடைய பேச்சையும் கேட்காது தாக்குதலுக்கு உத்தரவிட்டார் புடின்.

அமெரிக்காவினதும் மேற்கு உலகினதும் பிடிக்குள் உக்ரைன் வீழ்ந்து விடக்கூடாது என்பதே புடினின் நோக்கம். பேச்சு வார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் உக்ரைனுக்கு வாய்ப்பாகப் போய்விடும். அதனால்தான் மிக அவசரமாகத் தாக்குதலை ஆரம்பித்துள்ளார் புடின்.

எது நடந்துவிடக்கூடாது என்று உலக நாடுகள் அஞ்சிக் கொண்டிருந்ததோ, நடக்கத் தொடங்கி விட்டது. உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா கடும் போர் தொடுத்துவிட்டது. கிழக்கு ஐரோப்பாவிலுள்ள நாடு உக்ரைன். பரப்பளவில் ரஷ்யாவுக்கு அடுத்த இடத்தில் உள்ளது. இதன் மக்கள்தொகை 4.41 கோடி, தலைநகரம் கீவ், 1991 ஆம் ஆண்டு சோவியத்யூனியன் சிதறுண்டபோது, அதில் ஒரு அங்கமாக இருந்த உக்ரைன், தன்னைச் சுதந்திர நாடாக அறிவித்துக் கொண்டது. இதன் கிழக்கிலும் வடகிழக்கிலும் ரஷ்ய நாட்டு எல்லை இருக்கிறது. வடக்கில் பெலாரஸ், மேற்கில் போலந்து, சுலோவாக்கியா, ஹங்கேரி போன்ற நாடுகளும் தெற்கே மால்டோவா, ருமேனியா நாடுகளும் உள்ளன.

உக்ரைன் நாட்டில் 30 சதவீதம் பேர் ரஷ்யமொழி பேசுபவர்கள் என்பதால், அங்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் இருந்துவிடக்கூடாது என்பதிலும் ஐரோப்பிய யூனியனிலுள்ள 27 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட 'நேட்டோ' அமைப்பில் உக்ரைன் சேர்க்கப்படக்கூடாது என்பதிலும் ரஷ்யா உறுதியாக உள்ளது. உக்ரைனை நேட்டோவுடன் இணைக்கக்கூடாது என்பது ரஷ்யாவின் முடிவு. நேட்டோவுடன் உக்ரைன் இணைந்தால் அது தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என ரஷ்யா கருதுகிறது.

உக்ரைனில் உள்ள வெளிநாட்டினரையும் அங்கு கல்வி கற்கும் மாணவர்களையும் உடனடியாக மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெளிநாடுகளுக்குச் சுற்றுலாசென்ற உக்ரைனியர்கள் தாய்நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தாக்குதல் ஆரம்பித்த ஒரு சில நிமிடங்களுக்குள் பங்குச் சந்தை சரிந்து விட்டது. தங்கத்தின் விலை உயர்ந்து விட்டது. ரஷ்ய நாட்டின் பணமான ரூபிளின் மதிப்பு 9 சதவீதம் சரிந்துவிட்டது. கச்சா எண்ணெய் விலையும் ஒரு பீப்பாய்க்கு 100 டொலரைத் தாண்டிவிட்டது. இதனால், விலைவாசியும் உயரும் அபாயம் இருக்கிறது. உலகின் பல நாடுகளில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. இப்போதைக்கு இது உலகப்போராக மாற வாய்ப்புக் குறைவு உடனடியாக உக்ரைன் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர ஐ.நா. சபையும் உலக நாடுகளும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். ■

# ரஷ்யாவின் அத்துமீறலுக்கு எதிர்ப்பும் ஆதரவும்

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதலை பல நாடுகள் கடுமையாக எதிர்த்துள்ளன. சில நாடுகள் ரஷ்யாவின் பக்கம் நிற்கின்றன. இன்னும் சில நாடுகள் மௌனமாக நடப்பதைப் பார்த்துக்கொண்டிருக்கின்றன.

நேட்டோவின் மிகவும் சக்திவாய்ந்த உறுப்பினர் என்ற அடிப்படையில், உக்ரைன் விவகாரத்தில் அடுத்து என்ன நடக்கும் என்பது அமெரிக்கா கையிலேயே உள்ளது. உக்ரைன் நேட்டோ உறுப்பினராகக் கூடாது என்ற ரஷ்யாவின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்து இருந்தது. ரஷ்யா தனது போரை ஆரம்பிக்க இதுவும் ஒரு முக்கிய காரணமாக இருந்தது. ரஷ்யா நடவடிக்கைக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, உக்ரைனுக்கு அதிநவீன ஆயுதங்களை அனுப்பத் தொடங்கியுள்ளது. இது தொடர்பாக உக்ரைன் ஜனாதிபதி வோலோடி மிர் ஜெலென்ஸ்கியுடன் பேசிய பைடன், அத்தனைக்கும் ரஷ்யாதான் பொறுப்பேற்க வேண்டும் என்றும் ரஷ்யா மீது கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

அதேபோல பிரிட்டனும் ரஷ்யாவைக் கடுமையாக எதிர்த்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்புதான், போரினால் அதிக மனித இழப்புகளைச் சந்திக்க நேரிடும் எனப் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் எச்சரிக்கை விடுத்திருந்தார். உக்ரைன் நாட்டுக்குப் போர் விமானங்கள், போர்க்கப்பல்களை அப்பகுதிக்கு அனுப்பப் பிரிட்டன் திட்டமிட்டுள்ளது. ரஷ்யப் பிரதமர் புடின் அழிவின் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ள தாகத் தெரிவித்த பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன், தக்க பதிலடி கொடுக்கப்படும் என்றும் எச்சரித் துள்ளார். மேலும், சில கடுமையான பொருளாதாரத் தடைகளையும் அவர் அறிவித்துள்ளார்.

இந்த விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் முதன்மையான நாடான ஜேர்மனி மிகவும் எச்சரிக்கையான அணுகுமுறையைக் கையாண்டுள்ளது. ஏனெனில் ஜேர்மனியின் தற்போதைய ஜனாதிபதி ஓலாஃப் ஷால்ஸின் சமூக ஜனநாயகக் கட்சி பாரம்பரியமாக ரஷ்யாவுடன் நல்லுறவை வளர்த்து வருகின்றனர். ஐரோப்பாவின் மிகப்பெரிய பொருளாதாரமாகக் கருதப்படும் ஜேர்மனி சமீபத்தில்தான் ரஷ்யாவுடன் வர்த்தகம் மற்றும் ஆற்றல் உறவுகளை விரிவுபடுத்தியது. இப்போது



ரஷ்யா போரைத் தொடங்கி உள்ள நிலையில், இந்தப் பணிகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ள ஜேர்மனி, இந்த ஒப்பந்தம் குறித்து மீண்டும் ஆலோசனை செய்து வருகிறது.

ஐரோப்பிய ஒன்றியம் உக்ரைன் மீதான போருக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. ரஷ்ய நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயன், இந்த இருண்ட காலத்தில் உக்ரைனில் மக்களுக்காகப் பிரார்த்தனை செய்வதாகத் தெரிவித்துள்ளார். மேலும், நடைபெறும் பேரழிவுக்கு ரஷ்யாவை பொறுப்பேற்க வைக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்பார்த்தபடியே ரஷ்யாவின் நடவடிக்கையைச் சீனா எதிர்க்கவில்லை. மேலும், ரஷ்யா மீது சட்ட விரோதமாகப் பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கூடாது என எதிர்த்துள்ள சீனா, உக்ரைனில் பதற்றம் அதிகரிக்க அமெரிக்காவே காரணம் எனக் குற்றம் சாட்டியது, அதே நேரத்தில் அமைதியான முறையில் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளது. சொல்லப்போனால் இந்த விவகாரத்தில் சீனா நடுநிலையான நிலைப்பாட்டையே எடுக்க முயன்றுள்ளது. அது ரஷ்யாவின் போர் நடவடிக்கையை ஆதரிக்கவில்லை. அதேநேரம் வழக்கம் போல இதற்குக் காரணம் அமெரிக்காதான் என்றும் சாடியுள்ள முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளான பல் கேரியா, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா, ருமேனியா, ஸ்லோவாக்கியா மற்றும் ஸ்லோவேனியா ஆகியவை 2004 இல் நேட்டோ உறுப்பினர்களாகின. இந்த அனைத்து நாடுகளும் உக்ரைனில் ரஷ்யாவின் நடவடிக்கைகளைக் கடுமையாக எதிர்த்துள்ளன.

பாகிஸ்தான் இதில் தொடர்ந்து அமைதி காத்து வருகிறது. பெல்ஜியம் ரஷ்யாவின் தாக்குதலை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஐரோப்பாவின் வரலாற்றில் இருண்ட காலம் எனக் குறிப்பிட்டுள்ளது. அதேபோல செக் குடியரசு, ரஷ்யத் தாக்குதலைக் காட்டுமிராண்டித்தனமான செயல் என்று எச்சரித்ததுடன், நட்பு நாடுகளுடன் இணைந்து பதிலடி கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது. ரஷ்யாவுடன் நெருக்கமான உறவை வைத்திருந்த ஹங்கேரி கூட இதில் வெளிப்படையாக ரஷ்யாவின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.

அதேநேரம் சில நாடுகள் ரஷ்யாவை வெளிப்படையாகவே ஆதரித்துள்ளன. சிரியாவில் கடந்த 2011 இல் உள்நாட்டுப் போர் தொடங்கியது முதல் ரஷ்ய ஜனாதிபதி புடின், சிரிய அரசுக்குத் தேவையான உதவிகளைச் செய்து வருகிறார். எனவே, எதிர்பார்த்தபடி ரஷ்யா நடவடிக்கைக்கு சிரியா ஆதரவு தெரிவித்துள்ளது. அதேபோல வெனிசுலாவும் ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. மேலும், கிழக்கு உக்ரைனில் உள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பிராந்தியங்களும் ரஷ்யாவை ஆதரித்துள்ளன. உக்ரைன் நாட்டில் கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் பகுதிகளை ரஷ்யா மட்டுமே மக்கள் குடியரசாக அங்கீகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. ■

# மலையக மக்களுக்கான ஆவணம் அவர்களுக்கு விடிவைத் தேடித்தருமா?



பிதாமகன்

இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பில் இந்தியப் பிரதமருக்கு மட்டுமல்ல அமெரிக்க ஜனாதிபதிக்குக் கடிதங்களோ ஆவணங்களோ அனுப்பினாலும் அது ஓர் அனுதாபத்தோடு மட்டுமே பார்க்கப்படுமே ஒழிய எவரும் அடுத்த விமானம் பிடித்து இலங்கைக்கு வந்து இறங்கிவிட மாட்டார்கள். ஏனென்றால் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் தத்தமது பிரச்சினைகளைப் பார்ப்பதற்கே இச்சூழலில் நேரமில்லாத போது இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளா முக்கியம்?

வடக்குக் கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆறு கட்சிகளும் இந்தியப் பிரதமருக்குக் கடிதங்களை அனுப்பிவிட்டன. அதில் இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரச்சினைகள் உள்ளடக்கப்படவில்லையென்று கடிதத்தில் கையெழுத்திடாமல் பேச்சு வார்த்தை மேசையிலிருந்து விலகி வந்து தற்போது மலையகச் சமூகத்துக்காக ஒரு வரைபைத் தயாரித்திருக்கின்றார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் எம்.பியுமான மனோகணேசன்.

இதற்கு மலையகச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிவில் அமைப்புகளும் தமது பங்களிப்பை வழங்கியிருந்தன. ஆனால், இந்தச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இதில் பங்கெடுக்கவில்லை. ஏனென்றால் இதற்கு அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆரம்பத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து பேச்சு நடத்திய போது, அழைத்தால் நாமும் வருவோம் என்று தூது அனுப்பிப் பார்த்தார் ஜீவன் தொண்டமான். அவரை எவரும் கண்டு கொள்ளவில்லை. அதற்குக் காரணம் தற்போது மலையகத்தில் அவருக்கு வாக்களித்தவர்களே அவரைக் கண்டு கொள்வதில்லை என்பதாகும்.

இந்நிலையில் மலையக மக்கள் குறித்து ஆவணம் அல்லாத வரைபை இந்தியப் பிரதமருக்கு மட்டுமின்றி அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், இலங்கை ஜனாதிபதி, இந்திய ஜனாதிபதி உட்பட சர்வதேசத்துக்கும் அனுப்பப் போவதாகக் கைகளால் படம் கீறி அக்ஷன் போட்டுப் பேசும் மனோ எம்.பி தனது முகநூல் பக்கத்தில் தொடர்ச்சியாகப் பதிவேற்றி வருகிறார்.

> **இந்தியாவின் தமிழகம் உட்பட சில மாநிலங்களில் அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களையே இந்தியா கண்டு கொள்ளாமல் இருக்கும் போது, கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களையா கண்டு கொள்ளப் போகின்றது? ஏதோ தொப்பூழ் கொடி உறவு என்று அழைக்கின்றார்களே என சில வீடுகளைக் கட்டிக்கொடுக்க நிதி உதவி செய்ததைத் தவிர இலங்கையில் வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்குத் தமிழர்களினதும் மத்திய மலைப்பிரதேசங்களில் வாழ்ந்து வரக்கூடிய மலையகத் தமிழர்களினதும் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் இந்தியா என்றுமே வாய் திறந்ததில்லை. 87 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இந்தியாதான் முன்னின்று செய்தது. மாகாணசபை முறை உருவாக அந்த ஒப்பந்தம்தான் காரணம் என்றாலும் அதை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கை கடந்த 38 வருடங்களாகத் தனது இறைமையைப் பயன்படுத்தி காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நிறுத்தி வைத்துள்ளது. அதற்கு இந்தியா எவ்வித அழுத்தங்களையும் இது வரை பிரயோகிக்கவில்லை.**

இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் பிரித்தானியாவுக்கு ஒரு விடயத்தை அழுத்திக் கூறப்போகின்றாராம். அதாவது காலனித்துவ காலத்தில் தோட்டத்தொழிலாளர்களைத் தமிழகத்தின் தென்னிந்தியக் கிராமங்களிலிருந்து கொண்டு வந்தது பிரித்தானிய அரசாங்கம் என்பதால், தற்போது தொழிலாளர்களின் இந்த நிலைமைக்கும் அவர்களும் பொறுப்பேற்க வேண்டுமாம். அப்படியானால் பிரித்தானியப் பட்டத்து இளவரசர் சார்ள்ஸை வரச் சொல்லி அவரைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பாக பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடக் கூறலாமே? எதற்கு இங்குள்ளவர்கள் இந்த மக்களின் வாக்குகளைப்பெற வேண்டும்?

சில நேரங்களில் மனோகணேசன் எம்.பி உணர்ச்சி வசப்பட்டு உளறி விடுவார். பின்னர் தன்னைத் தானே நொந்து கொள்வார். இன்னும் இவர் பக்குவப்பட்ட அரசியல்வாதியாக மாறவில்லையென்பது அவரது முகநூல் உளறல்களே எடுத்துக்காட்டும். ஆனால், கூட்டணியில் அங்கம் வகிக்கும் மலையக மக்கள் முன்னணியின் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் பி. திகாம்பரம் ஆகியோர் எந்த நேரத்தில் எதை எவ்வாறு பேச வேண்டும் எனத் தெரிந்து வைத்துள்ளனர். அநாவசியமாக எதையும் கதைப்பதற்கு முயற்சிக்க மாட்டார். சரி இப்போது விடயத்துக்கு வருவோம்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி தயாரித்திருக்கும் வரைபை, மனோகணேசன் யாருக்கு அனுப்பினாலும் அவரது எதிர்பார்ப்பு இந்தியா மட்டுமே. ஏனென்றால் வடக்கு தமிழ் பேசும் கட்சிகள் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக்கோரியே கடிதத்தை அனுப்பி வைத்துள்ளன. அதனால் தமிழர்களுக்கு என்ன தீர்வு கிடைக்கும் என்பது பற்றியெல்லாம் எவரும் கேள்வி கேட்கக் கூடாது. இதற்குத் தனது முற்று முழுதான எதிர்ப்பை வெளிப்படுத்திய கஜேந்திரகுமார் பொன்னம்பலமோ தமிழ்க் கட்சிகள் இந்தியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதத்தை மீண்டும் திருப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று போராட்டம் நடத்துகிறார். ஆனால் 13 எமக்குத் தேவையில்லை என்று கூறும் அவரும் தமிழ் மக்களுக்கு என்ன தீர்வைக் கொண்டிருக்கிறார் என்பது பற்றிப் பேச மறுக்கிறார்.

இப்படி வடக்கில் தமிழ்க்கட்சிகளுக்கிடையில் இந்தக் கடிதம் குறித்த முரண்கள் மேலோங்கி நிற்கையில், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கு இந்தியா நிச்சயம் உதவிவிடும் என்று மனோகணேசன் எதிர்பார்த்தால் அதை விட முட்டாள்த்தனம் இருக்க முடியாது. பல்வேறு காரணங்களுக்காக இந்தியாவின் தமிழகம் உட்பட சில மாநிலங்களில் அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களையே இந்தியா கண்டு கொள்ளாமல் இருக்கும் போது, கடல் கடந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களையா கண்டு கொள்ளப்போகின்றது? ஏதோ தொப்பூழ் கொடி உறவு என்று அழைக்கின்றார்களே என சில வீடுகளைக் கட்டிக்கொடுக்க நிதி உதவி செய்ததைத் தவிர இலங்கையில் வாழ்ந்து வரும் வடக்குக் கிழக்குத் தமிழர்களினதும் மத்திய மலைப் பிரதேசங்களில் வாழ்ந்து வரக்கூடிய மலையகத் தமிழர்களினதும் அரசியல் அபிலாஷைகள் தொடர்பில் இந்தியா என்றுமே வாய் திறந்ததில்லை. 87 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை இந்தியாதான் முன்னின்று செய்தது. மாகாண சபை முறை உருவாக அந்த ஒப்பந்தம்தான் காரணம் என்றாலும் அதை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இலங்கை கடந்த 38 வருடங்களாக தனது இறைமையைப் பயன்படுத்தி, காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நிறுத்தி வைத்துள்ளது.

அதற்கு இந்தியா எவ்வித அழுத்தங்களையும் இதுவரை பிரயோகிக்கவில்லை. அதற்குக் காரணம் பின் வந்த அரசியல் சூழ்நிலைகளும் இந்தியா எதிர்ப்பாராத சீனாவின் பிராந்திய ஆதிக்க வளர்ச்சியுமே. எங்கே இலங்கையைக் கொஞ்சம் அதிகமாக மிரட்டினால் சீனாவின் பக்கம் சாய்ந்து விடுமோ என்ற அச்சம் இந்தியாவுக்கு உள்ளது. இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களில் இலங்கையை தளமாகக் கொண்டே இந்தியா, சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தமக்குள் பல்லாங்குழி ஆடிக்கொண்டிருக்கின்றன. இதில் இலங்கையில் வாழ்ந்து வரக்கூடிய சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் எல்லாம் ஆறிய கஞ்சியாகவே உள்ளன.

பூகோள அரசியலை நன்றாகப் புரிந்து வைத்திருக்கும் வடக்கு தமிழ்க்கட்சித் தலைவர்கள் காலத்துக்குக் காலம் எப்படியெல்லாம் தமிழ் மக்களை ஏமாற்றி காலம் கடத்தி வருகின்றனர் என்பதற்கு இந்தக் கடிதங்கள், ஆவணங்கள், கையொப்பங்களே சாட்சி. ஆகவே அவர்கள் அப்படி நடந்தால் மலையக மக்களை மட்டும் சும்மா விட்டு விடுவார்களா அங்குள்ள தலைவர்கள்? ஏதோ எதிர்த்தரப்பில் இருந்தோம் பாராளுமன்றில் கைகளை வீசி எதையவாது பேசினோம் என்பது மட்டும் போதாது. ஆகையால்தான் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் அரசியல் வரைபைத் தயாரித்துள்ளது.

அடுத்ததாக, முஸ்லிம் காங்கிரஸ் நிச்சயமாக இந்த விவகாரங்களை எல்லாம் தலையில் தூக்கி வைக்காது. ஏனென்றால் அவர்கள் தமது மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆவணம் தயாரித்தால் அதைப் பாகிஸ்தான் பிரதமர் இம்ரானிடமோ அல்லது சவுதி மன்னரிடமோ தான் போய்க் கொடுக்க வேண்டும். ஏனென்றால் வடக்குக் கட்சிகளும் மலையகக் கட்சிகளும்தான் முந்திக்கொண்டனரே. இறுதியாகச் சென்று கடிதம் கொடுத்தால் நரேந்திரமோடி கோபித்துக்கொள்வாரே? எதிர்த்தரப்பில் முஸ்லிம் கட்சிகள் பல இருந்தாலும் அதில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என இருவர் மட்டுமே உள்ளனர். ரவூப் ஹக்கிம் மற்றும் ரிசாத் பதியுதீன் ஆகிய இருவர் மட்டுமே அவர்கள். மற்றையவர்கள் இவர்களுடன் இருந்தாலும் ஆளும் அரசாங்கத்துக்கு ஆதரவாகக் கைகளைத் தூக்குபவர்களாவே உள்ளனர். இவர்களை நம்பியா இருவரும் கடிதம் தயாரிக்க முடியும்? எது எப்படியோ இந்தக் கடித விவகாரம் எல்லாம் கேலிக்கூத்தான விடயங்கள். குறித்த காலத்துக்குத் தமிழர்களை ஏமாற்ற ஏதாவது செய்ய வேண்டுமே என்ற கவலைதான் தமிழ்க் கட்சித் தலைவர்களுக்கு உள்ளதே தவிர பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு காணும் தலைவர்கள் இன்று தமிழர்கள் மத்தியில் இல்லை. தந்தை செல்வா சொன்னது போன்று இவர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும். அதையும் உரத்துக்கூற அச்சமாகத்தான் உள்ளது. ஏனென்றால் கடவுளுக்கும் பிறகு கடிதம் எழுதத்தொடங்கி விடுவார்கள்.

■

**“ஒரு காலத்தில், தமிழரசுக்கட்சியின் பிதாமகர் தந்தை செல்வநாயகம், இலங்கையில் பதவிக்கு வந்த நீல- பச்சைக் கட்சித்தலைவர்களுடன் ( பண்டாரநாயக்க - டட்லி சேனநாயக்க ) ஒப்பந்தம் செய்து, அவற்றை நடைமுறைப்படுத்த முடியாத சூழல் வந்ததும் “இனிமேல் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்” என்றார். தற்போது, 2019 ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அநியாயமான முறையில் கொல்லப்பட்டவர்களுக்கும் அச்சம்பவங்களினால் உடல் - உளப் பாதிப்படைந்தவர்களுக்கும் இதுவரையில் நீதி கிடைக்காதிருப்பதை அவதானிக்கும் போது, இயேசு பிரான் சிலுவையில் அறையப்பட்டபோது சொன்ன வாசகங்கள்தான் நினைவுக்கு வருகின்றன.”**

# என் தேவனே... என் தேவனே... ஏன் என்னைக் கைவிட்டீர்..?

— அவதானி

இயேசு கிறிஸ்து ஆறுமணி நேரம் சிலுவையில் தொங்கினார். முதல் மூன்று மணி நேரங்கள் அவர் ரோம வீரர்களாலும் மற்றவர்களாலும் அடிக்கப்பட்டு, இழிவாகப் பேசப்பட்டு, எள்ளி நகையாடப்பட்டார், வேதனைகளை அனுபவித்தார். அவற்றை எல்லாம் பொறுத்துக் கொண்டார். ஆறாம் மணி நேரம் முதல், ஒன்பதாம் மணி நேரம் வரைக்கும் பூமியை இருள் சூழ்ந்து கொண்டது. அந்த ஒன்பதாம் மணி நேரத்தில் இயேசு: “ஏலி! ஏலி! லாமா சபக்தானி” என்று உரத்துச் சத்தமிட்டுக் கூப்பிட்டார்! அதற்கு “ என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்..? “ என்று அர்த்தம்.

குறிப்பிட்ட குரலின் வரிகளை நாம் பரிசுத்த வேதாகமத்தில் படித்திருப்போம். ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் வரும் பெரியவெள்ளி (Good Friday) தினத்தில் தேவாலயங்கள் சென்று வழிபட்ட மக்கள், இயேசுபிரான் உயிர்த்த ஞாயிறு தினத்தில் காலையிலேயே அங்கு மீண்டும் வந்து பிரார்த்தித்துவிட்டு, சம்மனசுகள் புடைசூழ இயேசுவின் திருச்சொரூபம் பவனிவரும் காட்சியைக் கண்டுகளிப்பார்கள். வழக்கமாக உலகெங்கும் நடக்கும் இந்த நிகழ்வு, இலங்கையில் கடந்த 2019 ஆம் ஆண்டு முதல், கடந்த 2021 ஆம் ஆண்டுவரையில் பெரும் துயரமாகவே அனுஷ்டிக்கப்பட்டது.

இவ்வருடமும் அத்தகைய துயர நாளைத்தான் நாம் கடக்கவிருக்கின்றோம். எனினும், குறிப்பிட்ட ஈஸ்டர் தினம் வரும்போதெல்லாம் அனைத்து மக்களுக்கும் அவர்களை அறியாமலேயே பதட்டம் தொற்றிவிடுகிறது.


ஒரு காலத்தில், தமிழரசுக் கட்சியின் பிதாமகர் தந்தை செல்வநாயகம், இலங்கையில் பதவிக்கு வந்த நீல - பச்சைக் கட்சித்தலைவர்களுடன் (பண்டாரநாயக்க - டட்லி சேனநாயக்க) ஒப்பந்தம் செய்து, அவற்றை நடைமுறைப்படுத்த முடியாத சூழல் வந்ததும், “ இனிமேல் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்” என்றார்.

தற்போது, 2019 ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக அநியாயமான முறையில் கொல்லப்பட்டவர்களுக்கும் அச்சம்பவங்களினால் உடல் - உளப்பாதிப்படைந்தவர்களுக்கும் இதுவரையில் நீதி கிடைக்காதிருப்பதை அவதானிக்கும்போது, இயேசுபிரான் சிலுவையில் அறையப்பட்டபோது சொன்ன வாசகங்கள்தான் நினைவுக்கு வருகின்றன.

கத்தோலிக்கப் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, இலங்கையில் நடந்த கொடுமைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்து, நீதியின் முன்னால் அரசு நிறுத்தும் என்ற நம்பிக்கையை இழந்த நிலையில் கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

ஈஸ்டர் தாக்குதல் சம்பவம் கடந்த மைத்திரி - ரணில் நல்லாட்சிக் காலத்தில் நடந்தது. அதனைச் சுட்டிக்காண்பித்தே ராஜபக்ஷ சகோதரர்கள் தேர்தல் பிரசாரங்கள் மேற்கொண்டு, “2009 இல் பயங்கரவாதத்தை முறியடித்தவர்கள் நாங்களே, தாம் பதவியிலிருந்திருந்தால், ஈஸ்டர் தாக்குதல் நடந்திருக்காது” எனச்சொல்லிச் சொல்லியே தமது வாக்கு வங்கியை பெருக்கிப் பதவிகளுக்கு வந்தனர்.





முன்னைய அரசு காலத்திலும் இன்றைய அரசு காலத்திலும் நீதிவிசாரணை என்ற பெயரில், இதுவரையில், நீதியரசர் விஜித் நல்லகொட தலைமையில் நடந்த விசாரணையில் வெளியான அறிக்கை, பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை, தேசிய பாதுகாப்பு குறித்து, பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவின் அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை, இந்த அறிக்கைகளை ஆராய்வதற்காக அமைக்கப்பட்ட அமைச்சரவையின் அறிக்கை, என்பன தயாரிக்கப்பட்டன.

ஆனால், இதுவரையில் உண்மையான குற்றவாளிகள் நீதியின் முன்னால் நிறுத்தப்படவில்லை. இது இவ்விதமிருக்க, அரசும் சட்டமா அதிபர் திணைக்களமும் நடத்தப்பட்ட விசாரணைகளில் பல சாட்சியங்களை மறைத்து விட்டிருப்பதாகப் பேராயர் மல்கம் ரஞ்சித் பகிரங்கமாகக் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் சட்டமா அதிபர் அரசியல்வாதிகளின் கையாளாக செயற்படக் கூடாது எனவும் இடித்துரைத்திருக்கிறார்.

அவரை இதற்கு முன்னர் சந்தித்த அரசுத் தலைவர்கள் வழங்கிய உறுதிமொழிகளும் காற்றில் பறந்துவிட்டன.

இத்தகைய செய்திகளின் பின்னணியில் அண்மையில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி அமைக்கப்பட்டுள்ள ஆயர்கள், பாதிரியார்கள், மற்றும் வழக்கறிஞர்கள் இணைந்திருக்கும் தேசியக்குழுவும் அரசின் அசமந்தப் போக்கைச் சுட்டிக்காண்பித்து கண்டனம் தெரிவித்துள்ளது.

இவ்வேளையில், தேசிய கத்தோலிக்க தொடர்பாடல் ஆணைக்குழுவினால் அண்மையில் தித்த (முற்றுப் புள்ளி) என்ற நூலும் இப்பதிவில் மேலே சொல்லப்பட்ட விசாரணை அறிக்கைகளை உள்ளடக்கி வெளியாகியுள்ளது.

இந்த நூலின் பின்புற அட்டையில் ஒரு பௌத்த மதகுரு குறிப்புகளை எழுதியுள்ளார்.

இத்தருணத்தில் மற்றும் ஒரு புதிய செய்தியையும் இங்கு தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

உலக அரங்கில் மட்டுமல்ல, எமது உள்நாட்டு அரங்கிலும் பரபரப்பூட்டும் சம்பவங்கள் நடக்கும் பட்சத்தில், அச்சம்பவங்களை பின்னணியாக வைத்து கதைகள், நாவல்கள் எழுதப்பட்டிருப்பதை அறிவோம். அத்துடன் திரைப்படங்களும் வெளியாகியிருக்கின்றன.

இம்மாதம் தமிழ்நாட்டில் F I R என்ற திரைப்படம் வெளியாகியிருக்கிறது. இதனை, தமிழக முதல்வர் ஸ்டாலினின் புதல்வரும் தற்போது தமிழக சட்டசபையில் உறுப்பினராகியிருப்பவருமான நடிகர் உதயநிதி ஸ்டாலின் தயாரித்துள்ளார்.

விஷ்ணுவிஷால், கௌதம் வாசு தேவமேனன் நடித்துள்ள இந்தத் திரைப்படம் கடந்த 2019 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலைப் பின்னணியாக வைத்து எடுக்கப்பட்டுள்ளது.

சர்வதேசரீதியாக நன்கு அறியப்பட்ட பயங்கரவாத இயக்கத்தையும் பேசுபொருளாக்கியிருக்கும் இத்திரைப்படத்தின் இறுதிக்காட்சிகளில் இந்தியப்பிரதமர் மோடியின் பாத்திரத்திலும் ஒருவர் நடித்திருக்கிறார்.

கொழும்பு கொச்சிக்கடை அந்தோனியார் கோயில், நட்சத்திர விடுதிகளில் நடந்த தாக்குதல் சம்பவக் காட்சிகளையும் காண்பித்து குறிப்பிட்ட F I R திரைப்படத்தை எடுத்து, பணம் பண்ணிவிட்டார்கள்.


இத்திரைப்படம் சில நாடுகளில் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் தாக்குதலுக்குப்பின்னர், இத்தனை சம்பவங்கள் நடந்துவிட்டன.

ஆனால், அன்று காரணமின்றி உயிரிழந்தவர்களுக்கும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதிதான் கிடைக்கவில்லை.

அதனால், அம்மக்களின் உணர்வுகளை மாத்திரம் அல்ல, ஆண்டகை பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களின் ஆதங்கத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

அதனால்தான், “ தேவனே தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்” என்று கேட்கத் தோன்றுகிறது.



# சரிந்து கொண்டிருக்கும் ஒரு சரித்திரம் 10

## அற்புத ஆசிரியப் பெருந்தகைகளும் பழைய மாணவர் சங்கங்களும்!

திருநாவுக்கரசு தயந்தன்
மூத்த பொறியியலாளர்

எண்ணிக்கையில் சிறுபான்மைச் சமூகமாக இருந்தாலும் சாதிப்பதில் பெரும்பான்மையாக இருந்த சரித்திரங்களைக் கொண்டிருந்த சமூகம் எங்களுடையது! ஆனால் பல்வேறு உள்ளக வெளியக அரசியல், பொருளாதார, சமூகக் காரணிகளால் எங்கள் சமூகத்தின் கல்விச் சரித்திரங்கள் சரிந்து வருவது வெளிப்படை உண்மை! உண்மைகளை உணர்ந்து ஒன்றுபட்டு உழைத்தால் மீண்டும் பல சாதனை, சரித்திரங்களைப் படைக்க முடியும் என்ற நம்பிக்கையில் பல்வேறு காரணிகளை யதார்த்தமாக ஆராய்வதோடு நடைமுறைச்சாத்தியமான பரிந்துரைகளையும் தேவையான மாற்றங்களையும் விவாதிக்க இருக்கிறது இந்தக் கட்டுரைத் தொடர்! சுயவிருப்பு வெறுப்புகளைப் புறந்தள்ளி, நடுநிலைமையுடன் தொடரை வாசிக்குமாறும் பொருத்தமான களப்பணிகளிலும் செயற்பாடுகளிலும் இணையுமாறும் வாசகர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்!

-ஆசிரியர்

அத்தியாயம் - 08

**பகுதி - 01**

தமிழர் பிரதேசங்களில் கல்விக்கான புதிய புரட்சி உருவாகி பல்வேறு தளங்களில் பேசு பொருளாகியதோடு மட்டுமின்றி பல இடங்களில் செயல் வடிவமும் பெற ஆரம்பித்துவிட்டது.

எனது கட்டுரைத் தொடரின் அத்தியாயம் 4 இல் பரிந்துரைக்கப்பட்ட அணுகு முறைகள் பல இடங்களில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்ததுடன், அதே எண்ணக்கருவுடன் இருந்த பலர் இதை எப்படியாவது செய்தாக வேண்டும் ஆனால், எப்படி நடைமுறைச் சாத்தியமாக்குவது என்று ஆலோசனை கூறுங்கள் எனத் தங்கள் கருத்துகளுடன் தொடர்பு கொண்டும் இருந்தனர். அவர்களின் கருத்துகளையும் கேள்விகளையும் உள்வாங்கி இலவச கிராமியப் படிப்பகங்கள்/கல்வி நிலையங்களின்/ பாடசாலைக் கண்காணிப்புக் குழு/ கிராமிய கல்வி மேம்பாட்டுக் குழு அல்லது ஆலோசனை சபை உருவாக்கத்திற்காக பௌதீக/ மனித வளங்களை எங்கிருந்து/ எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் எனச் சற்று ஆழமாக ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்கள் என இருவேறு தளங்களில் அலசுகிறது இந்தக் கட்டுரை.

**1. ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்!**

பல பெறுமதி மிக்க சொத்துகளை மிக அருகில் வைத்துக் கொண்டே வேறு வளங்களைத் தேடிக் கொண்டிருப்பவர்கள் நாங்கள்! வடமாகாண ஆசிரியர் வளத்தை ஆராய்ந்த போது 1,8267 ஆசிரியர்கள் எங்கள் வடமாகாணக் கல்வித்துறையில் இருக்கிறார்கள்! அவர்களிலே இந்த வருடம் 230 ஆசிரியர்கள் ஓய்வு பெற இருக்கிறீர்கள்! கடந்தவருடம் இன்னொரு 270 ஆசிரியர்கள் ஓய்வுபெற்றுள்ளீர்கள்! அதாவது 500 வளம் மிக்க/ அனுபவம் மிக்க ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுள்ளீர்கள்! கிழக்கு மாகாணத்தையும் சேர்த்தால் கிட்டத்தட்ட 1100 ஆசிரியர்கள்! நீங்கள் யாரென்று உங்களுக்குத் தெரியுமா? சுட்ட தங்கங்கள்! அதாவது இன்று ஓய்வு பெற்றுக் கொண்டிருக்கும் நீங்கள் எண்பதுகளின் இறுதியில் இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் ஈழப் போர் உக்கிரமாக ஆரம்பித்த வேளையில் கல்வித்துறையில் இளம் ஆசிரியர்களாக நுழைந்தவர்கள்! மொத்த போர்க் காலத்திலும் பணி புரிந்தவர்கள்! குடிசை வீடுகளில் இருந்து கொண்டு குப்பி விளக்குகளில் படிக்கும் மாணவர்களுக்குக் கற்பித்து கல்வி என்ற சொத்தை அளித்து இன்றைய கல்விமான்களாக உருவாக்கியவர்கள்! தினம் தினம் இடப் பெயர்வுகள்! உங்கள் பிள்ளைகளை ஊரான் திண்ணையில் இருத்திவிட்டுத் திண்ணைகளிலும், திடல்களிலும் இடம்பெயர்ந்து இயங்கிய பல பாடசாலைகளில் என் போன்ற பல மாணவர்களுக்குக் கல்வி புகட்டியவர்கள்! உங்கள் கற்பித்தல்களுக்கு குண்டுச் சத்தங்கள் பின்னணி இசை வழங்கியிருந்த காலத்திலும் உங்கள் குரல்கள்தான் கல்வியை எங்கள் மூளைகளில் பதிப்பித்தது!

**எத்தனை வகுப்புகளை வேப்பமர நிழல்களில் சருகுகள் மழையாகக் கொட்டும் போது நடாத்தி முடித்திருப்பீர்கள்? நீங்கள் பார்க்காத கஷ்டங்களையா இன்று எங்கள் சமூகம் பார்க்கின்றது? நீங்கள் உருவாக்கியவர்கள்தானே நாங்கள்! நாங்கள்! இன்றைய சமூகம்! நாங்கள் ஒன்றும் வானத்தில் இருந்து குதிக்கவில்லையே! இன்று எங்கள் கல்விச் சரித்திரங்கள் சரிந்து கொண்டிருப்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? உங்கள் மீதிக்காலத்தை இந்தச் சரிவுகளைப் பார்த்துக் கொண்டே கழிக்கப் போகிறீர்களா?**



எத்தனை வகுப்புகளை வேப்பமர நிழல்களில் சருகுகள் மழையாகக் கொட்டும் போது நடாத்தி முடித்திருப்பீர்கள்? நீங்கள் பார்க்காத கஷ்டங்களையா இன்று எங்கள் சமூகம் பார்க்கின்றது? நீங்கள் உருவாக்கியவர்கள்தானே நாங்கள்! இன்றைய சமூகம்! நாங்கள் ஒன்றும் வானத்தில் இருந்து குதிக்கவில்லையே! இன்று எங்கள் கல்விச் சரித்திரங்கள் சரிந்து கொண்டிருப்பது உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? உங்கள் மீதிக்காலத்தை இந்தச் சரிவுகளைப் பார்த்துக் கொண்டே கழிக்கப் போகிறீர்களா? எண்பதுகளில் இருந்து தொண்ணூறுகளின் இறுதிவரையும் அத்தோடு 2009 வரை வன்னியிலும் கற்பித்த ஆசிரியர்களை விட மகத்தான சொத்துக்களை நான் காணவில்லை! இனிக் காணப்போவதும் இல்லை!



உங்கள் உடலுக்கு வயது போய் விட்டது என்று உலகம் சொல்கிறதே அன்றி, உங்கள் அறிவுக்கும் உள உறுதிக்கும் வயது போய்விடவில்லை! எங்கள் நாட்டில் உள்ள நடைமுறையில்தான் 60 வயதுடன் ஓய்வு பெற்று வீட்டில் சும்மா இருக்க வேண்டிய நிலை உள்ளது. அதனால்தான் துடி துடிப்பான வேலையே சடுதியாக நிறுத்தியதன் விளைவுகள் பலரை பல்வேறு நோய் நொடிகளுக்குள் தள்ளி விடுகிறது. புள்ளிவிபரங்களைப் பாருங்கள்! ஓய்வு பெற்றவுடன் பலருக்கு நோய்கள் தொற்றிக் கொள்கின்றன! இது உடலால் வந்த தொய்வு அல்ல! உங்கள் உழைக்கும் மன உறுதி குலைந்ததன் விளைவு! ஆனால், உலகநாடுகளில் இறுதி மூச்சுவரை நோய்நொடியற்று உறுதியாக உழைத்துக் கொண்டிருக்கும் பலரை நாங்கள் காண்கிறோம்! உங்களுக்குத் தெரிந்த உதாரணத்தையே கூறுகின்றேன்! இலங்கைக்கு முதன் முதலில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் வென்றவர் யார்? என்ற பொது அறிவுக் கேள்விக்கு நீங்கள் அத்தனை பேரும் நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் என்று பதில் எழுதியிருப்பீர்கள். அது நடந்தது 1958. டாக்டர் எதிர்வீரசிங்கம் கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்ற ஒரு முதுபெரும் கல்வியியலாளர். 86 வயதைக் கடந்த அவர் இன்று வரை எங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அயராது உழைத்துக் கொண்டிருக்கிறார்!

ஓய்வு பெறும் ஒவ்வொரு ஆசிரியரும் கல்விப் புரட்சிக்கான சமூக நடவடிக்கைகளில் உங்களை சில காலம் பகுதி நேரமாக இணைத்துக் கொள்ள முன் வந்தால் எங்கள் மாணவர்களின் கல்விப் பெறுதிகளை மீண்டும் சிகரங்களில் ஏற்றிவைக்கமுடியும்!

நீங்கள்தான், இந்த இலவசக் கல்வி நிலையங்களில் முக்கிய வளங்களாக வேண்டும்! பாடசாலை ஆலோசனை சபை/கண்காணிப்புக் குழுக்களை உருவாக்கி பயணிக்க வேண்டும். உங்களை விட அனுபவசாலிகளை நாம் எங்கு போய்த் தேடுவது! உங்கள் அனுபவமும் அறிவும் ஊரில் பின்தங்கி உள்ள ஒவ்வொரு மாணவனையும் சென்றடைய வேண்டும்! பின்தங்கிய ஒவ்வொரு மாணவனையும் வீடு வீடாகச் சென்று இலவசப் படிப்பகங்களுக்கு இழுத்து வந்து இருத்தி கல்வி போதிப்பது உங்களுக்கு ஒன்றும் புதிதல்லவே! உங்களால் முடியும். உங்கள் ஊர்களில் உள்ள சமூக ஆர்வலர்களை நீங்களே அணுகுங்கள்! நீங்கள் களப்பணிக்குத் தயாராக இருப்பதாகச் சொல்லுங்கள்! நீங்களே ஒரு இலவசப் படிப்பகத்தை உருவாக்குங்கள்! அது உங்கள் மீதி வாழ்நாட்காலத்தை மிக அழகாக்கும்! தினமும் சுறுசுறுப்பாக உணர்வீர்கள்! உங்கள் உயிரான மாணவர்களைத் தினமும் உங்கள் அருகில் இருத்திக் கொள்ளுங்கள்! கடந்த இரு வருடங்களில் மட்டும் 1,100 ஆசிரியர்கள் உள்ளீர்கள். கடந்து போன 3-4 வருடங்களையும் இனிவரும் வருடங்களையும் சேர்த்தால் 5,000-6,000 பெறுமதியான இலவசக் கல்வி நிலையங்களை இயக்குவதற்கான ஆசிரியவளம் உங்கள் அருகிலேயே இருக்கும்! ஆக பலர் கேட்ட மனித வளத்துக்குத் தீர்வு கொடுத்து விட்டேன்! ■



அ.நிக்ஸன்





# வல்லாதிக்க நாடுகளும் தமிழ்த்தேசியக் கட்சிகளும்

நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றபோது இணைத்தலைமை நாடுகள் ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடத்திய மாநாடுதான், விடுதலைப் புலிகள் பேச்சில் இருந்து வெளியேற்றப்படுவதற்குப் பிரதான காரணமாக இருந்தது.

அந்த மாநாடுதான் இலங்கை ஒற்றையாட்சி அரசுக்கும் வாய்ப்பாக இருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளும் இலங்கை அரசாங்கத்துக்கே சாதகமாகவும் இருந்தது என்பது வெளிப்படை. இவ்வாறானதொரு நிலையில், ஐக்கிய நாடுகள் முன்னாள் உதவிச் செயலாளர் சார்லஸ் பெட்ரி, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஐக்கிய நாடுகள் சபையை நம்ப வேண்டாமெனச் சமீபத்தில் கூறியிருக்கிறார்.

ஐரோப்பிய நாடொன்றில் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றில் அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அமெரிக்காவும் இந்தியாவும் உலகில் விடுதலை கோரிப் போராடும் தேசிய இனங்களின் பக்கம் நின்று செயற்பட்டதில்லை. இருப்பினும் தமது புவிசார் நன்நோக்கில் ஆதரவு கொடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.

ஆனால், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களின் போது இலங்கை ஒற்றையாட்சி அரசின் பக்கமே அமெரிக்க- இந்திய அரசுகள் நின்றிருந்தன.

ஈழத்தமிழ் மக்களின் அரசியல் விடுதலை தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்ற போதும் இலங்கை அரசாங்கத்தின் விட்டுக்கொடுக்காத செயற்பாடுகளினால் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தது.

> **அமெரிக்காவும் இந்தியாவும் உலகில் விடுதலை கோரிப் போராடும் தேசிய இனங்களின் பக்கம் நின்று செயற்பட்டதில்லை. இருப்பினும் தமது புவிசார் நலன் நோக்கில் ஆதரவு கொடுத்த சந்தர்ப்பங்களும் உண்டு.**


இந்த நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் உதவி பொது செயலாளரும் ஐக்கிய நாடுகள் குழுவின் முன்னாள் தலைவருமான சார்லஸ் பெட்ரி ஐக்கிய நாடுகள் சபை மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளும் மற்றும் ஐரோப்பிய நாடுகளும் இலங்கை அரசாங்கத்திற்குச் சாதகமான முறையில், செயற்பட்டதனால் ஈழத் தமிழர் அரசியல் விடுதலை குறித்த பேச்சுக்களை புறந்தள்ளியதாக தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் இலங்கை பாராளுமன்றத்தில் பல தடவைகள் கூறியிருந்தார்.

குறிப்பாக, பாராளுமன்றத்தில் பல தடவைகள் உரை நிகழ்த்திய இரா. சம்பந்தன் 2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்ற போது வழங்கிய வாக்குறுதிகளை அமெரிக்கா, இந்தியா போன்ற சர்வதேச நாடுகள் செயற்படுத்தாமல் ஏமாற்றி விட்டதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

இவ்வாறான ஒரு நிலையில், ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு ஐக்கிய நாடுகள் சபை தீர்வு வழங்கும் என நம்ப வேண்டாம் என்று ஐ.நாவின் முன்னாள் உதவி செயலாளர் சார்லஸ் பெட்ரி கூறியமை முக்கியமானதாகும்.

விடுதலைப் புலிகளை ஒழித்து போரையும் இல்லாது ஒழித்த பின்னர் ஈழத்தமிழருக்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் என அமெரிக்கா பிரித்தானியா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தூதுவர்கள் தன்னிடம் உறுதியளித்திருந்ததாக சம்பந்தன் பாராளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.



இதன் மூலம் போரை இல்லாது ஒழிப்பதிலேயே வல்லாதிக்க சக்திகள் கவனம் செலுத்தியிருக்கின்றன எனத் தெரிந்தது.



போர் முடிவடைந்து இன்று 12 ஆண்டு நிறைவடைந்த நிலையிலும் அரசியல் தீர்வு வழங்க வேண்டும் என்ற அழுத்தங்கள் எதுவும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கப்படவில்லை. ஜெனீவா மனித உரிமை சபையின் தீர்மானத்தைக் கூட இலங்கை புறந்தள்ளிய நிலையில் சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக இலங்கைக்கு உதவி வழங்கி வருகின்றன.

பாதுகாப்பு கொண்டு இலங்கை மக்களை தன் பக்கம் இழுப்பதற்கான கருவியாக மாத்திரமே ஈழத்தமிழர் விவகாரத்தை இந்தியா அமெரிக்கா போன்ற நாடுகள் கையாளுகின்றன.

மியன்மார் முஸ்லிம்கள் மீதான இனப்படுகொலை விவகாரத்திலும் அமெரிக்க இந்திய நாடுகள் இரட்டை முகம் காட்டுகின்றன. அதற்கேற்றவாறு ஐக்கிய நாடுகள் சபையும் செயற்படுவதாகவே அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, தேசிய விடுதலை கோரி போராடும் தேசிய இனங்களின் அரசியல் துறை சார்ந்த விடயங்களில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்தமைக்கு வல்லரசு நாடுகளின் ஒடுக்கு முறையே காரணம் என்பது முக்கியமானதொரு இராஜதந்திரி வெளியிட்ட கருத்தின் தொனி வெளிப்படுத்தியுள்ளது.

ஜெனீவா மனித உரிமைச் சபை அமர்வு ஆரம்பிக்கவுள்ள நிலையில் தமிழ்த்தேசியக் கட்சிகள் இது குறித்துச் சிந்திக்க வேண்டும். ■

## கீவ் நகரத்தை விட்டு வெளியேற மாட்டேன் – உக்ரைன் ஜனாதிபதி

உக்ரைன் தலைநகரை நோக்கி ரஷ்யப் படைகள் முன்னேறி வருவதாக, செய்திகள் வெளிவரும் நிலையில் கீவ் நகரத்தை விட்டு வெளியேறப்போவதில்லை என உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதி விளாடிமிர் ஜெலன்ஸ்கி வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியதாவது:

ஐரோப்பிய நாடுகளில் இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் மிகப்பெரிய தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

ரஷ்யா என்னை நம்பர் வன் இலக்காக வைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. எனது குடும்பம்தான் அவர்களின் இரண்டாவது இலக்கு. உக்ரைனின் தலைமையை அழித்து, அரசியல் ரீதியாகவும் உக்ரைனை அழிக்க அவர்கள் நினைக்கின்றனர்.

கீவ் நகருக்குள் நாசவேலைகளில் ஈடுபடும் குழுக்கள் நுழைந்துள்ளன என்ற தகவல் கிடைத்துள்ளது. அதனால், நகர மக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஊரடங்கு விதிகளை மதித்து நடந்து கொள்ளுங்கள்.

உக்ரைன் அரசு பணியாற்ற தேவையான அதிகாரிகள் உள்ளிட்ட நபர்களுடன் ஒன்றாக நான் அரசு இல்லத்தில் தங்கியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார். ■



# பெற்றோரிடமிருந்து பிள்ளைகளின் கற்றல் வெளிப்பாடு



சி.உதயகுமார்
BA.MA(Hons)PGDE,
DIP.in.Cinema

இன்றைய சிறுவர் உலகம் 'உலகமயமாதல்' எனும் வகைப்பாட்டிற்குள் கட்டுண்டிருக்கிறது.

ஆம், உள்ளங்கையில் வைத்து உலக விடயங்கள் யாவும் அறிந்துகொள்ளப்படுகின்றன. அந்தளவுக்கு விஞ்ஞான தொழில்நுட்பத்திறன் வளர்ச்சி பெற்று காணப்படுகிறது. இவற்றின் காரணமாக தொலைக் காட்சி, தொலைபேசி, இணையம், முகநூல் என்று அனைத்தும் சிறுவர் பாவனை ஊடகங்களாக மாறிவிட்டன.

கல்வி, கலாசாரம், பண்பாடு, அறிவியல், ஆன்மீகம் என்று பன்முக பயன்கள் இருக்கின்ற போது சிறுவர்கள் பலர் பொழுது போக்கான விடயங்களை மட்டும் தேடிப் பார்ப்பதில் அதிக அக்கறை காட்டுகின்றனர். சிறுவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டிய பெற்றோர்கள் பலர் தங்கள் பிள்ளைகளிடம் காட்டும் அக்கறை மிக மிகக் குறைவாக இருக்கின்றது. புள்ளிவிபரங்களும் இதனையே கூறுகின்றன.

ஒரு நாளைக்கு பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளோடு குறைந்தது ஒரு மணித்தியாலமாவது செலவிடவேண்டும். ஆனால், அப்படி யாரும் செலவிடுவதில்லை.

பிள்ளைகளுக்காகச் செலவிடும் அந்தநேரத்திலே, பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடலாம் அல்லது பொருத்தமான கதைகளையோ புதிர்க் கணக்குகளையோ சொல்லி பிள்ளைகளைச் சிந்திக்க வைக்கலாம் அல்லது தங்களுக்குத் தெரிந்த பாட அலகுகளை சொல்லிக் கொடுக்கலாம் அல்லது உலகில் நடைபெறுகின்ற விளையாட்டு, சினிமா, அரசியல் போன்ற விடயங்களை உரையாடலாம்.

இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு என்று சிறு நேரம் கூட ஒதுக்க மறுக்கின்றனர். பிள்ளைகளுக்கு வேண்டிய உணவு, உடை, அப்பியாசப் புத்தகங்கள், பேனை, பென்சில், விரும்பிய உணவு, பிரத்தியேக வகுப்புக்கட்டணம் இவற்றினை மட்டும் செய்து முடித்தால் போதும் என்று எண்ணுகின்றனர். பிள்ளைகளுக்கான சரியான அறிவுறுத்தலை வழங்கவும் உளசமநிலையினைப் பேணவும் மறுக்கின்றனர்.

இதற்காக சின்ன வகுப்பிலே, மலர் ரீச்சர் சொன்ன சின்னதொரு கதையை இதிலே சொல்கிறேன் கேளுங்கள். வானில் பறக்கும் கழுகுகளிடம் ஒரு பழக்கம் இருக்கிறது. அதாவது, கூட்டில் வைத்து குஞ்சு கழுகுக்கு தாய்க்கழுகு உரிய உணவு கொடுத்துப் பராமரிக்கிறது.

தன் குஞ்சுக்கழுகுக்கு சிறகுகள் முளைத்ததும் கூட்டின் விளிம்பிற்கு தன் பெரிய இறக்கைகளால் குஞ்சுகளை அடித்துத் தள்ளிக்கொண்டு வந்துவிடும், தாய்க் கழுகு.

மலை உயரத்தில் உள்ள மர உச்சியில் இருந்து முதல் முறையாக கழுகுக் குஞ்சு கீழே எட்டிப்பார்க்கும். பிறகு அண்ணாந்து மேலே பார்க்கும். அதன் கண்களுக்குத் தெரிவது என்னவோ அகண்ட பூமியும் விரிந்த வானமும்தான்.

அகண்ட பூமியையும் பரந்து விரிந்த வானத்தையும் பார்த்துவிட்டு குஞ்சுக்கழுகு மிரண்டு கொள்ளும்.

அவை பார்த்த அடுத்த கணமே, இந்தக் கூடுதான் எனக்குப் பாதுகாப்பு எனக் குஞ்சுக்கழுகு எண்ணும். ஆனால், தாய்க்கழுகு அக்குஞ்சுக் கழுகினை கூட்டிலிருந்து கீழே தள்ளிவிடும். எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலையும் குஞ்சுக்கழுகு உயிர் பிழைக்க இறக்கைகளை அடித்துக் கொள்ளும். அதனால், முழுமையாக பறக்க இயலாமல் அது கீழே சரிந்து விழுந்து கொண்டிருக்கும். அப்போது, அதை எதிர்பார்த்த தாய்க் கழுகு வேகமாய் கீழே விழுந்து கொண்டிருக்கும் தன் குஞ்சைத் தாங்கி உச்சிக்கு சுமந்து செல்லும்.

இப்படி மீண்டும் மீண்டும் கைவிட்டுக் கைவிட்டு கீழே விழுத்தி ஒரு பயிற்சியினைக் கொடுத்து கொண்டிருக்கும் தாய்க்கழுகு. பலமுறை பயிற்சியில் குஞ்சுக் கழுகின் இறக்கைகள் பலம் பெற்றுவிட அந்தப் பயிற்சியின் காரணமாக அது நாளடைவில் சுயமாய் பறக்கக் கற்றுவிடும்.

இனி இக்கதையினை எம் வாழ்வியலோடு ஒப்பிட்டுப்பார்ப்போம். அதாவது, நான் பட்ட கஷ்டம் என் பிள்ளைகள் படக்கூடாது எனும் சித்தாந்தம், பெற்றவர்களுக்கிடையில் இருந்து வருகின்றது.

பாசம் எனும் தோரணையிலும் பாதுகாப்பு எனும் மாயையிலும் சுகம் தருகிறோம் எனும் நமட்டான எண்ணத்தினாலும் பலவீட்டுச் சிறுவர்கள் வளர்க்கப் படுகின்றனர். ஆனாலும், எதிர்காலத்தில் அவர்கள் தாங்களாகவே தங்கள் கால்களில் சுயமாய் நிற்றல் பற்றிய திறனையும் சமூகம் பற்றிய நடத்தை மாற்றங்களையும் தெரிந்து கொள்ளாமல் போய் விடுகின்றனர்.

அந்தக்காலத்தில், ஒரு பெண் 12 வயதினை அடைந்துவிட்டால் அவளுக்கான கல்வியுடன், வீட்டினைப் பெருக்குதல், கிணற்றிலே தண்ணீர் எடுத்தல், சுவாமிப்படங்களுக்குப் பூ மற்றும் மாலை இடுதல், சமையலின்போது தேங்காய் துருவுதல், வெங்காயம் மற்றும் காய்கறிகள் வெட்டுதல், தேநீர் தயாரித்தல் போன்றவற்றைப் பழக்கப்படுத்தி வந்தனர்.

ஆனால், இவை எல்லாம் இன்றைய தாய்மார் தங்கள் பெண்பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்க மறந்துவிடுகிறார்கள். அதனால், இத்தகைய செயல்கள் யாவும் இன்று மருவிவிட்ட ஒன்றாகப் பார்க்கப்படுகின்றது. இச்செயல்களை பெண் பிள்ளைகள் விரும்பிச் செய்யப் போனாலும் "விடு பிள்ளை. நான் செய்யுறன்.." என்று சொல்லும் தாய்மார்களையே காண முடிகிறது.



அந்தக்காலத்தில் ஆண்பிள்ளைகள் தங்கள் தந்தைமார்களால் பல வேலைகள் செய்யும் ஆற்றலைப் பெற்று வளர்ந்ததையும் யாரும் அறிவார்கள். ஒரு மகன் மாலை 6 மணி தாண்டி வீட்டுக்கு வந்தால் அவனை அவ்வீட்டிலுள்ள தகப்பன் அல்லது தாய்மாமன் எச்சரிக்கைசெய்வார்.

"இவ்வளவு நேரமும் எங்கே போட்டு வாறாய்.. பொழுதுபட்டது தெரியேலையோ.." என்று எச்சரிக்கை நீளும். இன்றைய பெற்றோர்கள் பலர் தங்கள் பிள்ளைகள் தங்களை கேள்வி கேட்டு விடுவார்களோ என்று பயப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்களும் அப்படித்தானே நடந்து கொள்கின்றார்கள். தங்களைப்போல தங்கள் பிள்ளைகள் வந்துவிடுவார்கள். பிள்ளைகள் வளர்ந்தாப்பிறகாவது தங்கள் கூடாத நடத்தை மாற்றங்களை மாற்றிப் பழக வேண்டும் என்றும், தாங்கள் நல்ல நடத்தைகளைக் கொண்டிருந்தால்தான், பின்னவர்களும் நல்ல போக்கிலே வளர்வார்கள் என்றும் சிந்திப்பது மருவி போய் விட்டது. முன்னைய காலப் பெற்றோர்கள் போல இன்றைய கால பெற்றோர்கள் இல்லை என்பது மூத்த பிரஜைகள் பலரின் ஆதங்க மாகும்.

அதாவது, பிள்ளைகளுக்கென்று ஓர் எதிர்காலம் உண்டு என்பதைப் புதிய காலப் பெற்றோர்கள் பலர் மறந்து விடுகிறார்கள். தங்கள் சுய நலமான அற்ப ஆசைகளுக்காகப் பிள்ளைகளையும் அப்படியே விட்டுவிடுகிறார்கள் என்பது இன்றைய பெற்றோர்கள் விடும் மாபெரும் தவறாகும். இப்படி எல்லாப் பெற்றோர்களும் அல்லர் என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும்.

இவை எல்லாம், பெற்றோர்கள் தாங்களே தெரிந்து விடும் மிகப்பெரிய தவறுகளாகும். தற்காலத்தில் இந்த நிலைமைதான் அதிகமாக நடந்துகொண்டிருக்கின்றது. அதனால்தான், இவை சிறுவர்களிடம் மாத்திரம் உள்ள தவறுகள் என்று மட்டும் யாரும் சொல்லிவிடுவதில்லை. அவர்களின் கூடாத நடத்தைகளுக்குப் பெற்றோரே அடித்தளமிடுகின்றனர். "நான்பட்ட கஷ்ரம் என் பிள்ளைகள் படக்கூடாது" என்ற எண்ணமுடைய பெற்றோர்தான் அவற்றிற்கெல்லாம் காரணமாகின்றனர் என்பதையே திரும்பத் திரும்பச் சொல்வேண்டி இருக்கிறது.

புலத்திலும், எங்கள் நிலத்திலும் இன்று பெற்றோர்கள் பலர் தங்கள் பிள்ளைகளை வளர்த்து வருகிறார்கள். சுயமாக வாழக்கற்றுக்கொள் எனும் நிலையினை அவர்கள், தங்கள் பிள்ளைகளுக்கு வழங்குவது குறைவடைந்து விட்டது. பிள்ளைகளுக்கு நினைத்ததை வாங்கித் தருகிறார்கள். அப்படிச்செய்வது தவறில்லை. அதேநேரம் அவர்களின் தனிப்பட்ட ஆளுமை விருத்தியிலும் இப்பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும் என்பது பலரது விருப்பமுமாகும்.


மற்றவர்களுக்காகத் தங்களின் அந்தஸ்தையும் தகுதியையும் உயர்த்துகின்றோம் என்ற பெற்றோரும், அவர்களை நம்பி வாழும் பிள்ளைகளும் தமது அறியாமை எண்ணங்களால் அழிந்து போவது என்னவோ உண்மையாகிவிடுகின்றது.

பிள்ளைகளுக்கு அவசியமில்லாத மற்றும் தேவைக்கு அதிகமான ஆடம்பரப் பொருட்களை வாங்கி கொடுப்பது என்பது ஓர் அந்தஸ்து கிடையாது. இவ்வாறான பெற்றோரின் அவசியமற்ற அரவணைப்பால் பல தறிகெட்ட செயல்களில் பிள்ளைகள் ஈடுபடுகின்றனர். இது ஒரு சமூகத்திற்கு மட்டுமல்ல ஒரு தேசத்திற்கும் அபகீர்த்திகளை உண்டுபண்ணிப் போகின்றன. இவ்வாறானதொரு தொனிபட அண்மையில் யாழ்ப்பாண கூட புலத்திலும் நிலத்திலும் உள்ள பெற்றோர்களுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

காலத்திற்கு ஏற்ற எச்சரிக்கையாகவே அதனைப் பார்க்க வேண்டும். அசட்டுத்தனமான பெற்றோர்கள் ஒரு சிலரால்தான் சிறுவர்கள் பலரும் பாதைமாறி செல்வதற்குக் காரணமாக உள்ளனர் என்பது இங்கே நடக்கும் சமூக அவலங்களிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. பெற்றோர் அவதானமாக இருப்பது அவசியம் என்பது மட்டுமல்ல அது ஒரு சமூக அக்கறையும் ஆகும். ஆகவேதான், சாதாரணமான ஒரு பறவை தன் குஞ்சுகளுக்கு தான் வாழும் சூழலில் அவை எப்படி வாழவேண்டும் என்ற கற்கையினை கற்றுக் கொடுத்துக்கொண்டிருக்கையில் பகுத்தறிவு படைத்த மனிதர்கள் பலரும் பிள்ளைகளுக்கு அவற்றையெல்லாம் கற்றுக்கொடுக்கத் தவறுகின்றனர் என்பது மிகவும் வேதனையான விடயமாகும்.

ஆகவே, பாதுகாப்பான சிறுவர் உலகு என்பதிலே பெற்றோர் முதலாவதாகவும், முதன்மையானவர்களாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்ற உண் மையை மனதில் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பெற்றோரும் தங்கள்தங்கள் பிள்ளைகள் மீது சரியான அக்கறையினையும் அவர்களின் எதிர்காலத் திட்டங்களையும் சமூகமாற்றங்களையும் அதற்கேற்றால்போல் கெட்டித்தனமாக எப்படி வாழப்பழகலாம் என்பதையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். இவையே காலத்தின் சாலத்தேவையும் ஆகும்.

■




# மரபணுக் கோளாறால் உருவாகும் தலசீமியா நோய்

பைஷல் இஸ்மாயில்

தலசீமியா என்பது இரத்த சிவப்பணுக்களைப் பாதிக்கும் ஒரு மரபணுக் கோளாறு ஆகும். இது பெற்றோரிடமிருந்து மரபணு ரீதியாகப் பரவுகிறது. இந்த நிலையில் அசாதாரண ஹீமோகுளோபின்களை உடல் உற்பத்தி செய்கிறது. இதனால் இரத்த சிவப்பணுக்களுக்கு அதிகப்படியான சேதம் ஏற்படுகிறது. மேலும், இது இறுதியில் இரத்த சோகைக்கு வழிவகுக்கிறது.

தலசீமியா என்பது ஹீமோகுளோபின் (ஒட்சிசனைக் கொண்டு செல்வதற்குப் பொறுப்பான புரதம்) உற்பத்தியைப் பாதிக்கும் பரம்பரை இரத்த நோய்களின் தொகுப்பாகும். அவை தீவிரத்தன்மையில் வேறுபடுகின்றன. சில அறிகுறிகளை ஏற்படுத்தாது, மற்றவை உயிருக்கு ஆபத்தானவை. எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை மிகவும் தீவிரமான நிகழ்வுகளில் கருதப்படுகிறது.

தலசீமியா ஹீமோகுளோபின் உற்பத்தியில் ஏற்படும் குறைபாடுகளால் வகைப்படுத்தப்படுகிறது. நினைவூட்டலாக, ஹீமோகுளோபின் என்பது சிவப்பு இரத்த அணுக்களில் (சிவப்பு இரத்த அணுக்கள்) இருக்கும் ஒரு பெரிய புரதமாகும். இதன் பங்கு, சுவாச அமைப்பிலிருந்து உடலின் மற்றப் பகுதிகளுக்கு டிக்சோய்ஜீனைக் கொண்டு செல்வதை உறுதி செய்வதாகும்.

தலசீமியா என்பது இரத்தத்தின் நோய் என்று கூறப்படுகிறது. இரத்த சிவப்பணுக்களின் போக்குவரத்துச் செயற்பாடு பலவீனமடைகிறது. இது உடலில், கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். இந்தக் கட்டத்தில், தலசீமியாவில் ஒரே மாதிரியான குணாதிசயங்கள் அல்லது அதே அளவு தீவிரத்தன்மை இல்லாத பல வகைகள் உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சிலருக்கு எந்த அறிகுறிகளும் இல்லை, மற்றவர்கள் உயிருக்கு ஆபத்தானவை.

**தலசீமியா (Thalassemia) நோய் என்றால் என்ன?**

தலசீமியா என்பது ஒருவகை இரத்தச்சோகை நோயாகும். உலகில் உயிரோடு பிறக்கின்ற 10 ஆயிரம் குழந்தைகளில் 4.4 சதவீதமான குழந்தைகள் இந்த நோயோடுதான் பிறக்கின்றனர். அது மாத்திரமல்லாமல், உலகில் வாழுகின்ற மக்களில் சுமார் 5 சதவீதமான மக்கள் இந்த நோயை உண்டுபண்ணும் மரபணு மாற்றங்களைக் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்நோயோடு வாழுகின்ற 3500 பேர் இப்போது எம்மத்தியில் இருக்கின்றனர். இதேபோல் இந்த நோயை உண்டாக்கக் கூடிய மரபணு உடையவர்கள் நோய்க் காவிகளாக (carriers) கிட்டத்தட்ட 5 இலட்சம் பேர் எமது நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் மத்திய, வடமத்திய, வடமேல் மாகாணங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்.

உடலிலுள்ள குருதியில் சிவப்பணுக்கள் RBC, வெள்ளையணுக்கள் WBC, குருதிச் சிறுதட்டுக்கள் PLATELETS என்ற மூன்று வகைக் கலங்கள் காணப்படுகின்றன. இதில் நிறமுள்ள பதார்த்தமாக RBC இருப்பதாலேயே எமது குருதி இரத்தச் சிவப்பு நிறமாகத் தெரிகிறது. தலசீமியா என்பது இரத்த சிவப்பணுக்களோடு தொடர்புபட்ட ஒரு பரம்பரை நோயாகும். இந்த இரத்தச் சிவப்பணுக்கள் உரிய காலத்திற்கு முன் தொடர்ந்து அழிவடைவதால் இந்நோய் ஏற்படுகிறது. இந்நோயில் பல படிநிலைகள் உள்ளன.

**இந்நோயின் படிநிலைகளைப் பற்றி தெளிவுபடுத்த முடியுமா?**

ஆம்,பெரும் தலசீமியா (thalassemia major) - இது மிக ஆபத்தான படி நிலையாகும். இந்நிலைக்குள்ளாகியவர்கள் கடுமையான இரத்தச் சோகைக்குள்ளாகி விடுவார்கள். அவர்கள் உயிர்வாழ்வதற்குத் தொடர்ந்து இரத்தம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படும். இது பெரும் தலசீமியா எனப்படும்.

அறிகுறிகள் அற்ற மற்றும் சிறு தலசீமியா இரண்டுக்கும் இடைப்பட்ட, நிலை மாறும் இடைத்தலசீமியாவும் உள்ளது. இவைகள் ஆபத்துக் குறைவானவையாகும். எந்த வகை தலசீமியாவாக இருந்தாலும் அவை எல்லாமே மரபு வழிப்பட்ட இரத்தக் கோளாறுகள் மூலமே உருவாகின்றன. அதாவது,பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு மரபு வழியாகக் கடத்தப்படுவதன் மூலம் ஏற்படுகின்றது. குறிப்பாக, பெற்றோர் இருவருமே குறைபாடுள்ள மரபணு உடையவர்களாக இருப்பின் அவர்களின் குழந்தைகள் பெரும் தலசீமியா கொண்டவர்களாக இருப்பார்கள்.

இக்குறைபாடுடைய மரபணுவின் தோற்றம் மத்திய தரைக்கடல் பகுதி என்று வரலாற்று அடிப்படையில் நம்பப்படுகிறது. எனவேதான் தலசீமியா என்று பெயர் வந்தது. கிரேக்க மொழியில் தலஸ் என்றால் கடலாகும். கடலே இல்லாத குருநாகல் பிரதேசத்தில் இந்தவகை நோயாளிகள் அதிகம் காணப்படுவதுபோல, இலங்கை உட்பட ஆசிய, மத்திய கிழக்கு, ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளிலும் இந்த நோய் பரவிக் காணப்படுகிறது.

**இந்நோய்க்கான காரணம் என்ன?**

ஒருவருக்கு RBC இல் உள்ள இரத்தப்புரதம் (ஹீமோகுளோபின் Hb) தேவையான அளவைவிடக் குறைவாக இருப்பதே இதற்குக் காரணமாகும்.



வைத்தியர் பீ.எம். அர்ஷாத் அஹமட்
MBBS, MD, PAED
சிறுபிள்ளை வைத்திய நிபுணர்
ஆதார வைத்தியசாலை
காத்தான்குடி

**தலசீமியாவில் RBC ஏன் அழிவடையவேண்டும்? இதற்கு என்ன காரணம்?**

அழிவுக்குக் காரணம் சிவப்பணுவின் (RBC) நிலைப்பாற்றலைத் தடுக்கும் ஒரு மரபுக்கோளாறாகும். இம்மரபுக் கோளாறு மரபணுக்கள் மூலமாக பெற்றோரிடம் இருந்து குழந்தைக்குக் கடத்தப்படுகிறது. பெற்றோர்களில் யாராவது ஒருவரிடம் இருந்து குறைபாடுடைய இரத்தப் புரத மரபணுவையும் மற்றவரிடம் இருந்து இயல்பான மரபணுவையும் பெற்றுக்கொள்ளும் ஒருவர் பொதுவாக நோய் கடத்துபவர் காவி என்று அழைக்கப்படுகின்றனர். நோய் கடத்துபவருக்கு மிதமான இரத்தச் சோகையைத் தவிர வேறு எந்த அறிகுறியும் காணப்படுவதில்லை. அவருக்கு இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை வருவதில்லை. ஆனாலும் அவர் குறைபாடுள்ள மரபணுவைக் கொண்டு காவிக்கொண்டிருக்கிறார். இதனாலேயே அவர் காவி என்று அழைக்கப்படுகிறார்.

HbA என்று அழைக்கப்படும் இயல்பான இரத்தப் புரதம் நான்கு புரதச் சங்கிலியைக் கொண்டுள்ளது. அதாவது, இரண்டு அல்பா புரதங்களும் இரண்டு பீட்டா புரதங்களும் இவ்விரு வகைப் புரதச் சங்கிலிகளில் உள்ள மரபுக் குறைபாட்டின் அடிப்படையில் இரண்டு பெரும் தலசீமியாக்களான அல்பாவும் பீட்டாவும் பெயரிடப்படுகின்றன. இது ஆண்களையும் பெண்களையும் சம அளவில் பாதிக்கும் நோயாகும்.

போதுமான பீட்டா குளோபின் புரதச் சங்கிலியை உருவாக்க இரண்டு மரபணுக்கள் (பெற்றோர் ஒவ்வொருவரிடமும் இருந்து ஒவ்வொன்று) தேவைப்படுகின்றன. ஒன்றிலோ அல்லது இரண்டு மரபணுக்களிலுமோ மாற்றம் ஏற்பட்டால் பீட்டா தலசீமியா உண்டாகிறது. மாற்றம் நிகழ்ந்த மரபணுக்களின் எண்ணிக்கையைப் பொறுத்து பீட்டா தலசீமியா அமைகிறது. இரண்டு மரபணுக்களும் பாதிக்கப்பட்டால் பெரும் தலசீமியாவும் கடுமையான இரத்தச் சோகையும் ஏற்படுகின்றன. ஒன்று பாதிக்கப்பட்டால் தலசீமியா மைனர் காவி நிலை உருவாகிறது.

அதுபோல் அல்பா குளோபின் சங்கிலியை இரண்டு மரபணுக்கள் உருவாக்குகின்றன. நான்கு மரபணுக்களில் இரண்டு பாதிக்கப்படும்போது அல்பா தலசீமியாவின் நோய்க்கூறு தோன்றுகிறது. மூன்று பாதிக்கப்பட்ட மரபணுக்களைக் கொண்ட நோயாளிக்கு இரத்தப் புரத நோய் HbH ஏற்படுகிறது. அவர்கள் பெரும்பாலும் பிறப்பதற்கு முன்னர் அல்லது சற்றுப் பின்னர் இறந்து விடுவார்கள்.

**தலசீமியா மைனர் என்றால் என்ன?**

நோயைக் காவியாக இருக்கும் ஒரு நிலையை தலசீமியா நோய்க்குறிகள் அற்ற சிறு தலசீமியா என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகளுக்கு ஒரு சில பிரச்சினைகளே இருக்கும். இவர்கள் இயல்பாக வாழ்க்கை நடத்துவார்கள். பெரும்பாலனவர்கள் இவ்வாறான ஒரு நோய் தமக்கு இருப்பது தெரியாமலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள்.

மேலும், இடைத் தலசீமியா நோயாளிகள் பெரும் அல்லது சிறு தலசீமியா நோயாளிகளைப் போன்றோ அல்லது அதற்கு இடைப்பட்ட ஒரு தொங்கு நிலையிலோ இருப்பார்கள். பொதுவாகப் பெரும் தலசீமியா நோயாளிகளைப் போன்று இவர்களுக்கு இரத்தச் சோகை கூடுதலாக இருக்காது. இருப்பினும் பலருக்கு சிலவேளைகளில் இரத்தம் கொடுக்க வேண்டியிருக்கும். இவர்களுக்கு உடலில் இரும்புச்சத்து அதிகமாகக் கூடிய அபாயம் இருப்பதால் மருந்துகள் கொடுத்து சிகிச்சையளிக்க வேண்டிய தேவை ஏற்படும்.

**பெரும் தலசீமியா நோயாளிகளின் நிலை என்ன?**

பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு இரத்தச் சோகையின் அறிகுறிகள் ஒருவயது வருவதற்கு முன்பே தென்படத் தொடங்கும். இரத்தப்புரதம் மிகவும் குறைவதால் அவர்களுக்கு அதிகமான பிரச்சினைகள் உண்டாகும்.

**இரத்தச் சோகையின் அறிகுறிகள் என்ன?**

களைப்பு, சோர்வு, நிறம்வெளிருதல், மூச்சுத்திணறல், மூச்சுவிடுதலில் சிரமமும் கூடுதலான இதயத்துடிப்பும் இருக்கும். இந்நிலை கடுமையானால் மாரடைப்பும் ஏற்படலாம். அதாவது, இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு குறைவதே ஆகும். இப்பிரச்சினைகளின் தீவிரமும் இரத்தப் புரதத்தின் அளவையும் பொறுத்து அறிகுறிகளின் தீவிரமும் அமையும்.

மேலும், பலவீனமான உருக்குலைந்த எலும்புகள், மண்ணீரலிலும் கல்லீரலிலும் வீக்கம், குறைவான உடல் வளர்ச்சி, காலம் கடந்து பருவமடைதல் போன்ற அறிகுறிகள் இருக்கும். குறிப்பாக, தொடர்ந்து இரத்தம் பாய்ச்சுவதால் இரும்புச்சத்து மிகையாகி அதன் மூலம் பக்க விளைவுகளும் ஏற்படும்.

**தலசீமியாவை கண்டறிவது எவ்வாறு?**

தலசீமியாவைக் கண்டறிய சிறப்பு இரத்தப் பரிசோதனைகள் தேவைப்படும். சாதாரணமாக செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளில் FBC யில் இரத்தச் சோகையின் அளவு Hb level, சிவப்பணு குறியீடுகள் MCV, RDW போன்றவற்றை வைத்து ஓரளவு அறிந்துகொள்ளலாம். மேலும், Blood picture போன்ற பரிசோதனைகள் மூலமும் தலசீமியா இருக்கிறதா? இல்லையா? என்பதை ஓரளவு உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

பீட்டா தலசீமியாவுக்கும் வேறுசில இரத்தப் புரத மரபுக் கோளாறுகளுக்கும் பொதுவாக HPLC எனப்படும் சோதனை பரிந்துரைக்கப்படுகிறது. ஒரு வயதுக்குக் குறைந்த குழந்தைகளாக இருப்பின் ஒருவயது முடிந்தபின் இச்சோதனைகள் நடத்தப்பட வேண்டும். நோயாளிக்கு இரத்த மாற்றம் செய்யப்பட்டிருந்தால் இச்சோதனைகளினால் பயனில்லை. எனவே இரத்தம் பாய்ச்சுவதற்கு முதல் இந்தப் பரிசோதனைகள் செய்யப்பட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்களின் இரத்தப் பரிசோதனை அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டே குழந்தைக்கு தலசீமியா இருக்கிறதா? இல்லையா? என்பதை மருத்துவரால் அறிந்துகொள்ள முடியும்.

**இதற்கான சிகிச்சை என்ன?**

இந்த நோயின் வகையையும் அதன் தீவிரத்தன்மையையும் பொறுத்தே சிகிச்சை செய்யப்படுகிறது. நோய் அறிகுறி இல்லாத தலசீமியா காவிகளுக்குச் சிகிச்சை தேவையில்லை. ஆனால், அவர்கள் இன்னொரு தலசீமியா நோய்க்குறி இல்லாத காவிகளை திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குப் பெரும் தலசீமியா

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# நம்ம அல்பம் 02

மதுமிதா




வாகனங்களின் அதிவேக ஓட்டத்தால் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடமாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. காபட் வீதிகளில் பல வாகனங்கள் அதி வேகமாகப் பயணித்துக் கொண்டே இருக்கின்றன.

வேகக்கட்டுப்பாடின்றி வாகனத்தைச் செலுத்துபவர்கள் தம்மோடு சேர்ந்து செல்பவர்களையும் வீதியில் செல்வோரையும் பொருட்படுத்தாது பயணிக்கிறார்கள். இளமைத் துடிப்பு என்ற பெயரில் அநேக உயிர்கள் காவுகொள்ளப்படக் காரணமாகிறார்கள். 'ஆண்வானம்' என்ற பாடல் இதன் கொடூரத்தை வெளிப்படுத்துகிறது.

தயாரிப்பு அபயன் கணேஸ். பாடல் ப்ரியன். ப்ரியனின் வரிகள் காதலனின் வலியையும் வேதனையையும் நன்கு வெளிப்படுத்துகிறது. காதலியின் மீது அன்பு வைத்த காதலன் அவளது நினைவுகளை எப்போதும் தனது மனதில் சுமந்தவனாய் அவள் மரணத்திற்குக் காரணமான குற்ற உணர்வையும் வெளிப்படுத்துகிறார்.


கதாநாயகனாக நடித்த அனுஷனே இசை அமைத்துப் பாடியுமுள்ளார். ஒவ்வொரு காட்சிக்கும் பொருத்தமான முக பாவனைகளை வெளிப்படுத்தியமை மட்டுமல்லாது, காட்சிக்கு ஏற்றாற் போல் இசையும் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வாகன வேகத்திற்கு பொருத்தமாக இசை மனதைக் கவர்கிறது.

விபத்து நிகழும் போது வாகனம் ஓட்டும் லாவகம், வேறுவாகனங்களை முந்திச் செல்லும் விதம் என்பன மிக அழகாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. வாகனத்தினுள்ளே நாம் செல்வது போன்ற உணர்வை படப்பிடிப்பு ஏற்படுத்தியுள்ளது.

நாயகியாக நடித்த கிருஷி அணிந்துள்ள ஆடை சமிஞ்னை விளக்கின் நடுநிலை வர்ணத்திற்கு ஏற்றாற்போல் உள்ளது. அவரது முக அழகும் புன்னகையும் ரசிகர்களை நன்றாகவே ஈர்த்துள்ளன.

பாடல் காட்சியின் சிறப்பு முழுமையாக டினோசன் அழகரட்ணத்தையே சென்றடைகிறது. ஒவ்வொரு காட்சிகளையும் மிக சிறப்பாக ஒளிப்பதிவு செய்துள்ளார். நினைவுக் காட்சியில் நாயகிவிபத்தின் பின் மறையும் காட்சியானது மிக அற்புதமாக உள்ளது. இப்பாடலைக் காண்பதற்கு https://www.youtube.com/watch?v=QjuIJCy-gOk என்ற இணைப்பினூடாக சென்று பார்வையிடலாம். ■




# கொலைப் பட்டியலுடன் களமாடும் ரஷ்ய உளவு அமைப்பு

உக்ரைனில் ரஷ்யா தீவிரமாக நுழைந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை காலை தாக்குதல் தொடங்கிய நிலையில் இப்போது மோதல் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

உக்ரைனை கடல், வானம், தரை என்று மூன்று பக்கத்திலும் இருந்தும் தாக்கி வருகிறது. இதே வேகத்தில், வெளிநாடுகளில் உதவி இன்றி போர் நடந்தால் சில வாரங்களில் ரஷ்யா மொத்தமாக உக்ரைனை ஆக்கிரமிக்கும் வாய்ப்புக்களும் உள்ளன. பொதுவாக ஒரு நாடு இன்னொரு நாட்டின் மீது போர் தொடுக்கிறது என்றால் அந்த நாட்டில் இருக்கும் தலைவர்களை போர் தொடுக்கும் நாடு சிறை பிடிக்கும். அவர்களுக்குப் பல்வேறு தண்டனைகளை கொடுக்கும். நாடு கடத்துவது, தூக்குத் தண்டனை கொடுப்பது உள்ளிட்ட தண்டனைகளைக் கொடுக்கும். இந்த நிலையில்தான் ரஷ்யா இதேபோல் உக்ரைனில் இருக்கும் தலைவர்களைத் தண்டிக்க முக்கியமான திட்டம் ஒன்றை வகுத்து வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது.

ரஷ்யாவின் உளவு அமைப்பான எப்.எஸ்.பி அமைப்புதான் இதில் ஈடுபட்டு வருவதாகவும் அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது. சோவியத் உடைந்த பின் கே.ஜி.பி உளவு அமைப்பு எப்.எஸ்.பி உளவு அமைப்பாக ரஷ்யாவில் உருமாறியது. இந்த நிலையில் எப்.எஸ்.பி உளவு அமைப்பு ரஷ்யாவிற்கு உள்ளே பணிகளைச் செய்வதாக கூறப்பட்டாலும் உலகம் முழுக்க இது உளவு பணிகளை செய்து வருகிறது. இந்த அமைப்பு கொடுத்த லிஸ்ட் மூலம் உக்ரைனில் இருக்கும் அரசியல் தலைவர்களின் பெயர்கள் அடங்கிய கில் லிஸ்ட் ஒன்றை ரஷ்யா உருவாக்கி உள்ளதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது. கில் லிஸ்ட் என்றால் கொலைப் பட்டியல். உக்ரைனில் இருக்கும் அரசியல் தலைவர்கள், பிரபலங்களின் பட்டியல் இது. போர் நடக்கும் சமயத்தில் உக்ரைனில் ஆட்சியை கவிழ்த்து ரஷ்யாவிற்கு கீழ் கொண்டு வர எப்.எஸ்.பி முயலும். இதற்கான எப்.எஸ்.பி உளவாளிகள் ஏற்கெனவே உக்ரைனில் ரஷ்யா மூலம் களமிறக்கப்பட்டு உள்ளனர். ஆட்சியை கவிழ்த்து உக்ரைனை ரஷ்யாவிற்கு கீழ் கொண்டு செல்லத் தடையாக இருக்கும் நபர்களைக் காலி செய்வதற்காக இந்த எப்.எஸ்.பி அமைப்பு உக்ரைனில் களமிறங்கி உள்ளதாம். இதற்காக உருவாக்கப்பட்ட லிஸ்ட்தான் கில் லிஸ்ட். ரஷ்யாவின் வருகையை ஏற்றுக்கொள்ளாத நபர்களை எப்.எஸ்.பி தண்டிக்க போவதாக அமெரிக்கா எச்சரித்துள்ளது. ரஷ்யாவிற்கு எதிராக உக்ரைனில் உள்ள எதிர்ப்பை கட்டுப்படுத்தி, கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் விதமாக எப்.எஸ்.பி காய்களை நகர்த்தி வருகிறதாம்.

அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி அங்கு உள்ள கோடீஸ்வரர்களையும் ரஷ்யாவிற்கு அடிபணியுங்கள், இல்லையென்றால் மரணம்தான் என்று எப்.எஸ்.பி மிரட்டி வருகிறதாம். ஐ.நாவிற்கான அமெரிக்க தூதரே ஹென்ஸ்லி அனுப்பிய கடிதத்தில்தான் இந்த கில் லிஸ்ட் குறித்த புகாரை அமெரிக்கா வெளிப்படையாக வைத்துள்ளது. செய்தியாளர்கள், ரஷ்யாவை எதிர்க்கும் அரசியல் தலைகள், சில கோடீஸ்வரர்கள், எல்.ஜி.பிடி பிரிவினர், சில குறிப்பிட்ட மத பிரிவினர் ஆகியோரும் இந்த லிஸ்டில் உள்ளனர் என்று அமெரிக்கா குற்றஞ்சாட்டி உள்ளது. ஆனால், அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது. கில் லிஸ்ட் எதுவும் இல்லை இது கட்டுக்கதை என்று ரஷ்யா கூறியுள்ளது. ■

# மட்டக்களப்புத் தாய்வழி சமூக அமைப்பும் கேரளாவும்

செ.வெவோகா
இறுதி வருட சிறப்புக்கற்கை
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை

உலகில் தோன்றிய அனைத்துச் சமூகங்களிலும் தாய்வழிச் சமூக அமைப்பே நிலவியுள்ளது. மனித நாகரிகம் மேம்படத் தொடங்கிய போது, பெண் தனது தனித்துவத்தை இழக்க நேரிட்டது. தாய்வழிச் சமூக அமைப்பு தந்தைவழிச் சமூக அமைப்பாக மாற்றங்கண்டது. ஆயினும், பண்டைய மரபின் எச்சங்கள் சமூக அமைப்பின் சில கூறுகளில் இன்றும் தங்கிக் காணப்படுகின்றன. தந்தைவழி ஆதிக்கம் சமூகத்தை ஆக்கிரமித்துள்ள சூழலில், இலக்கிய ஆய்வுகள் சில தாய்வழிச் சமூக அமைப்பின் எச்சங்களை மையப்படுத்தி பண்டைய பண்பாட்டை தாய்வழிச் சமூக அமைப்பை எடுத்தியம்புவனவாக வெளிவந்துள்ளன. பண்டைய முத்தமிழ் நாடுகளில் முதன்மை பெற்று விளங்கிய சேரநாடு நீண்டகால வரலாற்றுப் பெருமையைக் கொண்டது. சேரநாட்டின் எல்லைகள் குறித்து பெருந்தொகைப் பாடலொன்று பின்வருமாறு குறிப்பிடும்.



**வடக்குத் திசைபழனி வான்கீழ் தென்காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம் - கடற்கரையின்
ஓரமோ தெற்காகு முள்ளெண் பதின்காதச்
சேரநாட் டெல்லையெனச் செப்பு**

தொல்காப்பியம் கூறும் தமிழ் வழங்கு பன்னிரு நாடுகளில் வேணாடு, கர்க்கா நாடு, குட்ட நாடு, குடநாடு, பூழி நாடு ஆகிய ஐந்து நாடுகளை அன்றைய சேரநாடு கொண்டிருந்தது. சங்க இலக்கியச் சான்றுகளின்படி சேர மன்னர்களின் வரலாற்றுக் காலத்தை கி.மு 4 ஆம் நூற்றாண்டு முதல் ஆய்வாளர்கள் கணிக்கின்றனர். சேர நாட்டின் பூர்வீகச் சமூகமான நாகரைத் தொடர்ந்து, மலைவேடர், மலையரசர், உல்லடர், மலைப் பண்டாரம், மலைப்புலையர், கணிக்கர், இருளர், பணியர், காடவர், முத்துவனார், குறும்பர், பறையர் போன்றோர் ஆதிக்குடிகளாக அறியப்படுகின்றனர். நாயர், பணிக்கர், முக்குவர், நாடார், மழவர், பரவர் போன்றோர் மரபுவழிச் சமூகங்களாகக் குறிப்பிடப்படுகின்றனர். நம்பூதிரிகள், பிள்ளைகள், மேனன், பிராமணர், கம்மாளர், செட்டிகள் போன்றோர் கிறிஸ்துவுக்கு முற்பட்டு இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அங்கு சென்று குடியேறியவர்களாவர்.

மட்டக்களப்பு தேசத்தில் தொடக்ககால ஆட்சியாளனாகக் குறிப்பிடப்படும் சேரநாட்டுத் தளபதி கூத்திகனுடைய ஆட்சிக்காலமான கி.மு 236 தொடக்கம் சேரநாட்டுக் குடியேற்றங்கள் இங்கு இடம்பெற்று வந்ததாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. மட்டக்களப்பு வரலாறு அறியப்பட்ட காலம் முதலே இதன் சமூக வரலாற்றுத் தளத்துள் சேரநாடு இணைக்கப்படுவதுவும் அதுமுதற்கொண்டு அதன் பண்பாட்டு அம்சங்களில் இத்தேசம் கட்டுண்டு போனதும் பலர் அறிந்ததே.

களப்புகளும் கரைச்சைகளும் வாவிகளும் ஏரிகளுமாய் தெங்கும் வாழையும் நெல்லும் பசுமையுடன் காட்சி தரும் விவசாயக் கிராமங்களும் அங்கே பெரிதும் சிறிதுமாய் காட்சிதரும் ஓட்டு வீடுகளும் கூரைவேய்ந்த குச்சு வீடுகளும் சிறிய சிறிய வழிபாட்டுத் தலங்களும் எந்தவித வேறுபாட்டினையும் தோற்றுவிக்காது. வீடுகளின் அமைப்புக்கள் கூட அருகிலுள்ள தமிழ் நாட்டைப் போலல்லாது மட்டக்களப்புத் தேசத்தையே நினைவுறுத்தும். கேரளத்து மக்களது பேச்சு வடிவமும் உச்சரிப்பும் ஓசை நயமும் முழுக்க முழுக்க மட்டக்களப்பை ஒத்திருப்பதுவும் மட்டக்களப்புத் தேசத்தின் பழந்தமிழ் சொல்வளம் அங்கு நிலைபெற்றிருப்பதுவும் நம்மைப் பிரமிக்கச் செய்யும். தேங்காய்த் துருவல், தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெய் என தேங்காயையே முக்கியப்படுத்தும் உணவு வகைகளும் தலைக்குத் தேங்காய் எண்ணெய் பூசுதலும், சோறு, பால், தயிர் என்பவற்றோடு இனிப்பு மற்றும் கனி வகைகளைக் கலந்து உண்ணுதலும் மட்டக்களப்பு தேசத்தையே நிகர்த்திருக்கும்.



உரித்துக்கள் மருமக்கள் வழி கைமாறப்படும் தாய்வழி எச்சத்தின் ஒரு கூறு இங்கு சமூகவியலின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறது. மருமக்கள் தாயம் குறித்த தெளிவும் அது கிழக்கிலங்கைத் தமிழரிடத்தில் நிலைகொண்டுள்ளவாறும் ஆலயம் என்ற சமூக நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளதனையும் காணமுடிகிறது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரையிலும் கேரளத்தில் உரித்துக்கள் மருமக்கள் வழி கைமாறப்படும் மருமக்கள் தாயம் எனும் மரபு காணப்பட்டது. பிற்பட்ட காலத்தில் அரசின் தலையீட்டால் அம்மரபு தடை செய்யப்பட்டது. ஆயினும், கிழக்கிலங்கைக்கும் கேரளத்திற்கும் இடையே நிலவிய தொடர்பின் வழி கிழக்கிலங்கையில் கால்கொண்ட மருமக்கள் தாயம் இன்று வழக்கொழிந்து போகாது காணப்படுகிறது. அத்தகைய பேணுகை ஆலயம் என்ற நிறுவனத்தை மையமிட்டே பெரும்பாலும் காணப்படுகிறது. அண்மைக் காலமாக அத்தகைய பேணுகையில் நெகிழ்ச்சிப் போக்குகள் சில இடம்பெறுவதனையும் அவதானிக்க முடிகிறது.

**மருமக்கள் தாயமும் தாய்வழி முதுசொமும்**

உலகின் பல்வேறு சமூகங்களின் குடும்ப உறவுமுறைகள் தொடர்பாக அறிவியல் ரீதியான கற்கை நெறிகளை ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொண்ட தலைசிறந்த சமூகவியலாளர்களான மோர்கன் மற்றும் ஏஞ்சல் போன்றோர் மிகவும் முற்பட்ட காலம் முதலே உலகில் தாய்வழி மரபுகள் தோற்றம் பெற்றதெனவும் அவற்றிலிருந்தே சமூக அல்லது குடும்பத் தலைமைத்துவம் உருவானதெனவும் கருதுகின்றனர். தாய்வழி மரபானது (Matrilineal System) பழமையான சமூகங்களின் நீண்டகாலப் பண் பாட்டினை அடியொற்றி வந்த பேணுகையாகும். இத்தாய்வழி மரபின் சிறப்பியலாக அமைவதே இந்திய நாட்டில் சேரநாடு என அறியப்பட்ட கேரளத்தின் மருமக்கள் தாயகமும் ஈழத்தே பண்டைய மட்டக்களப்புத்தேசம் மற்றும் புத்தளப் பிரதேசம் என்பவற்றின் தாய்வழி முதுசொமும் ஆகும். இதில் மருமக்கள் தாயம் என்பது மருமக்கள் வழி சொத்துரிமை எனப் பொருள்படும். அதே போல் தாய்வழி முதுசொம் என்பது தாய் வழிப் பழமையான சொத்துரிமை எனப் பொருள்படும். இவை இரண்டுமே ஒரே அர்த்தப்பாட்டினைக் கொண்டவையாகும். தாய் வழி முதுசொத்தை சட்டவாக்கமாக கொண்டமைந்த முக்குவதேச வழமைச் சட்டம் முழுக்க முழுக்க சேரத்தின் மருமக்கள் தாயகச் சட்டத்தையே அடியொற்றியதாகும்.

கேரளச் சமூக வரலாறு தொடர்பாக முக்கிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் எல்.கே. பாலரெத்தினம், பேராசிரியர் எல்.ஏ. கிருஷ்ணஐயர் போன்ற சமூகவியலாளர்கள் தாய்வழி மரபுகளின் முக்கியத்துவம் மிக்க மருமக்கள் தாயம் நீண்ட காலம் முதலே சேரநாடு எனப்பட்ட கேரளத்தின் பண்டைய சமூகங்களின் பேணுகையில் இருந்து வந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். சென்னை மாநில சட்ட நிருவாகக் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றி, அதன் பின்னர் கேரளம், திருவனந்தபுரத்தில் சட்டத் தொழில் புரிந்த சட்டமேதை பத்மநாபமேனன் 1908 இல் திருவாங்கூர் மருமக்கள் தாய விசாரணைக்குழுவின் உறுப்பினராக, அன்றைய ஆங்கில அரசால் நியமிக்கப்பட்டபோது அவர் மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில், கேரளத்தின் தாய்வழி மரபான இம்முறைமை ஏலவே நீண்டகால நடைமுறையிலிருந்தாலும் சேரமான் ஆட்சிக்காலத்துக்குப் பிற்பட்டே சிறப்பான நடைமுறைக்கு உட்பட்டிருப்பதாகத் தனது கொச்சி ராஜ்சிய சரிதம் எனும் நூலில் (Kochi Rajya chari tham - 1912) குறிப்பிடுகின்றார். இக்காலம் இலங்கையில் கலிங்க மாகோனின் ஆட்சிக்காலமான கி.பி 13 ஆம் நூற்றாண்டைக் குறிப்பதாக அமையும்.

பண்டைய மட்டக்களப்புத் தேசம் மற்றும் புத்தளப் பிரதேசத்தைப் பொறுத்தவரை அவற்றின் சமூகப் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் சேரத்தின் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பது அறியப்பட்டதாகும். ஆதாரப்படுத்தப்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றில் கி.மு 3 ஆம் நூற்றாண்டு, கி.பி 2 ஆம் நூற்றாண்டு, கி.பி 5 ஆம் நூற்றாண்டு, கி.பி 6 ஆம் நூற்றாண்டு, கி.பி 10 ஆம் நூற் றாண்டு, கி.பி 11 ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி 13 ஆம் நூற்றாண்டு ஆகியவற்றில் சேரத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இருந்த தொடர்புகளை மட்டக்களப்பின் வரலாற்று ஆவணங்கள் மூலம் நம்மால் தெரிந்து கொள்ள முடியும். முக்குவர், பணிக்கர், நாயர், மழவர் போன்றோர் சேரநாட்டிலிருந்து இங்கு வந்தவர்களில் முக்கிய சாதியினராகின்றனர். இச்சமூகங்களின் பிணைப்பே சேரத்தின் தாய்வழி மரபுகளை இங்கு வலுவோடு வளர்த்தெடுக்க முக்கிய காரணங்களாயமைந்தன. பண்டைக்காலம் முதலே 4 சேரத்திற்கும் கலிங்கத்திற்கும் இருந்த இறுக்கமான தொடர்பும், மட்டக்களப்பையும் சேரநாட்டையும் இணைக்கப் பெருமளவு உதவியுள்ளமையை இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மட்டக்களப்புத் தேசம் மலையர் குகநாடு என அழைக்கப்பட்டதன் அர்த்தப்பாடு இதன் மூலம் வெளிப்படவே செய்யும். மலையர் என்பது மலைநாட்டினரான சேரத்துக் குடிகளையும், குகர் என்பது கலிங்கக் குடிகளையும் அடையாளப்படுத்தவதாக அமையும்.

கேரளத்தில் மரபு வழியாக விவசாயத்தை மேற்கொண்டிருந்த நிலவுடைமைச் சமூகமாக நாயர் சமூகம் அடையாளப்படுத்தப்படுவதைப் போன்றே மட்டக்களப்புத் தேசத்திலும் புத்தளப் பிரதேசத்திலும் நிலவுடைமைச் சமூகமாக முக்குக சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. எனினும் கேரளத்து சமூகத் தளத்தில் காராளர்களான நாயர்கள் ஒரேயினத்தை அடியொற்றி வந்த தனிச் சமூகமாக அடையாளப் படுத்தப்படுவதைப் போன்று இலங்கையில் முக்குக சமூகம் அடையாளப்படுத்தப்படவில்லை. கேரள சமூக ஆய்வுகளில் நாகர் இனத்தின் வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்த பிரிவினரே நாயர் சமூகமென ஐயத்துக்கிடமின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முடிவுறுத்தப்பட்ட மட்டக்களப்பின் சமூக வரலாற்று ஆய்வுகளின்படி, மட்டக்களப்பின் முக்குக சமூகமானது பண்டைய கலிங்கத்தினதும் முத்தமிழ் நாடுகளான சேர, சோழ, பாண்டிய நாடுகளினதும் மரபு வழிச் சமூகங்களது ஒருங்கிணைப்பாகவே கொள்ளப்படுகின்றது. இதில் பண்டைய நாகருடன் கலிங்கத்தின் மரபு வழி சார்ந்த கலிங்கர் மற்றும் கங்கர் சமூகங்களும், சோழநாட்டின் வன்னியச் சமூகமான படையாட்சியரும் சேரத்தின் முக்குவர், பணிக்கர், நாயர் மற்றும் மழவர் சமூகங்களும் காலத்துக்குக் காலம் இணைந்து பிணைப்புற்றிருப்பது ஆய்வுகளில் நிலை நிறுத்தப்பட்டுள்ளன.

■

யாழ் சத்யா

மூன்றாம் வகுப்பில் பிரம்படி கணேசன் ஆசிரியர் இவளை விளாசித் தள்ளிய போது அவளை விட அதிகம் கண்ணீர் வடித்தது இவன் தான். அவள் விழுந்தெழும்பிக் கையில் சிராய்ப்பு ஏற்பட்டு மாறிய பின்னர் கூட வகுப்பறை கூட்டும் இவளது முறைக்கெல்லாம் தானே நேரத்தோடு வந்து கூட்டி விடுவான். அவளைக் குப்பை அள்ளுவதற்கு விடவே மாட்டான்.

இப்படி அவளைப் பார்த்துப் பார்த்துக் கவனித்தாலும் கூடச் சில நேரங்களில் இவனே அவளைக் கோபப்படுத்திப் பார்க்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரு முறை வைஷாலி இவனது பென்சிலை மாறி எடுத்து விட்டாள். உடனே இவன்,

“வைஷூ...! எதுக்கு என்ர பென்சிலை எடுத்தனி? நான் படம் கீறவென்று வடிவாக் கூர் தீட்டி வைச்சிருந்தனான்.”

வைஷாலியின் கெட்ட குணம் ஒன்று கோபம். மூக்கு நுனியிலே கோபம் வரும் என்பார்களே அது போல. இப்போதும் அவ்வாறே கோபப்பட்டவள் எதுவும் பேசாது அவனை முறைத்துப் பார்த்து விட்டு அவனது பென்சிலை எடுத்து உடைக்க முயன்றாள்.

அவனது பென்சில் ஏற்கனவே பாதி தேய்ந்து இருந்த படியால் அவளால் அதைக் கையால் உடைக்க முடியவில்லை. வாயில் வைத்துச் சப்பித் துப்பி விட்டுத் தன்னுடைய புதிய பென்சிலை அழகாக கூர் சீவி அவனிடம் கொடுத்தாள்.

இது நடந்தது இரண்டாம் வகுப்பில். வைஷாலியின் கோபத்தை சஞ்சயன் அறிந்து கொண்டதும் இப்படித்தான். ஆனால், அவனுக்கு நாளடைவில் அவள் பழக்கவழக்கங்கள் அனைத்தும் அத்துப்படி. அவள் கோபம் எல்லாம் வெறும் இரண்டு நிமிடங்கள் தான். என்னதான் மூஞ்சியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தாலும் இவன் சென்று பேசியவுடன் எதுவுமே நடவாதது போல மிகச் சாதாரணமாகப் பேசுவாள்.

வைஷாலி மற்றவர்களோடு கோபப்படும் போதும் சரி, சண்டை போடும் போதும் சரி அவள் உணர்வுகள் புரிந்து அவளைச் சமனிலைப்படுத்துவது சஞ்சயன்தான்.



கனவு 12

# கல்யாணக்கனவு

“சஞ்சயனிற்குக் கொஞ்சம் மேடைக் கூச்சம் உண்டு. நிறைந்த சபை முன்னே பாடுவதற்குச் சிறிது பயமும் தயக்கமும். ஆனால் அந்த நிமிடங்களில் அவனைத் தைரியப்படுத்தி அனுப்புவது வைஷாலிதான். அவள் தனது நிகழ்ச்சி முடித்தோ, அல்லது அடுத்து வரப்போகும் தனது நிகழ்ச்சிக்காகவோ மேடைக்குப் பக்கத்து அறையில் காத்திருக்கும் போது இவனை ஆறுதல் படுத்தி மேடைக்கு அனுப்புவாள்.”

அவளும் இவனோடு அன்பாகத்தான் இருப்பாள். பாடசாலை இடைவேளையின் போது ஒரு நாள் கூட இவனை விட்டு விட்டு உணவுண்ண மாட்டாள். பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்வதும் இவன் கூடவே தான். சஞ்சயனின் வீட்டுக்குக் குறுக்கு வழியில் விரைவில் சென்று விடலாம் என்றாலும் இவள் கூட இன்னும் சிறிது நேரம் கூடக் கழிக்கலாமே என்ற ஆசையில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல, வைஷாலியை அவள் வீட்டில் விட்டு விட்டுத்தான் தன் வீட்டிற்குப் போவான்.

அதுவும் ஒரு விதத்தில் வைஷாலிக்குப் பாதுகாப்பாய் இருந்தது. ஒருநாள் இவர்கள் வீட்டுக்கு நடந்து போய்க் கொண்டிருந்த போது இவள் ஏதோ வாய் காட்டினாள் என்று கூடப் படிக்கும் குழப்படிக்கார பொடியன் ஒருவன் இவளைப் பென்சிலால் குத்துவதற்கு வந்தான். சஞ்சயன்தான் இடையில் புகுந்து அந்தக் குத்தைத் தனது கைகளில் தாங்கிக் கொண்டான். இப்போதும் வலது தோளிற்குச் சற்றுக் கீழே பொட்டாய் ஒரு சின்ன அடையாளம் காணப்படுகிறது. சஞ்சயன் மட்டும் தடுத்திராவிட்டால் அன்று வைஷாலியின் கண் ஒன்று போயிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சஞ்சயன் அவளை முயல் குட்டி என்றுதான் அழைப்பான். அவளும் அவன் பட்டப் பெயர் சொல்லிக் கூப்பிட்டால் மொத்துவாள். இவனும் சிரித்துக் கொண்டே வாங்கிக் கொள்வான்.

சஞ்சயன் நன்றாகப் பாடுவான். இவளோ மூன்று வயதிலிருந்தே பரத நாட்டியம் கற்றுக் கொள்பவள். பாடசாலையின் அனைத்துக் கலை நிகழ்வுகளிலும் இருவரது நிகழ்ச்சிகளும் கண்டிப்பாக இடம் பெறும்.

சஞ்சயனிற்குக் கொஞ்சம் மேடைக் கூச்சம் உண்டு. நிறைந்த சபை முன்னே பாடுவதற்குச் சிறிது பயமும் தயக்கமும். ஆனால் அந்த நிமிடங்களில் அவனைத் தைரியப்படுத்தி அனுப்புவது வைஷாலிதான். அவள் தனது நிகழ்ச்சி முடித்தோ, அல்லது அடுத்து வரப் போகும் தனது நிகழ்ச்சிக்காகவோ மேடைக்குப் பக்கத்து அறையில் காத்திருக்கும் போது இவனை ஆறுதல்படுத்தி மேடைக்கு அனுப்புவாள்.

தனது நிகழ்ச்சிக்காகச் செல்லும் போது இவனைப் பார்த்து சிறு தலையசைப்போடு புன் முறுவலுடன் செல்பவளை வியப்புடன் பார்ப்பான் இவன், எப்படித்தான் துளி பயமும் இல்லாமல் இவ்வாறு சிரித்துக் கொண்டே மேடைக்குச் செல்கிறாள் என்று.

முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்பு வரை இருவரும் இணை பிரியாத தோழர்கள் என்றால் மிகையாகாது.

ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே இருந்த அந்தப் பள்ளியில் இருந்து வெளியேற வேண்டிய நாளும் வந்தது. பிரிவுத் துயரில் தவித்தனர் மாணவர்கள் அனைவரும். சஞ்சயன்தான் அழுது கரைந்தான் எனலாம்.

ஆறாம் வகுப்பிற்கு இருவரும் ஒரே பாடசாலைக்கும் டியூசனுக்கும் செல்வோம் என்று கூறிய வைஷாலி வழக்கம் போலத்தான் இருந்தாள். இவர்கள் விருப்பம் எல்லாம் என்ன அந்தளவு இலகுவில் ஈடேறி விடுமா என்ன?

சஞ்சயன் இவளுக்குக் கொடுத்த வாக்குக்கேற்ப கலவன் பாடசாலைக்குச் செல்ல, வைஷாலியின் வீட்டில் அவள் பேச்சு எடுபடவில்லை. பெண்கள் பாடசாலைக்கு அவள் அனுப்பப்பட்டாள். சஞ்சயனுக்கும் வைஷாலிக்குமான முதல் விலகல் விழுந்தது இங்கே தான்.

பழைய நினைவுகளில் ஊறிப் போயிருந்தவனை தொலைபேசி அழைத்த சத்தம் நடப்பிற்குக் கொண்டு வந்திருந்தது. ஜீன்ஸ் பொக்கட்டிலிருந்த கைத் தொலைபேசியை எடுத்துக் காதில் வைத்தான்.

“ஹலோ... மாமா... எப்படி சுகம்?” என்ற மருமகனின் மழலைக் குரலில் கடந்த கால வலிகள் மறந்து தானும் சிறு பிள்ளையாகி அவனோடு செல்லம் கொஞ்ச ஆரம்பித்தான்.

இங்கே வைஷாலியும் தனது ஆரம்பப் பள்ளி நாட்களின் நினைவுகளில்தான் சஞ்சரித்துக் கொண்டிருந்தாள்.

நினைவுகள் சுகம் சேர்க்குமா? இல்லை ரணமாக்குமா?

**அவள் கனவு நனவாகுமா?**

# இழப்பின் வலி

**ஆதவன்**

சில நாட்களாகவே இந்தத் தளம்பல் இருக்கிறது. இதுவரை வந்த லாபம் முழுவதும் போன கிழமை அழிக்கபட்டதும் பயம் பற்றிக் கொண்டது.

இது பேராசையா? அல்லது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வதன் வெளிப்பாடா? அல்லது மற்றவர்கள் சம்பாதிக்கிறார்கள் என்ற பொறாமையா? என்னால் எதுவென்று இதற்குக் காரணம் கற்பிக்கத் தெரியவில்லை.

என்னைப்போன்றவர்கள் இருக்கிறதை விட்டு பறப்பதற்கு ஆசைப்படும் ஜென்மங்கள் என்று தூற்றவும் சந்தோஷப்படவும் மனிதர்கள் ஆயத்தமாக இருப்பது ஏனோ உண்மைதான்.

“மச்சான் இது தற்காலிகம்தான். ஒண்டுக்கும் கவலைப்படத் தேவையில்லை. சந்தையின் போக்கு அடுத்த வாரங்களில் திரும்பி மேல போகும்.”

தீபன் இன்னும் நம்பிக்கை ஊட்ட பல அட்டவணைகள், அறிக்கைகளை என்னுடன் பகிர்ந்து கொள்வது சற்று ஆறுதலாக இருந்தது. அவற்றைப் போதிய அளவில் புரிந்து கொள்ளும் அறிவு இதுவரை இல்லை. அவனை நம்பினேன்.

கொழும்பு பங்குசந்தைச் சுட்டி ஏழு வீதம் இறங்கியதும் எனது இரண்டு மாதம் வந்த மொத்த லாபமும் மறைந்துவிட்டது. இப்போது போட்ட முதல் மட்டுமே வாங்கிய நான்கு நிறுவன பங்குகளில் இருக்கிறது.

இரவு தூக்கம் வராமல் நீண்ட நேரம் உழன்றதும் காலையில் தீபனுடன் பதற்றத்துடன் கதைத்ததும் சித்ராவுக்குச் சந்தேகத்தை வரவழைத்திருக்கிறது போல. நேரடியாகவே காலை உணவை சாப்பிடும் போது கேட்டாள்.

“என்ன ஒரு மாதிரியா இருக்கு நீங்கள்? ஆர் பேனில?”

“தீபன்தான். நேற்று சந்தை பெரிய அளவில் இறங்கிவிட்டது. தற்காலிக இறக்கம் எண்டு செல்லுறான். அதுதான் யோசிக்கிறன்.”

“என்ன செய்யப் போறிங்கள்? அடைவு வைச்ச நகையை எடுத்து தந்திடுங்கோ சொல்லிப் போட்டன்.”

அந்தச் செய்தியால் அவளுக்கும் பயம் தொற்றிக்கொண்டது.

மனைவி சித்ரா, பிறந்த வீட்டில் இருந்து கொண்டுவந்த நகைகளைப் பொத்தி பொத்தி வைத்திருந்தவள். பெரும் நம்பிக்கை தரும் நடுத்தரவர்க்கத்தின் குடும்பப் பெண்ணின் சேமிப்பு. மகளுக்குக் கொடுப்பது என்று வழி வழியா வந்த நகைகள் அலுமாரியிலேயே வருடக்கணக்கில் காத்திருக்கும். அசையாத சொத்துப் போல.

கள்வர் பயத்தில், விழாக்களுக்கு அணிவதையும் தவிர்த்திருந்தாள். இருந்தும் அனுபவிக்கவில்லை. ஆனால், அதுவரை கையிலேயே பாதுகாப்பாக இருந்தது என்ற துணிவு இந்தச் செய்தியால் இதயத் துடிப்பை அதிகரித்துக் கொண்டிருந்தது.

“ஒண்டுக்கும் கவலைப்படாத தீபன் போன வருசம் நல்ல லாபம் பாத்திருக்கிறான். அவனுக்கு கொழும்பில் தொடர்புகளும் இருக்கு. விக்க வேணும் என்றால் முதலே சொல்லுவான்.” எனக்குள் இருந்த பயத்தை வெளிக்காட்டவில்லை. இந்த பதில் அவளைச் சற்று ஆசுவாசப்படுத்தும் என்று நம்பினேன் நான் நம்பியதைப் போலவே.

இரண்டு மாதங்களுக்கு முன்னர், போன ஐப்பசி கடைசி கிழமை என்று நினைக்கிறேன். அந்த நாள் தீபனிடம் இருந்து அழைப்பு வந்தது. ஒரு வருடம் தொடர்பு இல்லாமல் இருந்தான். தீபனுக்கு தகவல் தொழில்நுட்ப நிறுவனம் ஒன்றில் மென்பொருள் பொறியாளர் என்ற பதவியில் நல்ல சம்பளம் கிடைக்கும் வேலை. குடும்பத்துடன் கொழும்பில் வசதியாக வாழ்கிறான்.

“என்ன மச்சான் எப்பிடி சுகங்கள்?”

“ஏதோ இருக்கிறன். கொரோனா சிக்கலால வீட்டில இருந்து சூம் வகுப்புகள்தான் போகுது” நானும் எனது ஆசிரியர் தொழில் நிலவரத்தை விளங்கப்படுத்தி விட்டு,

“என்ன ஒரு வருடமாக உன்ர சிலமனை காணேல?” என்றேன்.

“வேலையும் அதிகம்தான் அதோட போன தையில இருந்து பங்குச்சந்தைல கொஞ்சம் முதலீடு செய்யிறதிலயும் அதுசம்பந்தமாப் படிப்பதிலும் நேரம் கிடைக்கேல. உன்னையும் ஏன் தொந்தரவு செய்வான் எண்டு இருந்தன்”.

“பங்குச்சந்தை வருமானம் எப்பிடி?”

“சொல்லி வேலையில்லை. இவ்வளவு காலமும் இது தெரியாமல் விட்டத நினைக்க விசர் வருது.”

“ஏன்?”

“பின்ன அப்பிடி ஒரு லாபம். போட்டகாசின்ட ஒண்டரை மடங்கு லாபம் இந்த பத்து மாதத்தில் தெரியுமோ?” என்றான் குதூகலமாக.

அதுவரை செய்திகளிலும் நான் படிப்புக்கும் சாதாரண தர கணித பாடத்தில் பங்கு லாபம் என்ற பகுதியில் அறிந்ததோடு சரி.

தீபன் சொல்லச் சொல்ல நம்ப முடியாத அதிசயம் என்னை ஆட்கொள்ளத் தொடங்கியது.

போன தையில் இருந்து பங்குச்சந்தை உயரும் போக்கில் மிக வேகமாக சுட்டியும் அதை ஒற்றி பெரும்பாலான நிறுவனங்களின் பங்கு விலைகளும் உச்சம் தொட்டதாம். கொழும்பு பங்குச்சந்தை வரலாற்றிலே இதுவரை காலமும் இல்லாத ஆகப்பெரிய ஏற்றம் இந்தப் பத்து மாதங்களில் நடந்தது. அதிஷ்டவசமாக உள்ளே நுழைந்தது இன்று தனக்குப் பெரிய லாபம் தந்திருப்பதை விளக்கினான்.

“நீ உன்ர சேமிப்புகளை என்ன செய்கிறாய்?” என்னை வினவினான்.

“நிலையான வைப்பில் வங்கில வைச்சிருக்கிறன்”



“இப்ப வட்டியை நல்லா குறைச்சுட்டான்கள் பழைய மாதிரி இல்லை”

“ஓம், என்ர கையில என்ன இருக்கு. ஊரொட ஒத்தோட வேண்டியதுதான்” என்றேன் சலிப்புடன் கையாலாகாத்தனமும் வெளிப்பட.

“ஏன் என்னை மாதிரி பங்குச்சந்தையில் முதலிடு?”

“அது ஆபத்தெடா” பலர் சொல்லிக் கேள்விப்பட்டதை சொல்லவும் மறு முனையில் தீபன் விழுந்து விழுந்து சிரித்தான்.

“லூசன் மாதிரி கதைக்காத மச்சான். என்னை பார். வேற எந்த தொழிலிலும் முதலீடுகளிலும் கிடைக்காத லாபத்தை நான் எடுத்திருக்கிறன்” என்றான்.

“அதுக்கு இல்லை” என்று இழுக்கவும்,

“நான் சந்தை சார்ந்த பலருடன் தொடர்பில் இருக்கிறன். உனக்கு ஒரு தரகரின் தொடர்பு இலக்கம் தருகிறேன். அவர்களைத் தொடர்பு கொண்டு கணக்கு ஒன்றை ஆரம்பி” என்று துரிதப்படுத்தினான்.

அடுத்த இரண்டு கிழமையில் கணக்குத் திறந்து எனது சேமிப்பு பணம் முழுவதையும் அந்த கணக்குக்கு மாற்றினேன். மொத்தப் பணம் பெரிய தொகையாக இருந்தால் லாபமும் அதை ஒத்து பெரிதாக வரும் என்று தீபன் உற்சாகப்படுத்த எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

சித்ராவுடன் ஆலோசனை நடத்தி, வரும் லாபம் ஆகக் குறைந்தது இரண்டு மடங்காகும் என்றும் தீபன் ஏற்கெனவே கடந்த மாதங்களில் சாதித்ததும் எங்களின் ஆசையைப் பெருவாரியாகத் தூண்டிவிட்டது.

அவளுக்கும் அது உற்சாகத்தை அளித்திருக்கவேணும். நான் கேக்காமலே அதுவரை பூட்டி வைத்திந்த நகைகளையும் எடுத்துத் தந்தாள். அனைத்தையும் அடைவில் வைத்து அந்தப் பணத்தையும் பயன்படுத்தினோம். மாதாமாதம் வரும் லாபத்தில் ஒவ்வொன்றா மீட்பது என்ற உடன்பாடும் எங்களுக்குள்ளே ஒரு நம்பிக்கையைத் துளிர்த்தது.

கணக்கில் போட்ட பணத்தில் நான்கு நிறுவனப் பங்குகளை வாங்கினேன்.

மார்கழி மாதம் பத்து வீத லாபத்தை எனது கணக்குக் காட்டியது. சித்ராவுக்கும் சந்தோஷம் தாளவில்லை.

ஆனால் எங்களின் மகிழ்ச்சி பல நாட்கள் நிலைக்கவில்லை. தை முதல் கிழமையில் பங்கு விலைகள் மாறாமல் பக்கவாட்டில் நகரத் தொடங்கி அடுத்த இரண்டு கிழமைகள் அதே விலையில் ஏறிஇறங்குவதாய் நின்றது.

தைமாதத்தின் கடைசிக் கிழமை சடுதியாக விழுந்து லாபம் எதுவும் இல்லாமல் போய்விட்டது.

இந்த நிலையில்தான் தீபன் சொன்ன காரணம் சற்று தெம்பை ஊட்டியது. விலைகளில் சிறிய இறக்கம் சில நாட்களுக்கு இருந்து திரும்ப மேல் எழும் என்பதே அவனின் கணிப்பு. ஆனால் அவனோ இதுவரை வந்த லாபத்தில் ஒருபகுதியை எடுத்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னான்.

எனது இதயம் படபடக்க கணக்கை திறந்தேன். பெரிய இடைவெளிவிட்டு ஏழு வீத இறக்கம் பங்கு சந்தை விழுந்தது. பெரும்பாலான நிறுவனங்களின் பங்குவிலைகள் சிவப்பு நிற மாற்றத்தை வெளிக்காட்டியது. நான் வைத்திருந்த நான்கு நிறுவனப் பங்குகளும் சடுதியாக பத்து வீதத்துக்கு வீழ்ந்து எனக்கு எதிர்பாராத நட்டத்தைத் தந்திருந்தது.

சித்ராவுக்கு இதை இப்போது சொல்லவேண்டாம். தீபன் சொன்னமாதிரி மேலெழும் போது நடந்ததை அவளுக்கு விபரித்து சொல்ல முடிவெடுத்தேன்.

“இண்டைக்கு லாபம் தானே?” அறையின் வாசலில் நின்றபடி கேட்டாள். பக்கத்து கோவிலுக்குப் போய் வந்திருந்தாள். நெற்றியில் வீபூதிக் குறியும் சந்தனப்பொட்டும் ஈரம் காயாமல் இருந்தது. அவளது பிராத்தனை பலிக்கட்டும் என்று உள்ளூற மனம் ஏங்கியது.

“இல்லை இப்ப நட்டம்தான் காட்டுது. ரெண்டு மூண்டு நாள் காத்திருக்கவேணும். நீ ஏன் சும்மா பதட்டப்படுகிறாய்” தைரியப்படுத்தினேன்.

அடுத்து வந்த நாட்கள் பெரும் சரிவு. எனது கணக்கு மீளமுடியாத நட்டத்தை காட்டியது சித்ராவை சமாளித்து உண்மைநிலையை சொல்லாமலே தவிர்த்தேன்.

அடுத்து என்ன செய்வது என்று முடிவெடுக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை. தீபன் வேறு எனது அழைப்பை தவிர்க்கிறான். இருப்பதை விற்று வெளியில் வரவும் சங்கடமாக இருந்தது. அடைவு வைத்த நகைகளை எடுப்பதற்கே மீதம் இருக்கும் பணம் போதாமல் இருந்தது.

அன்று வெள்ளிக்கிழமை மதியம். சித்ரா, பூசை கட்ட பிள்ளையார் கோவிலுக்குப் போவதாகச் சொல்லி கிளம்பினவள். இன்னும் வரவில்லை.

அவசரமாகக் கழிப்பறைக்குச் சென்று திரும்பி அறையினுள் வரவும் அவள் என்னை நோக்கி பிடரி அடிபட விழவும் பாய்ந்து சென்று தாங்கினேன். உடலில் ஆட்டம் அசைவு இல்லை. முகத்தில் தண்ணீர் தெளித்தும் பயன் இல்லாததால் விரைவாக ஆம்புலன்ஸை அழைத்தபடி மடியில் அவளின் தலையை வைத்திருந்தபடி நிமிர்ந்து பார்த்தேன். கணனி திரையில் ஐம்பத்தியாறு வீதம் இழப்பு இன்னும் சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்து கொண்டிருந்தது.

சித்திரா போன பின் இந்த இரண்டு மாதமும் கணக்கைத் திறக்கவில்லை. ஒரு இழப்பின் தொடர்ச்சி மீளமுடியாத இழப்பை தாரைவார்த்துவிட்டது.

இன்று, ஏதாவது இருப்பதை எடுத்து கணக்கை மூடும் நோக்கோடு திறந்தேன். கணனிக்கு மேலே சுவரில் மாலைபோட்டு தொங்கிய சித்ரா அணிந்திருந்த பச்சை நிற சேலை போல லாபத்தைக் காட்டிக்கொண்டு இருந்தது நான்கு நிறுவனத்தின் கணக்கும்.

■

**போன தையில் இருந்து பங்குச்சந்தை உயரும் போக்கில் மிக வேகமாக சுட்டியும் அதை ஒற்றி பெரும்பாலான நிறுவனங்களின் பங்கு விலைகளும் உச்சம் தொட்டதாம். கொழும்பு பங்குச்சந்தை வரலாற்றிலே இதுவரை காலமும் இல்லாத ஆகப்பெரிய ஏற்றம் இந்தப் பத்து மாதங்களில் நடந்தது. அதிஷ்டவசமாக உள்ளே நுழைந்தது இன்று தனக்குப் பெரிய லாபம் தந்திருப்பதை விளக்கினான். “நீ உன்ர சேமிப்புகளை என்ன செய்கிறாய்?” என்னை வினவினான்.**

வேதநாயகம் தபேந்திரன்






# வேகமும் விவேகமும்...

வேகம், விவேகம் உள்ள சமூகத்தில் நாம் வாழுகின்றோமா? என்ற கேள்வி அடிக்கடி மனதில் எழுகின்றது.

எமது நாட்டில் நாளாந்தம் வீதி விபத்துகளால் சராசரி ஆறு பேர் இறப்பதாக அரசாங்கத் தகவல் அறிக்கைகள் கூறுகின்றன.

இப்படி ஒரு அவல நிலைக்கு நாம் கூட்டுப் பொறுப்பு ஏற்க வேண்டும்.

வீதிகளில் பாதசாரிக் கடவைகள் வெள்ளை அல்லது மஞ்சள் கோடுகளால் வரையப்பட்டுள்ளன. இக் கோட்டின் ஊடாக நாம் எப்படிப் பயணம் செய்ய வேண்டுமென்ற விபரம் எம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

பாதசாரிக் கடவைகள் பாதசாரிகளது உரிமைகளை நிலைநாட்டும் ஒரு பயணப் பாதை என்பதில் சந்தேகம் ஏதுமில்லை. ஆனால், அதை எப்படிக் கடக்க வேண்டுமென்பதில் எம்மவர் பலருக்குத் தெளிவில்லை.

பெருந்தெருக்களில் உள்ள பாதசாரிக் கடவைகளின் ஊடாக வீதியின் மறுகரைக்குச் செல்ல விரும்பும் ஒருவர் முதலில் வீதியின் இரு புறமும் 200 மீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் எதுவும் வரவில்லை என்பதைப் பார்வையிட்டு உறுதி செய்தல் வேண்டும்.

பாதசாரிக் கடவையில் இறங்கும் போது வீதியின் இரு புறமும் வரும் வாகனங்களுக்கு வலது புறம் வலது கையைக் காட்டி, இடது புறம் வரும் வாகனங்களுக்கு இடது கையைக் காட்டிப் பாதுகாப்பை உறுதி செய்த பின்பாகக் கடத்தல் வேண்டும்.

இது எமக்குரிய கடவை தானே நாம் எப்போது இறங்கி நடந்தாலும் வாகனங்கள் நிற்க வேண்டுமென நினைப்பது தவறானது. அப்படி நடப்பதால் இடம் பெறும் விபத்துகளும் உண்டு.

சில இடங்களில் பாதசாரிகள் வீதிக் கடவையில் பயணிப்பதற்கான மின் சமிக்ஞை விளக்கு எரியும் முறை இருக்கும்.

பாதசாரிகள் அந்த மின் விளக்கு சமிக்ஞைக்குரிய சுவிச்சை அழுத்தியதும் சில நிமிடங்களில் வெளிச்சம் ஒளிர வீதியைக் கடக்கலாம்.

போக்குவரத்துப் பொலிஸார் தமது கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டுமென்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால் வீதிகளின் திடீர் திருப்பத்தில் நின்று வாகனங்களை மறித்து ஆவணங்களைப் பரிசோதிக்கின்றனர்.

திடீரென வாகனங்களை மறிக்கும் போது விபரம் அறியாமல் பின்னால் வரும் வாகனங்களால் விபத்து ஏற்படுகின்றது.

போக்குவரத்துக் குற்றங்களுக்கு தண்டப் பணம் விதிக்கும் போது போக்குவரத்துப் பொலிஸார் குற்றம் நடைபெற்ற விதம் குறித்தே கூறுகின்றனர். ஆனால், அந்தக் குற்றத்தைத் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென அறிவுறுத்துவதில்லை. மிகச் சில போக்குவரத்துப் பொலிஸார் மட்டுமே அறிவுறுத்தி வழிகாட்டுகின்றனர். குற்றம் நிகழாமல் இருப்பதற்கு என்ன விதமாக வாகனத்தைச் செலுத்த வேண்டுமென வழிகாட்டும் பண்பு பொலிஸாருக்கு அவசியம் தேவையானது.

**"போக்குவரத்துக் குற்றங்களுக்கு தண்டப்பணம் விதிக்கும் போது போக்குவரத்துப் பொலிஸார் குற்றம் நடைபெற்ற விதம் குறித்தே கூறுகின்றனர். ஆனால், அந்தக் குற்றத்தைத் தவிர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டுமென அறிவுறுத்துவதில்லை. மிகச் சில போக்குவரத்துப் பொலிஸார் மட்டுமே அறிவுறுத்தி வழிகாட்டுகின்றனர். குற்றம் நிகழாமல் இருப்பதற்கு என்ன விதமாக வாகனத்தைச் செலுத்த வேண்டுமென வழிகாட் டும் பண்பு பொலிஸாருக்கு அவசியம் தேவையானது."**

சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்கு எழுத்துப் பரீட்சையில் சித்தி பெறுவோரில் பலர் வாகனம் செலுத்தும் போது அந்த விதிகளைக் கடைப்பிடிப்பதில்லை என்பது வருத்தம் தரும் செய்தியாகும். ஏனோ தானோவெனப் படித்துப் பரீட்சையில் சித்தியடைகின்றனர்.

பொதுமக்கள் பங்குபற்றும் நிகழ்வுகளுக்குப் போக்குவரத்துப் பொலிஸார் சமூகமளித்து ஒரு மணி நேரத்தைச் செலவிட்டுப் போக்குவரத்து விதிகளை அவர்கள் இலகுவாக விளங்கும் வகையில் சொல்லிக் கொள்வது நன்றாகும்.

மோட்டார் சைக்கிள்களே மிக அதிகமாக உள்ளன. மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒரே நேரத்தில் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளாகும் செய்திகள் கூட வருகின்றன.

ஆகவே மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவோருக்குப் போக்குவரத்து விதிகள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் கட்டாயம் தேவையானவை.

பெருந்தெரு ஒன்றில் மோட்டார் சைக்கிளில் செல்லும் ஒருவர் வலது பக்கம் திரும்புவதாயின் 100 மீற்றர் தூரத்துக்கு முன்பாக சிக்னல் போடுதல் வேண்டும். வீதியின் முன்புறமும் பின்புறமும் பார்வையிட்டு பாதுகாப்பை உறுதிப்படுத்தித் திரும்பும் இடத்திற்கு முன்பாக 25 மீற்றர் தூரம் இருக்கும் போது வீதியின் மத்திய பகுதிக்கு வரல் வேண்டும்.

தனது பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு வலது புறமாகத் திரும்புதல் வேண்டும். அவ்வாறு திரும்ப முடியாத இடத்து வீதியின் மத்திய பகுதியில் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு கால் ஒன்றை ஊன்றிக் கொண்டு நிற்றல் வேண்டும். பாதுகாப்பாகத் திரும்பும் நிலை வரும் போது திரும்புதல் வேண்டும்.

ஆனால், எமது பிரதேசத்தில் சிலர் திடீரென வலது புறமாகத் திரும்ப முற்படுகின்றனர் அல்லது வீதியின் இடது கரையில் நின்று விட்டுப் பாதுகாப்பான நிலைமை வரும் போது வலது புறமாகத் திரும்புகின்றனர்.இந்த நிலைமைகளில் விபத்துகள் பரவலாக ஏற்படுகின்றன.

வலது பக்கம் திரும்பச் சிக்னல் போட்டு விட்டு இடது புறம் திரும்புவோருமுண்டு.


வீதியில் கார், வான் போன்ற வாகனங்களில் செல்வோர் வீதியின் இடது கரையில் வாகனத்தை நிறுத்தி விட்டுப் பின்புறமாக அவதானம் செலுத்தாமல் திடீரென வலது புறக் கதவைத் திறக்கின்றனர். இதனை அறியாது பின்னால் வாகனத்தில் அல்லது மோட்டார் சைக்கிளில் வரும் ஒருவர் விபத்துக்கு உள்ளாகி இறப்புகள், காயப்படுதல் போன்றவை ஏற்படுகின்றன.




இன்று சீ.சீ.ரி.வி கமெராக்களை வணிக நிலையங்கள் பரவலாகப் பொருத்தி வருகின்றன. ஆனால் வீதியை நோக்காமல் தமது வணிக நிலையத்தின் வாசலை மட்டும் சில அடி தூரம் பார்ப்பதாக அமைக்கின்றனர். இதனால் வீதிப் பரப்பில் நிகழும் குற்றச் செயல்கள், விபத்துகள் போன்றவற்றைப் பார்வையிட்டு பரிகாரம் தேட முடியாது உள்ளது.

வணிக நிலையங்கள்,பொது நிறுவனங்கள், வீடுகளுக்கு சீ.சீ.ரி.வி கமெரா பொருத்தும் போது கட்டாயமாக வீதிப் பரப்பு முழுவதையும் கண்காணிக்கும்படி பொருத்துதல் வேண்டுமென்ற சட்ட நடைமுறை தேவையானது.

நாடு முழுவதும் காப்பெற் வீதிகளும், விரைவுப் பாதைகளும் உள்ளன. அதே வேளை வீதி விபத்துகளும் நாளாந்தம் பல பதிவாகின்றன. வேகத்தைக் குறைத்து விவேகத்துடன் செயற்பட்டால் விபத்துகளைத் தவிர்க்கலாம். ■



# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

07

◒ ரமணி



தமிழ்த் திரை உலகின் அசைக்க முடியாத வில்லன் எம்.என்.நம்பியார், எம்.ஆர்.ராதா, அசோகன், பி.எஸ்.வீரப்பா போன்றவர்களுக்கு மத்தியில் தனித்துவமாக மிளிர்ந்தவர். எ.ஜி.ஆரின் படத்தில் கதாநாயகி மாறலாம். ஆனால், நம்பியார் மாறுவதில்லை. உருட்டும் விழி, மிரட்டுப் பார்வை, கையைப் பிசைந்து கொண்டு அதட்டும் பாணி இவை எல்லாம் நம்பியாரின் தனித்துவ அடையாளங்கள். மிமிக்கிரி கலைஞர்களை வாழ வைப்பவர்களில் நம்பியாரும் ஒருவர்.

கேரளாவில் நம்பியார் வசித்தபோது தகப்பன் இறந்து விட்டார். எட்டு வயதான நம்பியார் ஊட்டியில் உள்ள சகோதரியிடம் சென்றார். சகோதரியின் கணவர் டீக்கடை வைத்திருந்தார். அங்குள்ள பாடசாலையில் ஐந்தாம் வகுப்பு வரை படித்தார். வியாபாரம் படுத்து விடவே அங்கிருந்து கிளம்பி நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகக் கம்பனியில் சேர்ந்தார். தங்குவதற்கு இடமும் சாப்பிடுவதற்கு சாப்பாடும் மட்டும் நம்பியாரின் தேவையாக இருந்தது. எதிர் காலத்தைப் பற்றி அவர் நினைக்கவில்லை. நாடகத்தைப் பற்றியோ, நடிப்பைப் பற்றியோ எதுவும் நம்பியாருக்குத் தெரியாது. சமையல்காரருக்கு உதவியாளராக நம்பியார் சேர்ந்தார். சமையல் செய்பவர்கள் சாப்பிடலாம், அங்கு தங்கலாம். காசு கொடுக்க மாட்டார்கள். எதிர் காலத்தில் வில்லனாக ரசிகர்களை அச்சுறுத்துவேன் என்ற எதிர்பார்ப்பு எதுவும் இல்லாமல் நம்பியார் வேலை செய்தார்.

சின்ன வேடங்களில் நடிப்பவர்கள் பெரிய வேடங்களில் நடிக்க ஆசைப்படுவார்கள். சமையல் வேலைக்கு உதவி செய்த நம்பியாருக்கு நடிப்பில் ஆர்வம் உண்டாகவில்லை. கதாநாயகனுக்கு இணையான வில்லனிடம் வேலை வாங்குகிறோம் எனத் தெரியாமல் அங்குள்ளவர்கள் நம்பியாரிடம் வேலை வாங்கினார்கள்.

நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகக் கம்பனியில் பிசியாக நடித்த பலர் காணாமல் போய்விட்டார்கள். நம்பியார் மட்டும் இன்றைக்கும் பேசப்படுகிறார். தங்கும் இடமும் சாப்பாடும் இருந்தால் போதுமா கையில் நாலு காசு பார்க்க வேண்டாமா என்ற சிந்தனை நம்பியாருக்கு உதித்த போது நடிக்கத் தொடங்கினார். நடிப்பவர்களுக்குச் சம்பளம் கொடுப்பார்கள். தேவைகளைப் பூர்த்தி செய்ய காசு வேண்டும். அதனால் நம்பியார் நடிக்கத் தொடங்கினார்.

பக்த ராமதாஸ் என்ற நாடகத்தை பல கொம்பனிகள் மேடையேற்றின. ராஜமாணிக்கம் பிள்ளையின் நாடகத்துக்கு ஈடு இணையாக எதுவும் இருக்கவில்லை. பக்த ராமதாஸ் நாடகத்தில் நவாப் வேடத்தில் நடித்ததனால் " நவாப்" என்ற பட்டம் ராஜமாணிக்கம் பிள்ளையின் பெயருக்கு முன்னால் ஒட்டிக் கொண்டது. நவாப் ராஜமாணிக்கம் என்ற பெயர் பிரபலமானது.

"சரியான நம்பியார் நீ" என்று வில்லத்தனத்திற்கு உவமை சொல்லும் அளவிற்கு புகழ்பெற்ற வில்லன் நம்பியார். காமெடி என்றால் கவுண்டமணி-செந்தில் என்று நாம் ஒரு கூட்டணியைச் சொல்லிவிடுவோம். அதுபோலவான கூட்டணிதான், எம்.ஜி.ஆர்-நம்பியார், ஹீரோ - வில்லன் கூட்டணி, எம்.ஜி.ஆர் ஹீரோவாக வெற்றிபெற்றார் என்றால் அவரைத் தூக்கி விட்ட ஒரு வில்லனாகவே நம்பியார் இருந்தார். 'எப்போதுமே வில்லன் வேடம்தான் கொடுக்கிறார்கள்' என்று நொந்துகொண்ட தன் மனைவியிடம் " வில்லன் இல்லாத கதையில் ஹீரோவுக்கு மதிப்பு இல்லை" என்று அசத்தலாகச் சொல்லிய ரீல் வில்லன், ரியல் ஹீரோ நம்பியார்.

15 வயது முதல் பெண் வேடம், நகைச்சுவை வேடம் என நாடகங்களில் தன்னுடைய திறமையைக் காட்டிய நம்பியார் 23 ஆவது வயதில் வில்லனாக நாடகத்தில் நடித்தார். அதுவே பின் நாட்களில் அவரது ஆஸ்தான வேடமாகவும் அமைந்தது. வித்யாபதி, ராஜகுமாரி எனத் தன்னுடைய திரைப்பட வாழ்க்கையை தொடர்ந்தாலும் வேலைக்காரி, திகம்பர சாமியார் படங்களுக்குப் பிறகே நம்பியார் அடுத்த கட்ட பயணத்திற்கு தயாரானார். குறிப்பாக சர்வாதிகாரி படத்தில் சர்வாதிகாரியாவே வாழ்ந்தார் நம்பியார். அதன் பின்னர் அவர் கொடூர வில்லனாக மக்கள் மனதில் பதிந்தார்.

மிகப் பெரிய வெற்றி பெற்ற பக்த ராமதாஸ் நாடகத்தை படமாகத் தயாரிக்க ஒரு நிறுவனம் முன் வந்தது. நாடகத்தில் நடித்தவர்கள் தான் படத்திலும் நடிப்பார்கள் என நவாப் ராஜமாணிக்கம் பிள்ளை நிபந்தனை விதித்தார். அந்த நிபந்தனையால் நம்பியார் சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் அமைந்தது. அந்தப் படக்தில் நடித்ததற்காக நம்பியாருக்கு 40 ரூபா சம்பளம் கொடுக்கப்பட்டது. பெண்கள் இல்லாத படத்தில் நம்பியார் சிறு வேடத்தில் நடித்தார். முதல் படத்துடன் சினிமாவை மறந்துவிட்டு மீண்டும் நாடகத்தில் ஆர்வம் காட்டினார்.

நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகக் குழுவில் இருந்து வெளியேறிய கிருஷ்ணசாமி, சக்தி நாடகக் குழுவை உருவாக்கினார். சக்தி கிருஷ்ணசாமியின் அழைப்பின் பேரில் நம்பியாரும் சக்தி நாடகக் குழுவில் சேர்ந்தார்.

1944 ஆம் ஆண்டு நடந்த அந்த மாற்றத்தின் பின்னர் நம்பியாரின் வாழ்வில் ஒளி வீசியது. சக்தி கிருஷ்ணசாமி எழுதிய " கவியின் கனவு" எனும் நாடகத்தில் ராஜகுருவாக நம்பியார் நடித்தார். அதன் பின்னர் குரு அவரை உச்சாணிக் கொம்பில் தூக்கி நிறுத்தியது.

கவியின் கனவு நாடகத்தைப் பார்த்த ஜூபிடர் பிக்ஸர்ஸ் அதிபர் சோமுவுக்கு கவியாக நடித்த எஸ்.வி.சுப்பையா, ராஜகுருவாக நடித்த நம்பியார் ஆகிய இருவரின் நடிப்பையும் வெகுவாக ரசித்தார். நல்ல நடிகர்களைத் தன்னுடன் வைத்திருக்க வேண்டும் என்பதால் அவர்களை ஜூபிடர் பிக்ஸர்ஸில் நிரந்தர ஒப்பந்தம் செய்தார்.

வடுவூர் கே. துரைசாமி ஐயங்காரின் நாவலை அடிப்படையாகக் கொண்டு உருவான வித்யாவதி என்ற படத்தில் பாக்கியம் என்ற நடிகையுடன் ஜோடி சேர்ந்து நகைச்சுவைப் பாத்திரத்தில் நம்பியார் நடித்தார். என்.எஸ்.கிருஷ்ணன் டி.ஏ.மதுரம், காளி என்.ரத்திணம், சி.டி ராஜகாந்தம் ஆகியோர் நகைச்சுவை ஜோடிகளாக வலம் வந்தனர். அவர்களைப்போன்று நம்பியாரும் பாக்கியமும் புகழடைவார்கள் என ஜூபிடர் பிக்ஸர்ஸ் சோமு எதிர்பார்த்தார். சுமார் பன்னிரண்டு வருடங்களின் பின்னர் திரையில் தோன்றிய நம்பியாரை யாரும் கண்டு கொள்ளவில்லை. அதனால், கவலைப்படாத நம்பியார் மீண்டும் நாடக உலகின் பக்கம் கவனத்தைத் திருப்பினார்.

1947 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு விஷப் பரீட்சை நம்பியாரைத் தேடிச் சென்றது. "கஞ்சன்" என்ற படத்தில் நம்பியார் கதாநாயகனாக நடித்தார். நம்பியாரின் தகப்பனாக எஸ்.வி.சுப்பையா நடித்தார். அந்தப் படமும் முடங்கியது. சினிமாவில் பிரகாசிக்க முடியவில்லை என்பதையிட்டு நம்பியார் மனம் வருந்தவில்லை. நம்பியார் எதிர்பாராத திருப்பம் " மந்திரி குமாரி" மூலம் நடந்தது. எம்.ஜி.ஆர் கதாநாயகனாக நடிக்கும் மந்திரி குமாரி எனும் படத்தில் பிரதான வில்லன் வேடத்தில் நடிப்பதற்கு மார்டன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம் தகுதியான ஒருவரைத் தேடினார். நம்பியாரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவர் அழைக்கப்பட்டார்.

டி.ஆர். சுந்தரத்துக்கு நம்பியாரைப் பிடித்துவிட்டது. மிகப்பெரிய தொகை கொடுத்து நம்பியாரை ஒப்பந்தம் செய்தார் டி.ஆர்.சுந்தரம். தனது சினிமா வாழ்க்கை இவ்வளவுதான் எனக் கருதிய நம்பியாருக்கு மந்திரி குமாரி புது வாழ்வு கொடுத்தது. எம்.ஜி.ஆருக்கு எதிரான இந்த வில்லன் யார் என அனைவரும் உற்று நோக்கினர். கலைஞர் கருணாநிதியின் வசனம் அன்றைய அரசியலைப் பேசியது. ராஜகுருவான வில்லன் நம்பியார் அனைவரையும் மிரட்டினார். அடுத்து வெளியாகிய "சர்வாதிகாரி" யிலும் கதாநாயகன் - வில்லன் ஜோடி ரசிகர்களின் வரவேற்பைப் பெற்றது.

நம்பியாரின் மீது நம்பிக்கை வைத்த ஆர்.டி.சுந்தரம் அவரை கதாநாயகனாகப் பார்க்க விரும்பினார். "கல்யாணி" படத்தில் நம்பியாரை கதாநாயகனாக்கினார் சுந்தரம். அந்தப் படமும் தோல்வியடைந்ததால் மீண்டும் மிரட்டும் வில்லனாகினார் நம்பியார்.

நம்பியார் என்ற பெயருக்கு முன்னால் இருக்கும் எம்.என். என்ற இரு எழுத்துகளில் எம் என்பது அவருடைய தந்தையார் கெளு நம்பியாரின் இல்லப்பெயரான 'மஞ்சேரி'யைக் குறிக்கும். என் என்பது பெற்றோர் அவருக்கு இட்ட நாராயணன் என்ற பெயரைக் குறிக்கும். அறிஞர் அண்ணா எழுதிய 'வேலைக்காரி'யும் மாடர்ன் தியேட்டர்ஸின் 'திகம்பர சாமியா'ரும் நம்பியாரின் திரை வாழ்க்கையை வேறு திசையில் திருப்பிவிட்டன. 'சர்வாதிகாரி' படத்தில் மகாவர்மன் என்ற சர்வாதிகாரியாக நடித்த நம்பியாரை அடக்கும் நாயகன் பிரதாபனாக எம்.ஜி.ஆர் நடித்ததும் பெரும் திருப்பமாக அமைந்தது. 'சர்வாதிகாரி' படத்துக்குப் பின்னரே எம்.ஜி.ஆர் கதாநாயகன் என்றால் நம்பியார்தான் வில்லன் என்ற நிலை உருவானது.

திருமணத்தின்போது நம்பியாருக்கு மாப்பிள்ளைத் தோழனாக இருந்தவர் எம்.ஜி.ஆர். கதாநாயகி மாறினாலும் வில்லனில் மாற்றம் இல்லை. எத்தனை வில்லன்கள் வந்தாலும் எம்.ஜி.ஆருக்கு வில்லன் நம்பியார்தான் என்ற நிலையை, 'மந்திரிகுமாரி', 'ஆயிரத்தில் ஒருவன்', 'அரசகட்டளை', 'தாய் சொல்லைத் தட்டாதே', 'எங்க வீட்டுப் பிள்ளை' தொடங்கிப் பல வெற்றிப் படங்கள் உருவாக்கின. தோல்விப் படமே என்றாலும் போட்ட முதலுக்கு நஷ்டமில்லாத வசூல் உறுதி என்ற நிலையை உருவாக்கியது இந்த ஹீரோ - வில்லன் கூட்டணி. எம்.ஜி.ஆரின் ஆஸ்தான வில்லன் என்றபோதும் சிவாஜி, ஜெமினி கணேசனுக்கும் வில்லனாக நடிக்கத் தயங்கவில்லை நம்பியார்.

கொடூர வில்லனாகப் புகழ்பெற்றுவிட்ட நிலையில் 'பாசமலர்' ,'ரகசிய போலீஸ் 115', 'கண்ணே பாப்பா' உள்ளிட்ட பல படங்களில் குணச்சித்திர வேடம் ஏற்று நடித்து, நம்பியாரா இவர் என வியக்க வைத்திருக்கிறார். 'மக்களைப் பெற்ற மகராசி'யில் எம்.என்.ராஜத்துடன் இணைந்து 'ஒன்று சேர்ந்த அன்பு மாறுமா?' டூயட் பாடினார். அதில் நம்பியாரின் நடிப்பைப் பார்த்து, "நீ ஏன் கதாநாயகனாக நடிக்காமல் போனாய்?" என உடன் நடித்த சிவாஜியைக் கேட்க வைத்தவர். கதாபாத்திரத்துக்காகச் சிறப்பு ஒப்பனை போட்டுக்கொண்ட முதல் வில்லன் நடிகர் நம்பியார்தான். ஸ்ரீதரின் 'நெஞ்சம் மறப்பதில்லை' படத்துக்காக 109 வயதுக் கிழவராக 3 மணி நேரம் சிறப்பு ஒப்பனை போட்டுக்கொண்டார்.

"கிராமப்புறங்களில் என்னைக் கண்டதும் பெண்கள் திட்டுவதும், பயந்து ஓடுவதும்தான் எனது நடிப்புக்குக் கிடைத்த உண்மையான விருது" என்று கூறியிருக்கிறார் நம்பியார். அறிஞர் அண்ணா, எம்.ஜி.ஆர்., மு.கருணாநிதி, வி.என்.ஜானகி, ஜெ.ஜெயலலிதா, என்.டி.ராமாராவ் ஆகிய ஆறு முதலமைச்சர்களுடன் கலையுலகில் இணைந்து பணிபுரிந்தவர் இவர் மட்டும்தான். நாயகன், நாயகனின் நண்பன், காமெடியன், வில்லன், குணசித்திரம் என்று பலவிதக் கதாபாத்திரங்களில் நடித்த நம்பியார் செந்தமிழ் வசனம் பேசி நடிக்கும் வேடங்களைப் பெரிதும் விரும்பினார்.

'அம்பிகாபதி' படத்தில் ஒட்டக் கூத்தராகவும், 'ஹறிச்சந்திரா' படத்தில் விஸ்வா மித்திரராகவும் நடித்ததைத் தனக்குப் பிடித்த கதாபாத்திரங்களின் பட்டியலில் வைத்திருக்கிறார். கடைசியாகக் கடந்த 2006 ஆம் ஆண்டு விஜயகாந்துடன் நடித்த 'சுதேசி' என்ற படத்துடன் சுமார் 750 தமிழ்ப் படங்களில் அவர் நடித்திருக்கிறார்.

திரையில் வில்லனான நம்பியார் நிஜத்தில் கதாநாயகன். ஐயப்ப பக்தரான அவரால் திரை உலகில் உள்ள பலர் ஐயப்ப பக்தராகினர். ■







# நீங்காத நினைவுகளில்... மலையக மண்ணின் மைந்தர்கள்

முருகபூபதி

நினைவுகள் சாசுவதமானவை. நினைவுகளை தேக்கிவைப்பதற்கு நினைவாற்றலும் தேவை. அத்துடன் நினைவுகள்தான் மனச்சாட்சி. அத்துடன் நீதி புகட்டும் ஆவணம்.

இலங்கையில் பசுமையை படரச்செய்த மலையக மக்களின் வாழ்க்கைப் போராட்டத்தை, மலையகத்தின் ஆத்மாவை கலை, இலக்கியம் மற்றும் ஊடகத்துறையில் பதிவுசெய்த சில ஆளுமைகள் பற்றிய தனது பசுமையான நினைவுகளை



எழுத்தாளர், ஆய்வாளர், இலங்கை அரச மட்டத்தில் பல உயரிய பதவிகளை வகித்திருக்கும் எம். வாமதேவன் "நீங்காத நினைவுகளில் மலையக மண்ணின் மைந்தர்கள்" என்ற தலைப்பில் எழுதியிருக்கிறார்.

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அண்மையில் நடத்திய இலங்கை எழுத்தாளர்களின் நூல்களுக்குப் பரிசுவழங்கும் திட்டத்தின் அடிப்படையில் நடத்திய போட்டியில் கட்டுரைப்பிரிவில் தாம் எழுதிய "குன்றிலிருந்து கோட்டைக்கு" நூலுக்கு இலங்கை நாணயத்தில் ஐம்பதாயிரம் ரூபா பரிசினைப்பெற்றிருக்கும் எழுத்தாளர் வாமதேவனுக்கு வாழ்த்துக் கூறியவாறு, இந்நூல் பற்றிய நயப்புரைக்குள் வருகின்றேன்.

கல்வி, தொழிற்சங்கம், அரசியல், நிர்வாகம், இலக்கியம், ஊடகம் முதலான துறைகளில் காத்திரமான பங்களிப்பினை வழங்கி அமரத்துவம் எய்திவிட்ட, இர. சிவலிங்கம், எஸ். திருச்செந்தூரன், டி.வி. மாரிமுத்து, எம். சின்னத்தம்பி, வி. கே. வெள்ளையன், பெ. சந்திரசேகரன், ஓ. ஏ. இராமையா, எம். இராமலிங்கம், சி. நவரட்ன, பி. முருகேசு, சி. வி. வேலுப்பிள்ளை, சாரல்நாடன், தமிழோவியன், மல்லிகை சி. குமார், எஸ். எம். கார்மேகம், ந.நெடுஞ்செழியன், பொன். கிருஷ்ணசாமி ஆகியோர் பற்றிய நினைவுகளை நூலாசிரியர் வாமதேவன் தொகுத்து வழங்கியிருக்கிறார்.


அவர்களின் வாழ்க்கையையும் பணிகளையும் சித்திரிக்கும் இந்த நூலைத் திறந்ததும் மனதை அதிர வைக்கும் செய்தியையும் அறிந்துகொள்கின்றோம்.

அதனைப்பார்த்தவுடன் மனம் கனத்துப்போனது. சில நிமிடங்கள் மனம் உறைந்துவிட்டது.

நூலாசிரியர் வாமதேவனின் அருமைத் தந்தையாரும் அன்புச்சகோதரிகள் மூவரும் 1966 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அப்புத்தளை பெரகலை மண்சரிவில் உயிர் நீத்திருக்கும் செய்தியே அது.

அவர்களுக்கும் அதன்பின்னர் இயற்கை எய்திய அன்புத்தாயாருக்கும் நூலாசிரியர், இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார்.

மலையகத்தை பசுமையாக்கி, இலங்கையின் அந்நியச் செலாவணியில் 60 சதவீதத்தை ஈட்டித் தந்த மக்களின் வாழ்க்கை, இறுதியில் அவர்களை நாடற்றவர்களாக்கியது. அவர்கள் இரண்டு அரசுகளின் ஒப்பந்தங்களின் அடிப்படையில் கப்பலேற்றப்பட்டார்கள். எஞ்சியவர்களின் வாழ்க்கைத் தரம், குடியிருப்பு, கல்வி முதலான பல விடயங்கள் பற்றி அக்கறையோடு கவனம் செலுத்தி உழைத்த உத்தமர்களின் பணிகளைத் தனது நினைவுகளிலிருந்து பதிவு செய்துள்ளார் வாமதேவன்.




மலையகத்தில் புகழ் பெற்ற ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரி சமூகத்திற்கு வழங்கியிருக்கும் ஆளுமைகள் பற்றிய பல செய்திகள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

வாமதேவன், இலங்கை அரச மட்டத்தில் நிர்வாகத் துறையில் பல உச்சங்களைத் தொட்டவர். அவர், தான் கல்வி கற்ற காலத்திலும் பல்கலைக்கழகம் சென்ற பின்னரும், உயர் பதவிகளில் அமர்ந்ததையடுத்தும், தொடர்ச்சியாக தொடர்பிலும் உறவிலுமிருந்த 17 ஆளுமைகளின் சிறப்பியல்புகளை இந்நூலில் பதிவு செய்துள்ளார்.

இலங்கை அரசியலிலும் தொழிற்சங்கத் துறையிலும் ஈடுபட்ட பல மலையகத் தலைவர்கள் மத்தியில் நேர்ந்த முரண்பாடுகள், அதன் பெறுபேறுகள் பற்றியும் இந்நூல் பேசுகிறது.

மலையக கலை, இலக்கியத்தின் வளர்ச்சிக்கு உரமாகத் திகழ்ந்திருக்கும் சி.வி. வேலுப்பிள்ளை, சாரல் நாடன், தமிழோவியன், மல்லிகை சி. குமார் ஆகியோரின் படைப்பூக்கம் பற்றியும் இந்நூல் பேசுகிறது.

ஆளுமைகள் குறித்த நினைவுப் பதிகையை எழுதும்போது, வாசகர்களைத் தம்மோடு அழைத்துச்செல்லும் வகையில் செய்திகளை பகிரும் பண்பிலும் நூலாசிரியர் தனது ஆற்றலை வெளிப்படுத்தியிருக்கிறார்.

இலங்கை மலையகத்திற்கு அப்பால் மலையகம் குறித்த தேடுதலில் ஈடுபடுபவர்களுக்கு இந்நூல் உசாத்துணையாகவும் விளங்கும்.

இந்நூலுக்கு முன்னோட்டமாக நினைவோட்டக் குறிப்புகளை இலக்கிய ஆர்வலர் - கல்விப் பணிப்பாளர் சு. முரளீதரனும், தமது பாக்கியா பதிப்பகத்தின் ஊடாக இதனை வெளியிட்டிருக்கும் எழுத்தாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்பு திலகர் ஓர் உணர்வும் நினைவும் என்ற தலைப்பில் பதிப்புரையும் எழுதியிருக்கின்றனர். ■

# செய்தியாளர் தில்லைக்குப் பாராட்டு விழா

வீரகேசரியின் 50 ஆண்டுகாலம் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி பொன்விழாக் கண்ட வடமராட்சி எஸ். தில்லைநாதனுக்கு அல்வாய் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் வேணுவானனின் தலைமையில் நடத்திய பாராட்டு விழாவில் காலைக்கதிர் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ்.ஊடக அமையத்தின் ஆலோசகர் இ.தயாபரன், பத்திரிகையாளர் திருமதி சரஸ்வதி சுகிர்தசாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.









இக்பால் அலி

அனைத்துப் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவி நுஹா பின்த் ரிஸானா எழுதிய யூஜி என்ற நூல் வெளியீட்டு விழாவும் கொழும்பு வெல்லம்பிட்டிய என்ற இடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் செய்தி சேகரிப்புக்காகச் சென்ற வேளையில் இந்நூல் கையில் கிடைக்கப் பெற்றது. இந்நூலின் பிரதியை நூலாசிரியரிடமிருந்து முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன் வாங்கி எனக்கு அன்பளிப்புச் செய்தார். அத்துடன் நூல் பற்றிய மதிப்பீட்டை எழுதுமாறும் வேண்டிக் கொண்டார்.

இந்நூல் பல்கலைக்கழக நுழைவு கிடைத்த போதிலும் சில முஸ்லிம் பெண் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்து அவர்களுடைய கல்வி வாழ்வுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் மனோ நிலையில் உள்ள பெற்றோருக்கும் பகிடிவதை போன்ற காரணங்களால் பல்கலைக்கழகம் செல்லாமல் கல்வியை இடைநடுவில் விடும் பெண் பிள்ளைகளுக்கும் பல்கலைக்கழக வாழ்வியல் முறை பற்றி எல்லாம் ஒரே பார்வையில் அறிந்துகொள்ள முயல்பவர்களுக்கு ஒரு கைந்நூலொன்றை எழுதியுள்ளார் கிழக்குப்




# முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் நூல்

> **ஒரு மாணவி புதிய அனுபவங்களோடு பல்கலைச் சூழலில் பழகவும் கற்றுக் கொள்ளவும்செல்லும்போது தன்சொந்த கலாசார விழுமியங்களை இறுகப் பற்றிக் கொள்வது மிகவும் இயல்பான விடயம். அதேநேரம் அந்தப் பல்கலைக்கழக சூழலில் பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் தன்மைகளைப் புரிந்து அதற்கேற்ப தன்னை இசைவாக்கம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனால் பல்கலைக்கழகம் நுழைந்த எந்த மாணவியாக இருந்தாலும் விரும்பியும் சரி விரும்பாவிட்டாலும் சரி பல்கலைக்கழக சூழலின் அடையாளங்கள் புதிய மாணவர்களின் மேல் கணிசமானளவு தடயம் பதிக்கும்.**

பல்கலைக்கழக மாணவி நுஹா பின்த் ரிஸானா.

"கர்ப்பமான விடியல் " என்னும் தலைப்பில் அமைந்துள்ள அக் கட்டுரையில் ஆரம்பத்தில் தாயைப் பிரிந்து தனித்து வாழ முற்படும் போது ஏற்படும் தாக்கம், அதற்கான மனப்பக்குவம், பெற்றோரின் கனவை நனவாக்குதல், புதிய சூழல், கால நிலை மாற்றங்கள், இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது பயணத்தில் கண்ணுற்ற விடயங்கள், பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்புக் கிடைத்தும் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட தம் சகோதரிகளது நிலை குறித்தும் நூலாசிரியர் தனக்குரிய பாணியில் எழுதியுள்ளார்.

ஒரு மாணவி புதிய அனுபவங்ளோடு பல்கலைச் சூழலில் பழகவும் கற்றுக் கொள்ளவும் செல்லும் போது தன் சொந்தக் கலாசார விழுமியங்களை இறுகப் பற்றிக் கொள்வது மிகவும் இயல்பான விடயம். அதேநேரம் அந்தப் பல்கலைக்கழக சூழலில் பல்கலைக்கழக மாணவ சமூகத்தின் தன்மைகளைப் புரிந்து அதற்கேற்ப தன்னை இசைவாக்கம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. இதனால் பல்கலைக்கழகம் நுழைந்த எந்த மாணவியாக இருந்தாலும் விரும்பியும் சரி விரும்பாவிட்டாலும் சரி பல்கலைக்கழக சூழலின் அடையாளங்கள் புதிய மாணவர்களின்மேல் கணிசமானளவு தடயம் பதிக்கும்.

ஒரு மாணவி எந்த அளவில் தம் வீட்டுச் சூழலில் வாழ்ந்து இருந்தாலும் தான் கல்வி பயிலும் பல்கலைக்கழக சூழலில் உள்ள மாணவர் சமூகத்தில் ஒன்றுபட்டு தன்னைப் பொருத்தி கலந்து கொண்டு வாழ்தல் என்பது அவசியம். ஒரு முஸ்லிம் பெண்மணி பல்கலைக்கழக சமூகத்துடன் கலப்பதால் அல்லது மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வதால் முழுமையாகத் தன் கலாசாரத்தில் இருந்து விலகிக் கொண்டதாகவோ அல்லது அடிப்படை சமூக அடையாளத்தை இழந்து விட்டதாகவோ நாம் கருத முடியாது. இங்கே எந்த மாணவியாக இருந்தாலும் தன்னுடைய தனித்துவமான கலாசாரத் தன்மையை பேணிக் கொண்டு தமது பல்கலைக் கழகச் சூழலில் தன்னைத் தக்க வைத்துக் கொண்டு கற்றல் செயற்பாடுகளை சுதந்திரமாகச் செய்ய முடியும் என்பதை நூலின் இரண்டாவது அத்தியாயத்தில் அமைந்துள்ள " வாழ்வியற் கலைக் கூடம்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள கட்டுரையில் எழுதப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல " பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியே வரும் போது சமூகம் வேண்டிநிற்கும் பெண் ஆளுமை வெறுமனே ஒரு புத்தமேடாக மட்டுமன்றி தேர்ச்சி பெற்ற வாழ்வியற்கலை நிபுணராகவும் இருக்க வேண்டும். வீட்டிற்கும் சமூகத்திற்கும் உற்சாகமும் துடிப்புமான பெண்களைத்தான் நிகழ்கால சமூகம் வேண்டி நிற்கிறது" (பக்கம் 09) என்று குறிப்பிட்டு எழுதும் ஆசிரியர் விடுதி வாழ்க்கை, விரிவுரைகளுக்குச் செல்லல், குறித்த நேரம், கண்ரீனில் சாப்பாட்டுக்காக வரிசையில் நிற்றல், விடுதியறை, நேரத்திற்கு இயந்திரமாக இயங்குதல், குளிப்பு, உடுதுணி கழுவுதல் போன்ற பல அம்சங்களை நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார்.

அரசியல்வாதிகள் ஆட்சிப் பீடம் ஏறுவதற்காகவும் தங்களுடைய இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும் பல்வேறு வகையிலான இனவாத ஒடுக்குமுறைகளைக் கையாண்டு வருகின்றார்கள். இலங்கை, இந்தியா உட்பட சில நாடுகளில் ஹிஜாப்புக்கு எதிராகச் சிலர் குரல் கொடுக்கின்றனர். ஆனால், பெரும்பாலானவர்கள் முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவாகவுள்ளனர்.

அரசியல் இன்று மனிதனை நிம்மதியாக வாழ விடுவதில்லை. மனிதன் மனிதனை சாப்பிடத் தூண்டும் அரசியல் கலாசாரம்தான் போதிக்கப்படுகின்றது. அரசியல் தேவையைக் கருத்திற் கொண்டு எல்லாம் நடக்கின்றன. உணர்வுகளைத் தூண்டும் உடைகளுக்குத்தான் நாகரிகம் என்று சொல்லுமளவுக்கு நாகரிகம் வளர்ந்துள்ளது. ஆனாலும், இலங்கையில் குறிப்பாக கிழக்குப் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய பல்கலைக்கழகங்களில், பள்ளிக் கூடங்களில் தமது சமூகம் சார்ந்த கலாசார ஆடையை அடையாளப்படுத்தி அதனுடன் தம்மை இணைத்துக் கூட்டாகவே வாழும் சூழல் இங்கு இயல்பாகவே நடந்து வருகின்றது.

நூலாசிரியரின் மூன்றாவது "மறைத்தல்" கட்டுரையில் "உடலை மறைத்தல் என்பது மட்டுமன்றி தீய சிந்தனைகள், எண்ணங்களைத் தவிர்த்து தன்னை மறைத்துக் கொள்வதும் முக்கிய அம்சமாக இருக்கிறது. சீரான எண்ணங்கள், மற்றும் சரியான சுயதெரிவு என்பவற்றால் மறைத்தலில் தவறிப்போக வாய்ப்பில்லை" (14 பக்கம்) என்று எழுதும் நூலாசிரியர், தான் அணியும் ஹிஜாப் பற்றி விளக்கத்தை மாற்று மத சகோதரிகளுக்குத் தெளிவுபடுத்தல், பல்கலாசாரத்தையும் சேர்ந்தவர்கள் சங்கமிக்கும் பல்கலைக்கழகத்தில் கலாசார பிறழ்வு ஏற்பட இடமில்லை என்று முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை தொடர்பில் இக் கட்டுரையில் தெளிவுற எடுத்துரைத்துள்ளார்.

■

# மரபணுக் கோளாறால் உருவாகும்...

(09 ஆம் பக்கத்தொடர்ச்சி)

கொண்ட குழந்தை பிறப்பதற்கான அபாயம் இருப்பதை அறிந்துகொள்வது அவசியமாகும்.

காதல் திருமணமோ, பேச்சுத் திருமணமோ எதுவானாலும் இருவரும் தலசீமியா காவிகள் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். யாராவது ஒருவர் காவியாக இருப்பதில் பிரச்சினை இல்லை. பெரும் தலசீமியா நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையில் இரத்தப் புரத்தை 10-12 பஃஊடல் வைத்திருக்க, சிவப்பணுக்கள் செறிந்த இரத்த மாற்றத்தைத் தொடர்ந்து Blood transfusion செய்வது அவசியம். நோயின் கடுமை, மண்ணீரலின் அளவு, உடலேற்புத்தன்மை போன்ற பிற பல காரணிகளைப் பொறுத்தே இரத்தமாற்றத்தின் கால இடைவெளி நிர்ணயிக்கப்படுகிறது.

**இரத்த மாற்றம் இல்லாமல் வேறு சிகிச்சைகள் உண்டா?**


ஆம், குறைபாடுள்ள இரத்த உற்பத்தி உயிரணுக்களை மாற்றி, அதற்குப் பதிலாக இன்னொருவரிடம் இருந்து ஆரோக்கியமான இரத்த உற்பத்தி உயிரணுக்கள் வைக்கப்படுகின்றன. இன்னொருவர் என்பவர் பொதுவாக HLA பொருத்தமுடைய (மாற்றத்திற்குத் தகுந்த மரபுப்பொருத்தம்) 'குறைபாடுடைய மரபணுக்கள் அற்ற' சகோதரராக அல்லது சகோதரியாக இருக்க வேண்டும். உறவுமுறை அற்ற HLA பொருத்தம் கொண்ட BMT (எலும்பு மச்சை மாற்றம்) செய்யலாம். ஆனாலும், HLA பொருத்தம் கொண்ட உடன் பிறப்புகளிடம் இருந்து BMT மாற்றம் செய்வதே சிறப்பானது.

எலும்பு மச்சை மாற்றம் செய்து கொண்ட நோயாளிகளுக்கு அதற்குபின், மேலும் இரத்தம் பாய்ச்ச வேண்டிய தேவை இருக்காது. அவர்கள் சாதாரண மனிதர்கள் போன்று உயிர்வாழலாம். குழந்தைப் பருவத்தில் உடலில் இரும்புசத்து அதிகரிப்பதற்கு முன் இந்த சிகிச்சையை BMT செய்வதே சிறந்தது.

**இந்தநோய் வராமல் பாதுகாப்பதற்கான ஆலோசனை என்ன?**

இது முக்கியமான கேள்வியாகும். வருமுன் காப்பதே சிறந்தது. உங்களுக்கோ அல்லது உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ தலசீமியா இருந்தால் திருமணம் செய்வதற்கு முதல், குடும்பத்தைப்பற்றி திட்டமிடுவதற்கு முன்னால் உங்கள் வைத்தியரோடு ஆலோசிப்பது மிகவும் அவசியமாகும். குறிப்பாக தலசீமியா காவியாக இருப்பவர்கள் இன்னும் ஒரு தலசீமியா காவியை கரம்பற்றாமல் இருப்பது சாலச் சிறந்தது.

குடும்பத்தில் அல்லது உறவினர்கள் மத்தியில் தலசீமியா நோய் இல்லாத ஏனையவர்கள் திருமணம் செய்வதற்கு முதல், பெண் மாப்பிள்ளை பார்கின்றபோது அவர்களுக்கு FBC பார்த்துக்கொள்வது நல்லது. ■




# முந்தினம் பார்த்தேனே



**மௌனகுரு @ subaji**

காலம் கடந்துவிட்ட பிறகு
கடிகாரங்களை நோக்கிக் காத்திருப்பதில்
பயனேதும் இல்லை



**பாண்டி பிரகாஷ் @ pandi prakash**

பெரிதாக ஏதொன்றையும் நீங்கள்
செய்யத் தேவையில்லை
சிலரிடமிருந்து விலக;
நல்லதாக நான்கு அறிவுரை
சொல்லுங்கள் போதும்



**சிதறல்கள் @ mujib989898**

கேள்வி கேட்கிற குணம்
பிடித்ததை மட்டுமே தேர்ந்தெடுக்கும்



**தீந்தமிழன் @ prabha**

மழைதான் அதன் வேண்டுதல்
பனித்துளி இலையின் இரக்கம்





**lakshmivva @ lakshmivva1**

ஒரு பேரிளம் பெண்ணைப்
போலிருக்கிறது அந்தமரம்
அதைக் குழந்தைபோல
ஆக்குகிறது அணில் ஒன்று






**Aadhavan Dheetchanya**

புத்தக விலையெல்லாம் ரொம்ப அதிகமாயிருக்கே!
– விலை குறைவா இருக்கிற
புத்தகங்கள்
என்னென்ன வாங்கியிருக்க?



**Ag sivakumar**

இரை – வெப் சீரிஸ்
கொட்டாவி விட வைத்துள்ளார்கள்
எந்த சுவாரஸ்யமும் இல்லை
நேரத்தைக் கணிசமாக
வீணடிக்க விரும்பினால்
அவசியம் பாருங்கள்

# உலக சம்பியனைத் தோற்கடித்த பாலகன்



சென்னையைச் சேர்ந்த பிரக்ஞானந்தா உலக சாம்பியன் மெக்னஸ் கார்ல்சனைத் தோற்கடித்து அசத்தியுள்ளார்.

ஏர்திங்ஸ் என்ற ஆன்லைன் செஸ் சம்பியன்ஷிப் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் இந்தியா சார்பில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 16 வயதான பிரக்ஞானந்தா பங்கேற்றுள்ளார். இவர் 8 ஆவது சுற்றில் உலகின் முதல் நிலை செஸ் வீரரான மெக்னஸ் கார்ல்சனை எதிர்த்து விளையாடினார்.

இந்தப் போட்டியில் ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடிய பிரக்ஞானந்தா கறுப்பு நிற காய்களில் நன்றாக நகர்த்தல்களை மேற்கொண்டார். டார்ஸ்ச் வகை கேமைப் பயன்படுத்திய பிரக்ஞானந்தா வெறும் 19 நகர்த்தலில் உலகின் நம்பர் ஒன் வீரரான மெக்னஸ் கார்ல்சனை வீழ்த்தி அசத்தினார். இதன்மூலம் முதல் முறையாக உலக சம்பியன் மெக்னஸ் கார்ல்சனை வீழ்த்தியுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த சிறுவன் பிரக்ஞானந்தா. இவர் சென்னையின் பாடியில் பிறந்தவர். இவரும் இவருடைய அக்கா வைஷாலியும் சிறு வயதில் அதிகமாகத் தொலைக்காட்சியைப் பார்த்து வந்துள்ளனர். அப்போது இவர்களுடைய தந்தை ரமேஷ்பாபு மற்றும் தாய் நாகலட்சுமி எப்படி இவர்களின் கவனத்தை மாற்றுவது என்று நினைத்துள்ளனர். அந்த சமயத்தில் தீவிர செஸ் ரசிகரான ரமேஷ் பாபு தன்னுடைய மகள் வைஷாலியை முதலில் செஸ் பயிற்சிக்குச் சேர்த்துள்ளார்.

அக்கா வைஷாலி செஸ் பயிற்சி வகுப்பிற்குச் செல்வதைப் பார்த்த பிரக்ஞானந்தாவிற்கு சிறுவயது முதல் செஸ் விளையாட்டில் ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இதனால் அக்காவிடம் இருந்து நான்கு வயது முதல் செஸ் கற்றுக் கொள்ள தொடங்கினார். 5 வயது முதல் செஸ் போட்டிகளில் பங்கேற்று வந்தார். தன்னுடைய 7 வயதில் இவர் 8 வயதுக்குட்பட்டோருக்கான உலக சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றார். அதன்பின்னர் 10 வயதில் சர்வதேச செஸ் மாஸ்டர் பட்டத்தை வென்றார். இதன்மூலம் இளம் வயதில் சர்வதேச செஸ் மாஸ்டர் பட்டத்தை வென்று அசத்தினார்.

இதைத் தொடர்ந்து 12 வருடம் 10 மாதம் 13 நாட்களில் கிராண்ட்மாஸ்டர் பட்டம் வென்று அசத்தினார். இதன்பின்னர் 2019 ஆண்டு நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக யூத் செஸ் சம்பியன்ஷிப் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த 14 வயது பிரக்ஞானந்தா சம்பியன் பட்டத்தை வென்று அசத்தினார். அத்துடன் 2019 டிசம்பர் மாதம் செஸ் தரவரிசையில் 2600 புள்ளிகளைக் கடந்த முதல் இந்திய வீரர் என்ற சாதனையையும் பிரக்ஞானந்தா படைத்திருந்தார்.

ஒருகட்டத்தில் இவர் மற்றும் இவருடைய அக்கா வைஷாலியின் செஸ் பயிற்சிக்கு பெற்றோர்களால் பணம் செலுத்த முடியாத சூழல் உருவாகியது. அப்போது ஒரு தொழிலதிபர் ஒருவர் அவர்களுக்கு உதவி செய்தார். அதேபோல் பிரக்ஞானந்தாவின் பள்ளி அவருக்கான பள்ளிக் கட்டணம் மற்றும் வருகை பதிவு ஆகியவற்றை தளர்த்தியது. இதனால், எந்தவித சிக்கலும் இல்லாமல் பிரக்ஞானந்தா தொடர்ந்து செஸ் விளையாட்டில் கவனம் செலுத்தி வருகிறார். இவர் எப்போதும் அதிகம் பேசுவதில்லை. அவருக்குப் பதிலாக அவருடைய ஆட்டம் தான் அதிகம் பேசும். தி.நகரிலுள்ள பிரபல செஸ் பயிற்சியாளர் ஆர்.பி. ரமேஷின் மாணவர்களில் இவரும் ஒருவர். தற்போது தன்னுடைய 16 வயதில் உலக சம்பியன் மெக்ஸ் கார்ல்சன் அசுர வளர்ச்சி கண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# ஐ.பி.எல் அணிக்கு பயிற்சியாளராகிறார் ஷேன் வட்சன்



அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் ஆல் ரவுண்டரும் ஐ.பி.எல் தொடரில் சென்னை அணிக்காக விளையாடிய ஜாம்பவான் வீரரான ஷேன் வட்சன் 2008 ஆம் ஆண்டு முதல் கடந்த 2020 ஆம் ஆண்டு வரை 145 ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடி 3874 ஓட்டங்களை அடித்துள்ளார். அதோடு ஐ.பி.எல் தொடரில் பல விக்கெட்டுகளையும் வீழ்த்தி உள்ள மிகச் சிறந்த ஆல்ரவுண்டரான ஷேன் வட்சன் 2020 ஆம் ஆண்டு வரை சென்னை அணிக்காக விளையாடி இருந்தார். அதன் பிறகு ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்த அவர் மீண்டும் எப்போது ஐ.பி.எல் தொடரில் பணியாற்றுவார் என்பதே அனைவரது எதிர்பார்ப்பாகவும் இருந்தது. 40 வயதான ஷேன் வட்சன் இரண்டு முறை ஐ.பி.எல் தொடரை கைப்பற்றிய சம்பியன் அணியில் முக்கிய வீரராக இருந்துள்ளார்.

2008 ஆம் ஆண்டு ராஜஸ்தான் ராயல்ஸ் அணியிலும், 2018 ஆம் ஆண்டு சென்னை சூப்பர் கிங்ஸ் அணியிலும் அவர் சம்பியன் பட்டத்தை கைப்பற்றும் போது முக்கிய அங்கமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் கடந்த 2020 ஆம் ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்ற ஐ.பி.எல் தொடரின்போது படு மோசமான தோல்வியை சி.எஸ்.கே அணி சந்தித்த வேளையில் அந்த ஆண்டுடன் ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வு அறிவித்த ஷேன் வாட்சன் மீண்டும் எப்போது ஐ.பி.எல் தொடரில் பணியாற்றுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

டெல்லி கேப்பிடல் அணியின் பயிற்சியாளராக இருக்கும்பொண்டிங் தலைமையில் அந்த அணி சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக, கடந்த 2020 ஆம் ஆண்டு டெல்லி அணி இறுதிப் போட்டி வரை முன்னேற பொண்டிங்கின் பயிற்சி ஒரு முக்கிய காரணமாகப் பேசப்பட்டது. இந்நிலையில் டெல்லி அணியின் துணை பயிற்சியாளராக இருந்த முகமது கைஃப் அந்தப் பதவியில் இருந்து வெளியேறி உள்ளதால் தற்போது அவரது இடத்திற்கு வட்சன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்திய அணியின் முன்னாள் வீரர் அகார்கரையும் டெல்லி பந்துவீச்சு பயிற்சியாளராக மாற்ற முயற்சித்து வருவதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்த பின்னர் மீண்டும் வட்சன் தற்போது ஐ.பி.எல் களத்திற்குத் திரும்பியுள்ளது ரசிகர்கள் அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

## பஞ்சாப் அணிக்கு கப்டனாகிறார் மயங்க் அகர்வால்

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி தொடரில் பஞ்சாப் அணிக்குக் கடந்த சீசன்களில் லோகேஷ் ராகுல் கப்டனாக செயற்பட்டார். இந்த ஆண்டுக்கான ஐ.பி.எல். போட்டியில் புதிய வரவாக வந்துள்ள லக்னோ அணிக்கு லோகேஷ் ராகுல் சென்று விட்டார். அவர் அந்த அணிக்குக் கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்கு யாரை நியமிப்பது தொடர்பாக அணி நிர்வாகம் ஆலோசித்து வந்தது. இதில் அந்த அணியின் தொடக்க வீரரான மயங்க் அகர்வால் கப்டனாக நியமிக்கப்பட உள்ளார் என்ற தகவல் வெளியாகி இருக்கிறது.

பஞ்சாப் அணி நிர்வாகம் மயங்க் அகர்வாலைத் தக்க வைத்துக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. பஞ்சாப் அணி கப்டனாக மயங்க் அகர்வால் இந்த வார இறுதியில் அறிவிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பஞ்சாப் அணியில் ஷிகர் தவான், ஜானி பேர்ஸ்டோவ், ரபடா உள்ளிட்ட வீரர்கள் உள்ளனர். இதில் ஷிகர் தவான் கப்டனாக நியமிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி இருந்தது. ஆனால், மயங்க் அகர்வால் பஞ்சாப் அணியில் கடந்த சீசன்களில் சிறப்பான ஆட்டங்களை வெளிப்படுத்தி உள்ளதால் அவருக்கு கப்டன் பொறுப்பு வழங்கப்பட இருக்கிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு ஐ.பி.எல் போட்டிகளில் அறிமுகமான மயங்க் அகர்வால் இதுவரை 100 போட்டிகளில் விளையாடி இருக்கிறார். ■

# நீச்சல் தடாகத்தைப் பார்வையிட்ட தலைவர்



சர்வதேச நீச்சல் சம்மேளனத்தின் (FINA) தலைவர் ஹுசைன் அல் முஸல்லம், பர்மிங்காம் 2022 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்காகக் கட்டப்பட்டு வரும் சாண்ட்வெல் நீர்வாழ் மையத்திற்குச் சென்றுள்ளார். விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல், டைவிங் மற்றும் பாரா நீச்சல் ஆகிய அனைத்தும் 11 நாட்களுக்கு நடைபெறும் ஒரே புதிய மைதானமாக இந்த மையம் இருக்கும்.

“அத்தகைய வருகையைப் பெற்றதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன், ஏனெனில் இது நீர்வாழ் விளையாட்டுகளுக்கு கூடுதல் மதிப்பு மற்றும் குறிப்பாக பர்மிங்காம் மற்றும் பொதுவாக இங்கிலாந்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்” என்று முஸல்லம் கூறினார்.


பர்மிங்காம் 2022 பாரம்பரியத்தின் முக்கிய அம்சமாக இந்த இடம் கட்டப்படுகிறது, விளையாட்டுகளுக்குப் பிறகு பொதுமக்கள் அதைப் பயன்படுத்த முடியும்.

இது 200,000 ரைல்ஸ்களால் ஆனது மற்றும் சுமார் 5,000 இருக்கைகள் உள்ளன, 1,000 இருக்கைகள் நிரந்தரமாக இருக்கும். வேறு எந்த இடத்தையும் விட சாண்ட்வெல் நீர்வாழ் மையத்தில் அதிக பதக்கங்கள் நீச்சல் மற்றும் பாரா நீச்சல் போட்டி ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 3 வரை நடைபெற உள்ளது, டைவிங் செட் ஆகஸ்ட் 4 முதல் 8 வரை நடைபெறும்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் ஜூலை 28 ஆம் திகதி தொடங்கி ஆகஸ்ட் 8 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. ■




# தீக்குச்சிகளின் உரையாடல்



இந்தியாவின் சிவகாசியிலுள்ள தீப்பெட்டித் தொழிற்சாலையின் இயந்திரத்திலிருந்து கரிய நிறத் தலையுடனும் வெள்ளை உடலுடனும் ஒரு சிறிய உருவம் பிறந்தது. ஆ! அது ஒரு தீக்குச்சி. அது தன் கண்களைத் திறந்து அங்கிருந்த மனிதர்களையும் இயந்திரங்களையும் ஆச்சரியத்தோடு பார்த்தது. சிறிது நேரத்தில் நகர்ந்து கொண்டே ஒரு பெட்டியினுள் புகுந்தது. அதனுள் நிறைய நண்பர்கள் இருந்தனர். அந்தத் தீக்குச்சி அருகிலிருந்த தீக்குச்சியோடு பேசத் தொடங்கியது. “இந்த மனிதர்கள் நம்மை விட எவ்வளவு உயர்ந்தவர்கள். நமக்கு ஒரு தலையும் உடலும் மட்டுமே இருக்கின்றன. அவர்களுக்கு எத்தனை உறுப்புகள்? அவர்களோடு ஒப்பிடும் போது நாம் எவ்வளவு சிறிய அற்புதமான பொருள்கள்?” என்று கூறியது. “இல்லை! இல்லை! நாம் ஒரு வகையிலே அவர்களை விட உயர்ந்தவர்கள் தான்!” என்று அருகிலுள்ள தீக்குச்சி பதில் கூறியது. “எப்படி” என்று புதிய தீக்குச்சி கேட்டது. “இங்கே வேலை செய்யும் டேவிட் தேவாலயத்திற்கு மட்டுமே போவார். சலீம் பள்ளிவாசலுக்கு மட்டுமே போவார். குமரன் கோவிலுக்கு மட்டுமே போவார். ஆனால், நாம் தேவாலயத்தில் மெழுகுவர்த்தியை ஏற்றவும் பள்ளிவாசலில் சாம்பிராணி கொளுத்தவும் கோயிலில் கற்பூரம் ஏற்றவும் தயாராக உள்ளோம். எங்களைப் போல அவர்கள் எப்போது வேறுபாடு பார்க்காமல் ஒன்றுபட்டு வாழ்வார்களோ... அப்போதுதான் எங்களை விட உயர்ந்தவர்கள்” என்று கூறியது.

**ஜெ.ஜெயசுவேதா**
தரம்-07
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை



# மாசு விரட்டும் ஒலி பீரங்கி!

போலந்து முழுதும் பனிபொழியும் மாதங்கள் அதிகம். அதிலும் ஆண்டுக்குச் சில மாதங்களாவது புகை மாசு மற்றும் பனி ஆகியவை ஏற்படுத்தும் மூட்டம், நகர்ப்புறப் போக்குவரத்தையே நிறுத்தும் அளவுக்கு இடர் தரக்கூடியது.

இந்தச் சவாலுக்குத் தீர்வாக ஒலி பீரங்கிகளைப் பயன்படுத்தலாம் என்கின்றனர் போலந்து விஞ்ஞானிகள். முதற்கட்டச் சோதனையாக, கல்வாரியா ஜெப்ரிடோவ்ஸ்கா என்ற நகரில், விஞ்ஞானிகள் ஒலி பீரங்கி சோதனையை நடத்தி வெற்றி கண்டுள்ளனர்.

தலைகீழாகக் கவிழ்த்தப்பட்ட கூம்பு வடிவிலான ஒரு கருவிக்குள், காற்று மற்றும் அசிட்டலின் ஆகியவை கலந்த கலவை எரியூட்டப்படும். இதனால், வெடிச்சத்தத்துடன் கூம்புக்குழாய் வழியே அதிர்வலை, வான் நோக்கி வெளியேறும். இந்த அதிர்வலையின் தாக்கத்தில், காற்றில் உள்ள கனமான மாசுத் திவலைகளும் சேர்ந்து சில மீற்றர் உயரத்திற்குத் தள்ளப்படும்.

ஒலி பீரங்கியை ஒரு மணி நேரம் பயன்படுத்தினால், கி.மீ, சுற்றளவுக்கு மூட்டம் விலகிக் காட்சிகள் தெளிவாகத் தெரியும். இதனால், தரை மட்டத்தில் 30 சதவீதம் வரை காற்றில் மாசுத் திவலைகள் குறையும்.

ஒலி பீரங்கி ஏற்படுத்தும் காட்சித்தெளிவு அதிகபட்சம் 3 மணி நேரம் வரை நீடிக்கும். ஒலி பீரங்கியின் சில வினாடி நேர வெடிச்சத்தம் மட்டும்தான் இதில் உறுத்தலான அம்சம். ஆனாலும் அது மாசை விரட்டுவதால் அதைப் பொறுத்துக் கொள்ளலாம் என, போலந்து மக்கள் கருதுகின்றனர். ஒலி அலையால் மாசை விரட்டலாம் என்பது விந்தை தான்.



# நம் தேவதை

வானில் இருந்து வையகம் வந்த தேவதை
தனக்கென புது உருவம் பெற்ற தேவதை
யாருக்கும் அஞ்சாத அரசி அவள்
யாரையும் கெஞ்சாத இளவரசி அவள்
புதுயுகம் படைத்திடுவாள் அவள் மனதில்
புன்னகையே வார்த்தையாகும் சில கணத்தில்
யாரெனத் தேடிடவே அவள் உருவம்
யுகம் யுகமாய் வாழ்ந்திடுவாள் நம் மனதில்

**மம்மு**

# நட்பின் பரிசு



ஆறு நண்பர்கள் ஓர் அடர்ந்த காட்டுக்குள்ளே சுற்றுலாப் பயணம் சென்றார்கள். காட்டின் உள்ளே ஓரிடத்தில் செடிகொடிகளுக்குள் மான் ஒன்று சிக்கித் தவித்தது. இரு நண்பர்கள் அதைக் கண்டு கொள்ளாமல் சென்று விட்டார்கள். ஆனால், ஏனைய நான்கு பேரும் அந்த மானைச் செடிகொடிகளுக்குள் இருந்து விடுவித்தனர். அப்போது அந்த மான் தேவதையாக மாறியது. “என்னைக் காப்பாற்றியதற்கு நன்றி” எனக் கூறியது. அவர்களிடம் இரண்டு சாவிகளைக் கொடுத்தது. “கிழக்குப் பக்கமாகச் சென்றால் பாழடைந்த மாளிகை ஒன்று வரும். அங்கே தங்கப் புதையல் உள்ளது. நல்ல மனம் கொண்டவர்களுக்கே அப்புதையல் கிடைக்கும்” என்று கூறி விட்டுத் தேவதை மறைந்தது.

நான்கு நண்பர்களும் கிழக்கு நோக்கிச் சென்றனர். பாழடைந்த மாளிகையை அடைந்தனர். பூட்டியிருந்த மாளிகையை தேவதை கொடுத்த சாவி ஒன்றைக் கொண்டு திறந்து உள்ளே சென்றனர். புதையலைத் தேடினர். அப்போது ஒருவன் கிடங்கினுள் விழுந்து விட்டான். “இது ஆபத்தான கிடங்கு இவனைக் காப்பாற்ற முயற்சி செய்தால் நாமும் ஆபத்திலே சிக்குவோம்” எனக் கூறி இருவர் அங்கிருந்து வெளியே ஓடிச் சென்றனர். ஆனால், ஒருவன் மட்டும் நண்பனைக் காப்பாற்ற எண்ணினான். மாளிகை எங்கும் தேடி கயிற்றைக் கண்டு பிடித்தான். கயிற்றின் உதவியோடு கிடங்கினுள் இறங்கினான். கிடங்கினுள் நண்பர் பெட்டி ஒன்றின் மீது அமர்ந்திருந்தான். தேவதை கொடுத்த மற்றைய சாவியின் உதவியோடு பெட்டியைத் திறந்தனர். உள்ளே ஏராளமான தங்கக் கட்டிகள் இருந்தன. தங்கக் கட்டிகளை எடுத்துக் கொண்டு கயிற்றின் உதவியோடு மேலே ஏறி வந்தனர். நல்ல மனதும் நட்பின் துணையும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கக் காரணமானது.

**மு.கோகனன்**
தரம்-07
யாழ். இந்துக் கல்லூரி



**சிறுவர் பகுதிக்கான உங்கள் சொந்த ஆக்கங்களை எங்களுக்கு உடனே அனுப்பி வையுங்கள்**

**தீம்புனல்**
கனகசபை கட்டடத் தொகுதி
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 26.02.2022 அன்று வெளியிடப்பட்டது.